RE/MAX Realtron BLUE FORCE
TEAM BLUE FORCE
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710

மலர்:- 29, 10 பெப்ரவரி 2023 இதழ்:- 42

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! பெப்ரவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!


## உரிமைகளுக்காக மட்டுநகரில் திரண்ட தமிழர்கள்! தன்னாட்சி உரிமையை அங்கீகரியென மட்டுநகர் பிரகடனம்!



வட்டுக்கோட்டைத் தீர்மானம், பொங்கு தமிழ் பிரகடனம், திம்புப் பேச்சுவார்த்தை என்பவற்றின் மூலம் வலியுறுத்தப்பட்ட, தமிழ் மக்களின் தன்னாட்சி, சுயநிர்ணயம், இறைமை என்பன ஏற்றுக் கொள்ளப்பட்டு, தமிழ் மக்களிற்கான இறுதித் தீர்வு சர்வதேச சட்டங்களின் பிரகாரம், சர்வதேச நாடுகளின் மத்தியஸ்தத்துடன், தமிழ் மக்கள் தம்மைத் தாமே ஆளக்கூடிய வகையில் அமைய வேண்டும் என(4ம் பக்கம் பார்க்க)

## வீதியில் இறங்கிய பிக்குகள்! மீண்டும் திரும்பும் வரலாறு?

கோட்டா கோ ஹோம் என்ற போராட்டத்தின் உக்கிரத்தினால், கடந்த வருடத்தில் முடங்கிப் போயிருந்த தென்னிலங்கை, இப்போது 13 வேண்டாம் என்ற போராட்டங்களால் முடங்கிப் போயிருக்கின்றது. அரசியலமைப்பில் (18ம் பக்கம் பார்க்க)





## தமிழர் இனப்பிரச்சனைக்கு தீர்வு வழங்கும் முயற்சியை கைவிட மாட்டேன்!

### பாராளுமன்ற கொள்கைப் பிரகடன உரையில் ரணில்

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan LL.B
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance
100% Refund

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
24/7 365
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE
TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

“ஒரு முகவர் இரு சேவைகள்”
“One Broker Two Services”
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
MORTGAGE ALLIANCE

THINKING OF

# SELLING OR BUYING A HOME?



**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

**Team SIVA**
WILL BRING THE BEST RESULTS!

**Piravien Siva**
B.Comm. Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com




20 Years Real Estate Experience


HomeLife Today Realty Ltd.,
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply

HOMELIFE HIGHER STANDARDS

Bus: 416.298.3200
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P 4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT


• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY


**Kennedy / Eglinton**

Scarborough $499,000
Bedrooms: 3 Washrooms: 2
Very Close To Kennedy Subway

**Mccowan & Finch**

Scarborough $949,999
Bedrooms: 3+1 Washrooms: 3
Located Prestigious Neighbotrhood

**Mount Albert / York Durham**

East Gwillimbury $985,000
Bedrooms: 3+2 Washrooms: 4
Open Concept, Huge Backyard

**Simco St N/ Darcy**

Oshawa $998,000
Bedrooms: 3+1 Washrooms: 4
Updated Open Concept Kitchen

**Mississauga /Sandalwood**

Brampton $677,000
Bedrooms: 2 Washrooms: 2
Open Concept Kitchen

**Line 6 & 10th Sdrd**


Bradford $999,900
Bedrooms: 5+1 Washrooms: 4
Corner Lot, Main Floor With Office

**Markham/Denison**

Markham $1,850,000
Bedrooms: 4+2 Washrooms: 4
Lots Of Upgrades, Hardwood Flr


**Meadowvale / 401**


Scarborough $1,899,999
Bedrooms: 4+3 Washrooms: 5
Stunning Top To Bottom Renovations

**Eglinton & Mccowan**

Scarborough $580,000
Bedrooms: 3+1 Washrooms: 2
Location Location Location!!!

**Birchmount & Enterprise**

Markham $699,900
Bedrooms: 1+1 Washrooms: 1
Modern Open Concept Kitchen

**Simcoe & Ritson**

Oshawa $850,000
Bedrooms: 3+3 Washrooms: 2
Perfect For Investors & New Owners

**Danforth Ave**


Toronto $$$,$$$
Food Restaurant on A Busy Prime
Location Fronting on Danforth Ave

**Mclaughlin Rd. & Wanless Dr.**


Brampton $3,500
Bedrooms: 4 Washrooms: 4
Freehold Townhouse

**Warden & St. Clair**


Toronto $3,200
Bedrooms: 3 Washrooms: 3
Three Year old New Townhouse

**Bathurst / Forth York**


Toronto $2,375
Bedrooms: 1 Washrooms: 1
Condo In The Waterfront Area

**Eglington & Victoria Park**


Scarborough $1,500
Bedrooms: 2 Washrooms: 1
Basement for Rent

**PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!**

EELANADU
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

**வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!**

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL
2425 EGLINTON AVE EAST
(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET
5635 FINCH Ave
(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART
4A WADE AVE
TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT
595 PARLIAMENT ST
TORONTO**

**5 UTHAYA SUPER MARKET
5010 STEELES AVE WEST
ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# பயங்கரவாதத்தை வளர்க்க பாகிஸ்தான் முயல்கிறதா? கிழக்கில் பரபரப்பை ஏற்படுத்தும் பிரசுரங்கள்! மூவின சமூக மக்களும் அச்சத்தில்!

கிழக்கு மாகாணத்தில் மட்டும் ஆயிரம் இஸ்லாமிய இளைஞர்களுக்கும் மேல் பாகிஸ்தான் தூதரகம் ஊடாக வழங்கப்படும் புலமைப்பரிசில் தொடர்பில் பலத்த சந்தேகங்கள் எழுப்பப் பட்டுள்ளன. இது தொடர்பில் பல கேள்விகளை எழுப்பும் விதமான பிரசுரங்கள் கிழக்கு மாகாணத்தில் பரவி வருகின்றன.

இந்த விடயம் முஸ்லிம், தமிழ்,சிங்கள மக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியையும் அச்சத்தையும் கிளப்பியுள்ளது. இஸ்லாமிய அடிப்படைவாதம் மற்றும் பயங்கரவாதத்தால் அதிக தாக்கத்துக்கு உள்ளான நாடாக பாகிஸ்தான் அறியப்படுகின்றது. தவிர, தனது அயல் மற்றும் எதிரி நாடான இந்தியா மீது பயங்கரவாதத் தாக்குதல்களை இந்த நாடு ஊக்குவிக்கிறது என்ற குற்றச்சாட்டும் அந்த நாட்டின் மீது ஏற்கனவே உள்ளது.

இத்தகைய சூழ்நிலையிலேயே கிழக்கு மாகாணத்தில் இஸ்லாமிய இளைஞர்களை மட்டும் அடிப்படையாகக் கொண்டு இலங்கைக்கான பாகிஸ்தான் தூதரகத்தால் வழங்கப்படும் இந்தப் புலமைப்பரிசில் தொடர்பாக பல கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன.

மாணவர்களை இலகுவாக மூளைச் சலவை செய்து இலங்கையில் மதம், இன நல்லிணக்கம் – உறவுகளுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தப்படலாம் என்ற எச்ச ரிக்கையும் பிரசுரங்கள் மூலம் வெளியிடப்பட்டுள்ளது. மேலும், மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்குவதில் இலங்கையிலுள்ள பாகிஸ்தான் தூதரகத் துக்கு வழங்கப்பட்டுள்ள எல்லையற்ற அதிகாரமும் இதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 18மில்லியன் டொலர் – சுமார் 663 கோடி இலங்கை ரூபாயும் பலத்த சந்தேகங்களை எழுப்பி உள்ளதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, பாகிஸ்தான் ஆண்டுதோறும் 2 ஆயிரம் மாணவர்களுக்கு புலமைப்பரிசில்களை வழங்குகிறது. இந்தப் புலமைப் பரிசில்கள் மாதம் 50ஆயிரம் ரூபாய் பெறுமதி வாய்ந்தவையாகும். இஸ்லாமிய இளைஞர்கள் மாத்திரமே இதற்காக தேர்வு செய்யப்படுகிறார்கள் என்பதுடன், இது தொடர்பில் பகிரங்கமாக தகவல்கள் அளிக்கப்படுவதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது

# பௌத்த மகாசங்கத்தினரை மீறி எதுவும் செய்ய முடியாது! ரணிலிக்கு எச்சரிக்கை விடுத்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரி



மகாசங்கத்தினரை மீறி சிங்கள பௌத்த சக்திகளை மீறி இந்த நாட்டில் எதுவும் செய்ய முடியாது. அதை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று 09 பெப் 2023 நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் இடம் பெற்ற சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டை மீட்டெடுக்க அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணையுமாறு பல தடவைகள் கேட்டுக் கொண்டுள்ளார்.

நேற்றும் அவர் தனது உரையில் கட்சிகளுக்கு அழைப்பு விடுத்திருந்தார். கொரோனா காலத்திலும் சரி, அதற்குப் பின்னர் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் போதும் சரி, நாம் சர்வக்கட்சி அரசாங்கமொன்றை ஸ்தாபிக்க நாம் பல்வேறு சந்தர்ப்பங்களில் அழைப்பு விடுத்திருந்தோம். ஒன்றரை வருடங்களாக நாம் இதற்காக பேச்சும் நடத்தினோம். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனும் நாம் பேச்சு நடத்தினோம்.

எனினும், ஆளும் தரப்பினரின் அழுத்தங்களினால் அந்த முயற்சிகள் கைவிடப்பட்டன. நாம் இப்போதும் சர்வக்கட்சி அரசாங்கமொன்றுக்கு ஆதரவு வழங்கத் தயாராகவே உள்ளோம்.

நேற்றைய தினம் 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பாக ஜனாதிபதி கருத்து வெளியிட்டிருந்தார். 13 தொடர்பாக பல்வேறு விமர்சனங்கள் தற்போது சமூகத்தில் எழுந்துள்ளன. 87 களில் வடக்கு அரசியல்வாதியான சிவசிதம்பரம், இந்தியாவுக்கு சென்று, இலங்கை அரசாங்கத்தினால் வடக்கிற்கு அநீதிகள் இழைக்கப்படுவதாக தெரிவித்ததையடுத்து தான், பல்வேறு பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னர் இந்து– லங்கா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இந்த ஒப்பந்தம் செய்யப்பட்ட போது நாட்டில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டதோடு, அப்போதைய பிரதமர் பிரேமதாஸவும், பெரும்பாலான அமைச்சர்களும் அந்த நிகழ்விலும் கலந்து கொள்ளாமல் இருந்தார்கள். மேலும், இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட போது, புலிகள் யுத்தத்தை ஆரம்பிப்பார்கள் என்றும் ஜே.வி.பியினர் அரசாங்கத்திற்கு எதிராக கிளர்ச்சி செய்யவுள்ளார்கள் என்றும் புலனாய்வுத் தகவல்கள் கிடைத்தன. இவ்வாறான சவால்களுக்கு மத்தியில்தான், முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தன இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார்.


இந்த நிலையில், தமிழ் அரசியல்வாதிகள் சமஷ்டியைக் கோருவதானது, பெரும்பான்மையின மக்களையும், பௌத்த பிக்குகளையும் தூண்டி விடும் செயலாகவே நாம் பார்க்கிறோம்.

வடக்கு தமிழ் பிரதிநிதிகள் அனைத்தையும் கேட்கக் கூடாது. நடுநிலைமையாக அவர்கள் செயற்படவேண்டும். முன்னாள் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ, 13பிளஸை தருவதாக ஐ.நா.வின் முன்னாள் செயலாளர் பான் கீ மூனுக்கு உறுதியளித்தார். பசில் ராஜபக்ஷவும் இந்தியாவுக்கு 13 பிளஸை தருவதாக உறுதியளித்தார்.

இவ்வாறான உறுதி மொழிகளுக்குப் பின்னர்தான், இந்தப் பிரச்சினை நாட்டின் பூதாகரமானது. 87 களுக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த எந்தவொரு அரசாங்கமும், மாகாணசபை முறைமை வெற்றியா தோல்வியா என ஆராயவில்லை. நீண்ட காலமாக நீடித்துவரும் இந்தப் பிரச்சினைக்கு, வடக்கு கிழக்கு தெற்கு அரசியல்வாதிகள், புத்திஜீவிகளை, மதகுருமார்களை ஒன்றிணைத்து சமாதானமானதொரு தீர்வை வழங்க வேண்டும்.

இதைவிட பாரிய பிரச்சினைகள் உலக நாடுகளில் ஏற்பட்டபோது, பேச்சு வார்த்தைகளின் ஊடாக அவை தீர்க்கப்பட்ட வரலாறுகள் உள்ளன. எனவே, இந்தப் பிரச்சினையை பேச்சுவார்த்தையின் ஊடாக நிச்சயமாக தீர்க்கலாம் என நாம் உறுதியாக நம்புகிறோம். எனத் தெரிவித்துள்ளார்.

**நல்லாட்சி அரசாங்கத்தில் மைத்திரி நல்லவர் என்றும் புதிய அரசியலமைப்பை உருவாக்கி தீர்வு தருவார் என்றும் சொல்லி தமிழ்மக்களை நம்ப வைத்தது மட்டுமல்ல இந்தியாவையும் சீண்டிய சம்பந்தர் சுமந்திரன் ஆகியோருக்கு நல்ல அனுபவ பாடமாகும்.**

Balachandran Law Office
Balachandran Muthaiah
Barrister, Solicitor & Notary
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்

2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544

# உரிமைகளுக்காக மட்டுநகரில் திரண்ட தமிழர்கள்! தன்னாட்சி உரிமையை அங்கீகரியென மட்டுநகர் பிரகடனம்!



வட்டுக்கோட்டைத் தீர்மானம், பொங்கு தமிழ் பிரகடனம், திம்புப் பேச்சுவார்த்தை என்பவற்றின் மூலம் வலியுறுத்தப்பட்ட, தமிழ் மக்களின் தன்னாட்சி, சுயநிர்ணயம், இறைமை என்பன ஏற்றுக் கொள்ளப்பட்டு, தமிழ் மக்களிற்கான இறுதித் தீர்வு சர்வதேச சட்டங்களின் பிரகாரம், சர்வதேச நாடுகளின் மத்தியஸ்தத்துடன், தமிழ் மக்கள் தம்மைத் தாமே ஆளக்கூடிய வகையில் அமைய வேண்டும் என வடக்கிலிருந்து கிழக்கு நோக்கிப் பயணித்த பேரணியின் பிரகடனம் வலியுறுத்தியுள்ளது.

இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள பல்கலைக்கழக மாணவர்களினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வடக்கிலிருந்து கிழக்கு நோக்கிய கரிநாள் எழுச்சிப்பேரணி செவ்வாய்க் கிழமை 07 பெப் 2023 மாலை மட்டக் களப்பில் எழுச்சியுடன் நிறைவுபெற்றது.

சுதந்திர தினத்தன்று யாழ் பல்கலைக் கழகத்திற்கு முன்பாக கரிநாள் பிரகடனப்படுத்தப்பட்டு இந்த எழுச்சிப்பேரணி ஆரம்பமானது. கிளிநொச்சி,முல்லைதீவு ஊடாக எழுச்சிப் பேரணி திங்கட்கிழமை திருகோணமலையினை வந்தடைந்ததுடன் அங்கு பல்வேறு இடங்களில் எழுச்சிப் போராட்டம் முன்னெடுக்கப் பட்டது.

திருகோணமலை வெருகலம்பதி சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தில் தரித்திருந்த போராட்ட குழுவினர் செவ்வாய்க் கிழமை காலை வாகரை நோக்கிப் பயணித்தனர். வாகரையினை அடைந்த பேரணிக்கு கதிரவெளியில் மக்கள் பலத்த வரவேற்பளித்ததுடன், பேரணிக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் கிழக்கிலங்கை இந்துக்குருமார் ஒன்றியமும் பேரணியில் கலந்துகொண்டது. வாகரை கண்டலடி மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர்களின் கல்லறையில் ஈகச்சுடர் ஏற்றி அகவணக்கம் செலுத்தியதுடன் உறுதிமொழியும் எடுத்துக் கொள்ளப்பட்டு, மட்டக்களப்பு நோக்கிய பேரணியின் பயணம் இடம் பெற்றது.


மட்டக்களப்பு நகரை எழுச்சிப்பேரணியடைந்ததும் நகர் ஊடாக காந்தி பூங்காவரையில் வருகைதந்து அங்கு அமைக்கப்பட்டுள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நினைவுத்தூபியில் ஈகச்சுடர் ஏற்றப்பட்டு படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் நினைவு கூரப்பட்டனர்.

தொடர்ந்து ஏழுச்சிப்பேரணியானது ஊர்வலமாக மட்டக்களப்பு வெபர் மைதானத்தை அடைந்து நிறைவுற்றது.

வடகிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் இணைந்து முன்னெடுத்த இந்த எழுச்சி பிரகடன நிகழ்வில் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் இயக்கத்தின் இணைப்பாளர்களான வேலன் சுவாமி,அருட்தந்தை ஜெகதாஸ் அடிகளார் மற்றும் கிழக்கிலங்கை இந்துக்குருமார் ஒன்றிய குருமார்கள், பல்கலைக்கழக மாணவர்கள், வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள்,அரசியல் பிரமுகர்கள் என பெருமளவானோர் கலந்து கொண்டனர்.



பேரணியின் இறுதியில், வடக்கிலிருந்து கிழக்கு நோக்கிய கரிநாள் எழுச்சிப் பேரணியின் உறுதி மொழியெடுக்கும் நிகழ்வு நடைபெற்றது. தமிழின அழிப்புக்கான சர்வதேச நீதிகிடைக்கும் வரையில் போராடுவதுடன் தமிழ் மக்களின் அடிப்படை அபிலாசைகளான தாயகம்,தேசியம்,சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படும் வரையில் எழுச்சிப் போராட்டங்கள் தொடரும் என்றும் உறுதி மொழியெடுக்கப்பட்டது. பிரகடன உரை வாசிக்கப்பட்ட போது, இலங்கையின் தேசியக்கொடியை அடையாளம் தெரியாத நபரொருவர் எரிக்க முற்பட்டமையால், குழப்பம் ஏற்பட்டது. மதகுருமார்கள் மற்றும் சிவில் அமைப்புக்களின் தலையீட்டால் குழப்ப நிலமை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டது.

ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா – அருள்மிகு


ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)

Tel: 416.213.0110 • www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அம்பாள் அடியார்களே!

17. பெப்ரவரி 2023 வெள்ளிக்கிழமை:- பிரதோஷ விரதம்.

18 பெப்ரவரி 2023 சனிக்கிழமை மகா சிவராத்திரி விரதம்.

முதல் ஜாமம்.- இரவு 6 மணிக்கு பூஜை உபயம்: லிங்கராஜா மீரா குடும்பம்

இரண்டாவது ஜாமம்.- இரவு 9 மணிக்கு பூஜை உபயம்: அருள் சுபா குடும்பம்

மூன்றாவது ஜாமம். நள்ளிரவு. 12 மணிக்கு பூஜை உபயம்: கிருபா. மதுரா குடும்பம்

நான்காவது ஜாமம். அதிகாலை 3 மணிக்கு பூஜை உபயம்: இளையபெருமாள் குடும்பம்

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# தமிழர் இனப்பிரச்சனைக்கு தீர்வு வழங்கும் முயற்சியை கைவிட மாட்டேன்! பொய்களால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது

## பாராளுமன்ற கொள்கைப் பிரகடன உரையில் ரணில்

இலங்கை இனப்பிரச்னைக்கு நிலைபேறான தீர்வொன்றை இம்முறை தான் நிச்சயம் வழங்குவதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவிக்கிறார். 9வது நாடாளுமன்றத்தின் 4வது அமர்வில் கலந்துகொண்டு கொள்கை பிரகடன உரையை நிகழ்த்திய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

1977ம்ஆண்டு தான் முதல் முறையாக நாடாளுமன்றத்திற்கு தெரிவான சந்தர்பத்திலிருந்து இனப்பிரச்னைக்கு தீர்வை பெற்றுக் கொடுக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்ட போதிலும், அது இன்று வரை வெற்றியளிக்கவில்லை என அவர் கூறுகிறார். இது வரை நடத்தப்பட்ட முயற்சிகள் வெற்றியளிக்காத போதிலும், இம்முறை எவ்வாறாயினும், அதனை வெற்றியடையச் செய்வதே தமது எதிர்பார்ப்பு எனவும் நம்பிக்கை வெளியிட்டார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவராக ஆர்.சம்பந்தன் அவர்களும், நானும் 1977 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டோம். நம் இருவருக்கும் பொதுவான ஒரு கனவு உண்டு. நம் இருவரும் நாடாளுமன்றத்தில் இருக்கின்ற போதே இலங்கையின் இனப் பிரச்னைக்கு நிலைபேறான ஒரு தீர்வை வழங்குதல் ஆகும். அக்கனவு பற்றி அன்று முதல் இன்று வரை நாம் கலந்துரையாடுகிறோம். முயற்சி செய்கிறோம். முன்னைய அனைத்து சந்தர்ப்பங்களிலும் அந்த முயற்சி வெற்றியளிக்கவில்லை. ஆனாலும் இம்முறை எவ்வாறாயினும் அதனை வெற்றியடையச் செய்வதற்கு நாம் எதிர்பார்க்கிறோம். அதற்காக உங்கள் அனைவரது ஒத்துழைப்பினையும் நாம் எதிர்பார்க்கிறோம்' என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவிக்கின்றார்.

### அநீதியை சரி செய்ய நடவடிக்கை

வடக்கில் காணி தொடர்பாக தீர்க்கப்படாத மேலும் பிரச்னைகள் உள்ளதை நாம் அறிவோம். பலாலி முகாமுக்காக கையேற்கப்பட்டுள்ள 100 ஏக்கர் காணிகள் அண்மையில் விடுவிக்கப்பட்டன. மேலும் பல ஏக்கர் காணிகள் தொடர்பாக தீர்மானம் எடுக்க வேண்டியுள்ளது. அது தொடர்பாக இராணுவம் மற்றும் ஏனைய தரப்பினர்களுடன் கலந்துரையாடப்படுகிறது. ஏனைய பாதுகாப்பு முகாம்களை அண்மித்த காணிகள் தொடர்பிலும் கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வடக்கு கிழக்கில் மாத்திரமன்றி நாட்டின் ஏனைய மாகாணங்களிலும் காணிகள் தொடர்பில் பாரதூரமான பிரச்னை காணப்படுகிறது.

இதற்கு பல ஆண்டுகளுக்கு முன்னர் வர்த்தமானி அறிவித்தல் மூலம் காடுகள் பற்றி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. அச்சந்தர்ப்பத்தில் விமானப்படை அடிப்படையாக கொள்ளப்பட்டது. யுத்தம் மற்றும் ஏனைய காரணங்களால் காடுகளாக்கப்பட்ட கிராமங்களின் பல காணிகள் வனப்பிரதேசங்களாக வர்த்தமானியில் பெயரிடப்பட்டன. தற்போது யுத்தம் முடிவடைந்துள்ளது. ஆனாலும் தமக்கு உரித்தான பல காணித் துண்டுகள் வனப்பிரதேசங்களாக வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளதால் மக்களுக்கு பாரிய அநீதி இழைக்கப்பட்டுள்ளது.

மொனராகலை தொடக்கம் யாழ்ப்பாணம் வரை மக்கள் இப்பிரச்னையை எதிர்கொண்டுள்ளார்கள். 1985ஆம் ஆண்டின் வரைபடத்தின் பிரகாரம் காடுகள் மற்றும் காணிகளை மீண்டும் வர்த்தமானியில் வெளியிட்டு இந்த அநீதியை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.' என ஜனாதிபதி குறிப்பிட்டார்.

### கைதிகள் பிரச்சனைக்குத் தீர்வு

எந்தவொரு விசாரணையும் இன்றி சிறை வைக்கப்பட்டுள்ள கைதிகளை விடுவிக்க படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி கூறுகின்றார். காணாமல் போன நபர்கள் தொடர்பாக கண்டறிவதற்கான முறைமையினை நாம் முறைமைப்படுத்தி துரிதப்படுத்துவோம். பயங்கரவாத செயற்பாடுகளுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பெயரில் சிறை வைக்கப்பட்டுள்ள நபர்கள் பற்றியும் நாம் கவனம் செலுத்தியுள்ளோம். எந்தவொரு வழக்கு விசாரணையும் இன்றி பல ஆண்டுகளாக அவர்கள் சிறை வைக்கப்பட்டுள்ளார்கள். படிப்படியாக இந்த சிறைக் கைதிகளை விடுவிப்பதற்கு நாம் நடவடிக்கை மேற்கொள்வோம்' என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உறுதியளித்தார்.

### பொலிஸ் அதிகாரம் மாற்றம் இல்லை

பிரதி பொலீஸ்மா அதிபர் பிரிவு எல்லைகள் தற்பொழுது மாகாண எல்லைகளின் பிரகாரம் காணப்படுவதில்லை. இதன் காரணமாக பிரயோக ரீதியான பல்வேறு சிக்கல்கள் உருவாகியுள்ளன. ஆகவே மாகாணங்களின் பிரகாரம் பிரதி பொலீஸ்மா அதிபர் பிரிவு எல்லைகளை நிர்ணயிப்பதற்கு நாம் எதிர்பார்த்துள்ளோம். பொலீஸ் அதிகாரங்கள் தொடர்பில் எந்தவித மாற்றங் களும் இடம் பெறமாட்டாது' என ஜனாதிபதி நாடாளு மன்றத்தில் இன்று குறிப்பிட்டுள்ளார்.



### மலையைகத் தமிழர் பிரச்சனை

இதேவேளை இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்கள் தொடர்பில் தான் விசேட கவனம் செலுத்தியுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவிக்கின்றார். மலையக மக்கள் எதிர்நோக்கியுள்ள பொருளாதார மற்றும் சமூக உரிமைகள் தொடர்பில் எஞ்சியுள்ள பல்வேறு சிக்கல்கள் குறித்து, மலையக மக்கள் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல்களை நடத்தி, அதனை தீர்த்து வைப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் கூறுகின்றார்.

பெருந்தோட்ட மக்கள் தொடர்பாகவும் நாம் விசேட கவனம் செலுத்துவோம். இலங்கையின் பெருந்தோட்டக்கைத்தொழிலை கட்டியெழுப்புவதற்காக அவர்கள் இற்றைக்கு 200 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கைக்கு வரவழைக்கப்பட்டார்கள். பெருந்தோட்டத் துறைக்காக பாரியளவு சேவையாற்றிய செளியமூர்த்தி தொண்டமான் அவர்களும், நானும் ஒன்றாக அமைச்சரவைக்கு நியமிக்கப்பட்டோம். நாம் இருவரும் பெருந்தோட்ட மக்களின் நலனுக்காக ஒன்றாக இணைந்து செயற்பட்டோம். தற்போது பெருந்தோட்ட மக்களின் சட்ட ரீதியான அனைத்து உரிமைகளையும் நாம் வழங்கியுள்ளோம்.

ஆனாலும் பொருளாதார மற்றும் சமூக உரிமைகள் தொடர்பாக பல்வேறு சிக்கல்கள் இன்னும் எஞ்சியுள்ளன. இந்த பிரச்சினைகளை தீர்ப்பதற்காக நாம் பெருந்தொட்ட மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடி நடவடிக்கை மேற்கொள்வதற்கு எதிர்பார்க் கின்றோம். 200 வருடங்களாக இலங்கையின் பொரு ளாதாரத்தை வளம் பெறச் செய்வதற்கு பாடுபடும் அவர்கள் நூற்றுக்கு நூறு வீதம் இலங்கை மக்களின் ஒரு பிரிவினராக மாற்றப்பட வேண்டும்.' என ஜனாதிபதி குறிப்பிட்டார்.

### முஸ்லிம்கள் பிரச்சனைக்கும் தீர்வு

நான் நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் எனது அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக திரு. ஏ.சீ.எஸ்.ஹமீட் தெரிவு செய்யப்பட்டார். இலங்கை முஸ்லிம்கள் எதிர்நோக்கும் விசேடமான நிலைமை பற்றி அவர் எனக்கு விளக்கம் அளித்துள்ளார். அடிக்கடி முஸ்லிம் மக்கள் பல்வேறு பிரச்சனைகளை எதிர்கொள்வதனை நாம் அறிவோம். அது தொடர்பாகவும் நாம் முழு அவதானம் செலுத்துகிறோம்.' என அவர் கூறுகின்றார். இதேவேளை, இலங்கை வாழ் சிங்கள மக்களும் பல்வேறு பிரச்னைகளை எதிர்நோக்கியுள்ளதாக கூறிய அவர், அந்த பிரச்னைகளை தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் உறுதியளித்துள்ளார்.

விசேடமாக சாதி வேறுபாடுகள் காரணமாக சமூகத்தில் ஓரம் கட்டப்பட்டுள்ள சமூகங்கள் தொடர்பில் முழு அவதானம் செலுத்துவதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம்' என ஜனாதிபதி குறிப்பிடுகின்றார். இந்த அனைத்து விதமான பிரச்னைகளுக்கும், ஒற்றையாட்சி அரசில் உயர்ந்தபட்ச அதிகாரங்களை பகிர்வதற்கு தான் எதிர்பார்த்துள்ளதாக ரணில் விக்ரமசிங்க கூறுகின்றார். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாட்டை பிரிப்பதற்கு தான் துணை நிற்க போவதில்லை என அவர் குறிப்பிடுகின்றார்.

# அநாகரிக அரசியலை விதைப்போர்!

தமிழ்த் தேசிய அரசியலில் ஒரு சாபக்கேடு தொடர்கின்றது. அதாவது தங்கள் அரசியல் எதிரிகளை துரோகிகளென்றும் எட்டப்பர்களென்றும் முகவர்களென்றும் சொல்வதை அரசியல் கட்சிகளின் தலைவர்கள் காலத்துக்குக் காலம் புதுப்பித்துக் கொள்கின்றனர். தங்கள் நலன்களுக்காக மற்றவர்களுடன் இணைந்து கொள்வதற்கு சிறிதும் தயக்கம் காண்பிக்காத கட்சிகளின் தலைவர்கள் என்போர் தங்களுடைய நலன்களுக்காக ஏனையவர்களை தூற்றுவதற்கும் எப்போதும் தயாராகவே இருக்கின்றனர். இவ்வாறு மற்றவர்களை துரோகிகளென்றும் முகவர்களென்றும் தூற்றுவதை ஓர் அரசியல் கெட்டித்தனம் போன்று காண்பிக்க முற்படுபவர்கள் அனைவரிடமும் ஒரு நம்பிக்கையுண்டு.

அதாவது, தமிழ் மக்கள் ஓர் ஆட்டு மந்தைக் கூட்டம். அவர்கள் ஒருபோதும் தங்களின் கருத்துகள் மீது சந்தேகம் கொள்ளப்போவதில்லை – தாங்கள் எதைச் சொன்னாலும் எருமை மாடுகள் போன்று அசையாமல் இருப்பார்களென்றே சில அரசியல்வாதிகள் ஆணித்தரமாக நம்புகின்றனர். இதன் காரணமாகத் தான் அவர்களால் தொடர்ந்தும் இவ்வாறு துணிந்து பேச முடிகின்றது.

தங்களுடைய அரசியல் எதிரிகளை துரோகிஎன்று கூறும் மரபு முதன்முதலில் ஜீ. ஜீ. பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ்காங்கிரஸின் மேடையில் தான் ஒலித்தது. பின்னர் தமிழரசு கட்சியின் மேடைகளில் ஒலித்தது. அதனையே பின்னர் ஆயுத இயக்கங்கள் தத்தெடுத்துக் கொண்டன. துரோகி – காட்டிக்கொடுப்பாளர் – ஒட்டுக்குழு – மண்டையன் குழு இவ்வாறான பல புதிய சொற்கள் தமிழர் – தமிழ் தேசிய அரசியல்அகராதிக்கு கிடைத்தன.

அவமானகரமான தோல்வி அனுபவங்களுக்கு பின்னரும் கூட, இவ்வாறான சொற்களை எவ்வித குற்றவுணர்வுமின்றி பயன்படுத்தப்படுகின்றன. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள்முன்னணியினரே (அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்) இவ்வாறான சொற்களை அடிக்கடி பயன்படுத்தி வருகின்றனர். ஜனநாயக அரசியலில் ஒரு கட்சி பிறிதொரு கட்சியை விமர்சனம் செய்வது சாதாரணமானது.

ஆனால், தமிழ்த் தேசிய பரப்பில் இடம்பெறும் விடயங்கள் எவையுமே விமர்சனங்களல்ல. தங்களுக்கு பிடிக்காத ஒருவரின் நடத்தையை படுகொலை செய்யும் நோக்கில் மேற்கொள்ளப்படும் பிரசாரங்களாகும். இது ஒரு ஹிட்லரியன் உத்தி. அதாவது, ஒரு பொய்யை தொடர்ந்து கூறி வந்தால் அதனை உண்மையென்று மக்கள் நம்பத் தொடங்கி விடுவர்.

ஆனால், இதிலுள்ள வேடிக்கை என்னவென்றால் இவ்வாறான குற்றச்சாட்டுகளை முன் வைக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் இன்று எவர் மீது குற்றச்சாட்டுகளை முன் வைக்கின்றனரோ அவர்கள் அனைவரோடும் முன்னர் இணைந்து செயல்பட்டிருக்கின்றனர். இப்போது இந்தியாவின் முகவரென்று தூற்றப்படும் அனைவரோடும் இணைந்து தான் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி. தமிழ் மக்கள் பேரவையில் அங்கம் வகித்திருந்தது. அப்போது ஏன் இந்த வாதங்கள் முன்வைக்கப்படவில்லை?

அதே போன்று தான் அண்மையில் தமிழரசு கட்சியின் முக்கியஸ்தர் சுமந்திரன் அதுவரையில் இணைந்து இயங்கியவர்கள் மீது கடுமையான குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தார். ஒரு கட்சி அல்லது குறித்த கட்சியின் தலைவர்கள் தவறானவர்களென்றால் அவர்களுடன் எவ்வாறு பல வருடங்களாக இணைந்து இயங்க முடிந்தது? இது தொடர்பில் மக்கள் மத்தியிலிருந்து கேள்விகள் எழவேண்டும்.

அடிப்படையில் இவ்வாறான குற்றச்சாட்டுகள் அனைத்துமே தங்களுடைய தேர்தல் வெற்றியின் மீதான அச்சங்களிலிருந்தே எழுகின்றது. பாம்பு கொத்துவது பயத்தின் காரணமாகவே. தேர்தல் வெற்றிக்கான பயத்திலிருந்தே இவ்வாறான விஷம பிரசாரங்கள் முன்வைக்கப்படுகின்றன. இதற்கு தமிழ் சிவில் சமூகம் என்போரும் ஒரு பிரதான காரணமாகும்.

இவ்வாறான அநாகரிக அரசியலை முன்னெடுப்போர்களை சிவில் சமூகத்தினர் கண்டிப்பதில்லை. சிவில் சமூகமென்பது நாகரிகமான அரசியலை ஊக்குவிக்க வேண்டும். அதனை சீர்குலைக்க முற்படும் சமூக விரோத அரசியல் சக்திகளை எதிர்க்க வேண்டும். ஆனால், அவ்வாறான சிவில் சமூக செயல்பாட்டாளர்களை இதுவரையில் தமிழ் சமூகம் காண வில்லை.

# ஜனாதிபதி கொள்கைப் பிரகடன உரையில் 13வது திருத்தம் தொடர்பில் குறிப்பிடவில்லை
# ஒற்றையாட்சி முறைமைக்குள் தீர்வை ஏற்றுக் கொள்ள மாட்டோம் - சுமந்திரன் உரை!

ஒற்றையாட்சி அரச முறைமைக்குள் தீர்வு என்று குறிப்பிடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. அர்த்தமுள்ள அதிகார பகிர்வை கோருகிறோம்.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் அரசியலமைப்பில் உள்வாங்கப்பட்டுள்ளது. அரசியலமைப்பை நடைமுறைப் படுத்தும் பொறுப்பு ஜனாதிபதிக்கு உண்டு, அதனை விடுத்து செயற்பட்டால் ஜனாதிபதி அரசியலமைப்பை மீறினார் என கருதப்படும்.

உரிமைகளுக்கான அஹிம்சை வழியில் போராடுவோம் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் 08 பெப்ரவரி 2023 புதன் கிழமை இடம் பெற்ற ஜனாதிபதியின் அக்கிராசன உரையை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அக்கிராசன உரையில் பல விடயங்களை சுட்டிக்காட்டியுள்ளார். அரசியல் தீர்வு விவகாரத்தில் ஏகிய ராஜ்ய என்ற சொற்பதத்தை பாவித்துள்ளார். அது ஒற்றையாட்சி முறைமையை குறிக்குமாயின் அதனை முழுமையாக புறக்கணிப்போம்.

அதியுச்ச அதிகார பகிர்வு என்று குறிப்பிட்டுக் கொண்டு ஒற்றையாட்சி முறைமைக்குள் அர்த்தமுள்ள அதிகார பகிர்வு சாத்தியமற்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந் 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் போது சமஷ்டியாட்சி முறைமை தொடர்பில் குறிப்பிட்டார்.

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் அதிகார பகிர்வுக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன இருப்பினும் அது வெற்றி பெறவில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த ஓரிரு மாதங்களில் அதிகார பகிர்வு தொடர்பில் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்தார் இருப்பினும் கொள்கை உரையில் 13ஆவது திருத்தம் தொடர்பில் குறிப்பிடப்படவில்லை. அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் அரசியலமைப்பினால் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. அரசியலமைப்பை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு ஜனாதிபதிக்கு உண்டு.

13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தா விட்டால் ஜனாதிபதி அரசியலமைப்பை மீறி விட்டார் என்று கருதுவோம். ஒரு நாடு என்ற சொற்பதத்துக்குள் தீர்வு என்று குறிப்பிடுவதை ஏற்றுக் கொள்வோம், ஒற்றையாட்சி அரச முறைமைக்குள் தீர்வு என்று குறிப்பிடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. அரசியல் தீர்வுக்கான அஹிம்சை வழியில் தொடர் போராட்டத்தில் ஈடுபடுவோம் என்றார்.



## பேரணியைக் குழப்ப மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் தோல்வி!

வடக்கில் இருந்து கிழக்கை நோக்கி நான்கு நாட்களாக நடைபெற்ற பல்கலைக்கழக தமிழ் மாணவர்களின் பேரணி முழுவதிலும் பல விடயங்கள் நடைபெற்றன. குறிப்பாக அந்தப் பேரணியைக் குழப்பும் விதமாகவும், பேரணியின் நோக்கத்தைக் களங்கப்படுத்தும் விதமாகவும் இடம்பெற்ற பல இரகசியச் சதிகள் பற்றி பல்கலைக்கழக மாணவர்கள் தெரிவித்த விடயங்களுள் சில:

பேரணிக்கான ஏற்பாடுகள் அனைத்தும் நடைபெற்றுமுடிந்து பொறுப்புகள் பகிர்ந்தளிக்கப்பட்ட பின்னர் திடீரென்று கிழக்குப் பல்கலைக்கழ மாணவர்கள் சிலர் மிரட்டப்பட்டிருந்தார்கள். அவர்களுக்கு உயிரச்சுறுத்தலும் விடுக்கபட்டது. தொடர்ந்து அவர்கள் தமது தொலைபேசி அழைப்புக்களைத் துண்டித்துக் கொண்டு தலைமறைவாகி விட்டார்கள்.

கிழக்குக்கான பேரணி ஏற்பாடுகளைப் பொறுப்பெடுத்திருந்த கிழக்குப் பல்கலைக்கழக மாணவன் ஒருவன் கடத்திச் செல்லப்பட்டு கடுமையாகத் தாக்கப்பட்டான். பலத்த காயங்களுடன் அவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டான்.

பேரணி ஏற்பாடுகள் முழுவதிலும் கலந்து கொண்டு, பேரணி முழுவதிலும் கோசமெழுப்பி வந்தஒரு இளைஞன் ஒரு உளவாளி என்கின்ற விடயம் பேரணி முடிந்த பின்னர் தான் மாணவர்களுக்குத் தெரிய வந்தது. பேரணி ஏற்பாடுகள் முதல் யார் யார் முன்நின்றார்கள், யார் யார் தொடர்பில் இருந்தார்கள் என்பன உற்பட அனைத்து தகவல்களும் உரிய இடங்களுக்கு அந்த இளைஞனால் வழங்கப்பட்டிருக்கலாம் என்று கூறுகின்றார்கள் மாணவர்கள். பேரணியில் கலந்து கொண்ட உளவாளி என்று சந்தேகிக்கப்பட்ட அந்த இளைஞனும், அவனது இரண்டு நன்பர்களும், தங்களுடன் சிறிலங்காவின் தேசியக் கொடியை மறைத்து எடுத்து வந்திருந்தார்கள். மட்டக்களப்பு பெவபர் மைதானத்தில் பிரகடனம் வாசிக்கப்பட்டுக் கொண்டிருந்த பொழுது சிங்கக் கொடியை தீ வைத்து எரிப்பதற்கு முயற்சி செய்துள்ளார்கள். அதனை அறிந்த மாணவர்கள் அந்த இளைஞர்களை பிடித்திழுத்து அந்த செயலைத் தடுத்து நிறுத்தினார்கள்.

மாணவர்களின் பேரணியில் சிறிலங்காவின் தேசியக் கொடி எரிக்கப்பட்டதாகக் காண்பித்து மாணவர்களை கைது செய்து சிறையில் அடைப்பதும், மக்கள் எழுச்சிக்குக் களங்கம் ஏற்படுத்துவதுமே அவர்களது நோக்கமாக இருந்ததாக மாணவர்கள் தெரிவிக்கின்றார்கள்.

வடக்கில் இருந்து கிழக்கு நோக்கிய பேரணி என்ற அந்தப் பேரணிக்கு கிழக்கு மக்கள் எதிர்பு வெளியிடுகின்றார்கள் என்று உலகிற்குக் காண்பிக்க பல சதிகள் மேற்கொள்ளப் பட்டதாகவும், மட்டக்களப்பில் சில இடங்களில் பேரணி மீது தாக்குதல் நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததாகவும், தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு முன்னால் வைத்து பேரணி மீது தாக்குதல் நடாத்தி விட்டு, வடக்கு பல்கலைக்கழக மாணவர்களுக்கும் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களுக்கும் இடையில் மோதல் என்று உலகிற்குக் காண்பிக்க பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் மாணவர்கள் தெரிவிக்கின்றார்கள். வாழைச்சேனை புகையிரத நிலையத்திற்கு முன்பாக வைத்தும் சில முஸ்லிம் இளஞர்களை வைத்து பேரணி மீது தாக்குதல்கள் மேற்கொண்து தமிழ் முஸ்லிம் கலவரத்தை ஏற்படுத்தவும் திட்டமிடப்பட்டிருந்ததாகத் தெரிவருகின்றது.

தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

Math & Physics Tutoring
(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12
கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)
சி.இளஞ்செழியன்
Tel: 416-524-0424

# சர்ச்சைக்குரிய 13வது திருத்தம் என்பது மாகாணசபை முறைமைக்கு அப்பால் நாட்டின் பாதுகாப்புக்கான உத்தரவாதம்!

-பனங்காட்டான்-

இலங்கை அரசியலை மையப்படுத்தி, உள்நாட்டில் பல காரியங்கள் இப்போது இடம்பெறுகின்றன. இவை ஓரளவுக்கு எதிர்பார்க்கப்பட்டவையும் கூட. வெளி நாடுகளிலும் சில விடயங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இவற்றில் முக்கியமானதாக ஐக்கியநாடுகள் மன்றில் இலங்கை மீது மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளை அங்கத்துவ நாடுகள் பட்டியலிட்டு வலியுறுத்தி வருகின்றன.

இந்தியா தனது பங்குக்கு 13ஆம் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டுமெனவும், மாகாண சபைகளுக்கான தேர்தல்களை தாமதமின்றி நடத்த வேண்டுமெனவும் இங்கு கோரியுள்ளது.

அடுத்த மாதம் 9ஆம் திகதி நடைபெற வேண்டிய உள்ளூராட்சித் தேர்தல், நிச்சயமாக இடம்பெறுமா என்பதை அதற்கு முதல் நாளான 8ஆம் திகதி வரை உறுதிபடச் சொல்ல முடியாத நிலைமையில், மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவது எவ்வாறு சாத்தியப்படுமென்று கேட்கத் தோன்றுகிறது.

உள்ளூராட்சித் தேர்தல்களுக்கான வர்த்தமானி அறிவிப்பு வெளியாகி விட்டதால் தேர்தல் உற்சாகம் கரைபுரண்டு ஓடுகிறது. முக்கியமாக, தமிழர் தாயகத்தில் 'தூள் பறக்கும்' மேடைப் பேச்சுகளும் நீயா நானா ஜனநாயகவாதி என்ற சவால்களும், 'அன்பான வாக்காளர்' பெருமக்களுக்கு சில நாட்களுக்கு ரசிக்கவும் சுவைக்கவும் நல்ல தீனி கிடைத்துள்ளது.

ஆரம்பமே இப்படியென்றால் அடுத்த முப்பது நாட்களும் குத்துவெட்டுகள், திடீர் தாக்குதல்கள், மாயமாற்றங்கள் மட்டுமன்றி சிலவேளை மறைமுக கொடுக்கல் வாங்கல்களும் (தமிழ்நாட்டுப் பாணியில்) இடம்பெறக் கூடும்.

இதற்கான நிதியை அள்ளிக்கொடுக்க சில வெளிநாடு (புலம்பெயர்) அமைப்புகள் தயாராகியுள்ளன. இதற்கெனவே வருடாந்த விருந்துகள், புதுவருட விருந்துகள், பொங்கல் விருந்துகள் என டிக்கட்டுகளுக்கு கொண்டாட்டங்களை நடத்தி வசூல் நடைபெறுவது நன்றாகத் தெரிகிறது.

முன்னைய தேர்தல் காலங்களில் நடைபெற்றதன் தொடர்கதை தான். ஜனாதிபதி ரணில் விக்கிரசிங்க இப்போது புது உருவம் எடுத்து, 'நான் சொன்னால் சொன்னது தான்' என்ற பாணியில் தம்மைக் காட்சிப்படுத்த முனைப்புடன் செயற்படுகிறார். வடக்கே படையினர் வசமிருந்த தமிழர் காணிகளில் சில அடையாளமாக மீளளிக்கப்பட்டுள்ளன. அரசாங்க மற்றும் படைத்தரப்பினருடன் தமிழரசுக் கட்சியின் சில பிரமுகர்களும் இந்நிகழ்வில் பங்கேற்று, மேடையில் அமர்ந்து வரலாற்றுக்குப் பதிவு செய்துள்ளனர். சிறையிலிருந்த இரண்டு தமிழ்க் கைதிகள் இன்னோர் அடையாளமாக விடுதலை செய்யப்பட்டுள்ளனர். சின்னத்திரை நாடகங்களின் பாணியில், 'இது தொடரும்' என்று ஆட்சித்தரப்பால் அறிவிக்க ப்பட்டு வருகிறது.

வாராது வந்த வாய்ப்பை தவறவிடக் கூடாது என்பதற்காக, 45 வருட அரசியலில் முதன்முறையாகக் கிடைத்த ஜனாதிபதி பதவியை அரிய சந்தர்ப்பமாக்கி,சுதந்திர தினக்(?) கொண்டாட்டத்தை ரணில் பயன்படுத்துகிறார். நாடு வங்குரோத்து நிலையிலிருந்தாலும், ஒவ்வொரு நாட்டிடமும் பிச்சா பாத்திரம் ஏந்தினாலும், இந்தக் கொண்டாட்டத்தை நடத்தா விட்டால் சர்வ தேசம் ஏளனமாகப் பார்க்கும் என்பதாகச் சொல்லி பல கோடி ரூபாவில் படையினரை வீதியுலாக் காட்டும் இந்த நிகழ்வு தேவைதானா என்று பலரும் கேட்கின்றனர். எதிர்பார்க்கும் சர்வதேச நிதியுதவி நிச்சயம் என்று அமெரிக்கா கூறி விட்டது. 'நான் உங்கள் தோழன்' என்று இந்தியா அபயக்கரம் நீட்ட, 'நான் உன்னுடன் தான்' என்று சீனா கட்டியணைக்க - இவை இரண்டும் போதாதென்றால் காசு அடிக்கும் இயந்திரம் காத்துக்கிடக்கிறது. இந்த விண்ணாணத்தில் 75வதுஆண்டு நிறைவு நூறாண்டை நோக்கிப் பயணிப்பதாக ரணில் பிரகடனம் செய்துள்ளார். அதனால்தான் போலும் அடுத்த 20 ஆண்டுகளுக்கு ரணிலே ஜனாதிபதி என்று அவரது சகாக்கள் உரக்கக் கூவுகின்றனர்.

மகிந்தவின் இரண்டு ஜனாதிபதி ஆட்சிக்காலம், சகோதரர்களும் பிள்ளைகளும் மந்திரிகள், பசில் அரசியல் மூளைசாலி - பின்னர் கோதா ஜனாதிபதி...



அடுத்தது நாமல் ராஜபக்ச என்று, அடுத்த இருபது ஆண்டுகளுக்கு ராஜபக்ச குடும்ப ஆட்சி என்று கடந்த ஆண்டு ஆரம்பத்தில் பெரமுனக்காரர் மேளமடித்து குரல் கொடுத்தது காதுக்குள் இன்னும் ரீங்காரம் இடுகிறது. மொட்டின் மெட்டு இப்போது யானையின் பக்கத்துக்கு மாறியுள்ளது.

இவை ஒருபுறமிருக்க, ரணிலின் 'தனி நல்லாட்சி' எப்படிப் போகிறது? 13 என்பது இவருக்கும் ஒரு கண்டமாகி வருவது போலவே தெரிகிறது.

1987ம் ஆண்டு ஜே.ஆர்.ஜெயவர்த்தனவும் ராஜிவ்காந்தியும் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் அறுவடையே 13வது திருத்தம். இரு நாடுகளுக்கிடையிலான சட்டபூர்வமான இந்த ஒப்பந்தத்தை எந்தத் தரப்பும் இலகுவாக ரத்துச் செய்ய முடியாது. இந்த ஒப்பந்தம் கைச்சாத்தான அந்த வேளையிலேயே கணிசமான எதிர்ப்பும் உருவானது. தமிழீழ விடுதலைப் புலிகள் இதனை மனதாரவும் இலட்சியக் கொள்கை ரீதியாகவும் ஏற்கவில்லையென்பது அடிப்படையில் முக்கியமானது.

சிங்களத் தரப்பைப் பொறுத்தளவில் அன்றைய பிரதமர் பிரேமதாசவும், தேசிய பாதுகாப்பு அமைச்சராகவிருந்த லலித் அத்துலத்முதலியும் பகிரங்கமாக எதிர்த்தனர். ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தமது பதவியை ராஜினாமா செய்தார். ராஜிவ் காந்தியை கொழும்பு அணிவகுப்பில் கொலை செய்யும் முயற்சியும் இடம்பெற்றது.

ஜே.வி.பி.யினர் நாடு தழுவிய ரீதியில் பல ஆர்ப்பாட்டங்களையும் எதிர்ப்பு நடவடிக்கைகளையும் மேற் கொண்டனர். இந்திய கர்ப்பூரம், திருநீறு, சந்தனம், வேட்டி - சால்வை விற்றவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். தமிழர் வணிக நிறுவனங்கள் பல நிர்மூலமாக்கப்பட்டன.

13ம் திருத்தம் நாட்டின் பூர்வீக குடிகளான தமிழருக்கு தனியாட்சியை - தனிநாட்டை கொடுக்குமென சிங்கள தேசத்தில் பரப்புரை மேற்கொள்ளப்பட்டது. அப்போதைய ஜே.வி.பி.யினர் கைது, கொலை என்பவற்றையும் சந்தித்தனர். இன்றைய ஜே.வி.பி. திடீரென 13ஆம் திருத்தம் மாகாண சபை முறைமையை ஆதரிப்பாக அறிவித்திருப்பது அதிர்ச்சி வைத்தியமாகக் காணப்படுகிறது. 13ம் திருத்தத்தின் முக்கிய அம்சங்கள் இரண்டு. அதிலொன்று தான் மாகாண சபை முறைமை. இலங்கையில் மாகாண சபைகளை உருவாக்கவென 42ம் இலக்கச் சட்டம் 1987 நவம்பர் 14ம் திகதி நாடாளுமன்றத்தல் நிறைவேற்றப் பட்டது. வடக்கு கிழக்கு இணைந்த மாகாணசபை 1988 இறுதியில் உருவானதாயினும், ஒன்றரை வருடத்தில் அகால மரணமானது. வடக்குக்கான தனி மாகாண சபைத் தேர்தல் 2013ல் நடைபெற்று, அதன் முதலாவது ஆட்சிக்கால முடிவில் அது இயற்கை எய்தியது.

தமிழருக்கென உருவாக்கப்பட்ட வடக்கு கிழக்குக்கான மாகாண சபைகளின் அழிக்க முடியாத தடங்கள் இவை. இப்போது இனப்பிரச்சனைக்கு தீர்வு காணவென ரணில் கூட்டிய கட்சித் தலைவர்களின் மாநாட்டில், '13ம் திருத்தத்தை 'முழுமையாக' நடை முறைப்படுத்துவேன்' என்று அவர் அறிவித்ததன் விளைவே இன்றைய களேபரத்துக்கான மூலகாரணம்.

இலங்கையின் ஒன்பது மாகாணங்களிலும் நிறுவப்பட்ட மாகாண சபை நிர்வாகம் கடந்த ஐந்தாண்டுகளுக்கு மேலாக அரச தரப்பின் பின்கதவு ஏஜன்டுகளான ஆளுனர்களின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. இதனை



தேர்தல் மூலம் மீள நிறுவி முழுமையான அதிகாரங்களுடன் அதனை நடைமுறைப்படுத்தப் போவது என்பதே ரணிலின் அறிவிப்பு. 'முழுமையாக' என்பதானது, மாகாண சபைகள் சட்டத்தின் கீழான காணி மற்றும் காவற்துறை அதிகாரங்களை அவற்றுக்கு வழங்குவது என்பதாகும்.

1988ம் ஆண்டிலிருந்து இதுநாள் வரை மாகாணசபைகள் இயங்கி வருகின்றன வாயினும், அவற்றுக்கு சட்டத்துக்கு உட்பட்ட காணி மற்றும் காவற்துறை அதிகாரங்கள் வழங்கப்படவில்லையென்பதை இதனூடாக விளங்கிக் கொள்ளலாம்.

1987ல் இலங்கை இந்திய ஒப்பந்தம் செய்யப்பட்ட வேளையிலும், 13வது திருத்தம் நாடாளுமன்றதில் நிறைவேற்றப்பட்ட போதும் அந்த அரசாங்கத்தின் ஓர் உறுப்பினராகவும் அமைச்சராகவும் அன்றைய ஜனாதிபதி ஜே.ஆரின் பெறாமகன் (சொந்த மச்சாளின் மகன்) என்ற வகையிலும் மாகாண சபைகளுக்கு முழுமையான அதிகாரங்களை வழங்க வேண்டுமென்ற தார்மிக கடமையும் உரிமையும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு உண்டு.

இந்தப் பின்னணியில், இதனை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டுமென ரணில் உண்மையாகவே எண்ணுகிறாரா, அல்லது இதனைப் பகிரங்கமாகக் கூறி சிங்களத் தரப்பின் எதிர்ப்பை லாபமாக்கி இதற்கு முடிவு கட்ட விரும்புகிறாரா என்பது அவருக்கு மட்டும் தான் தெரியும். கிழட்டு நரியை குள்ள நரி விஞ்சுமா?

இச்சந்தர்ப்பத்தில் தான் எதிர்பார்த்தவாறு பூதங்கள் குகைக்குள்ளிருந்து வெளியே வருகின்றன. தமிழருக்கு காணி, காவற்துறை அதிகாரங்கள் வழங்க அனுமதிக்க மாட்டோமென விமல் வீரவன்ச - உதய கம்மன்பில கூத்தாடிகள் தங்கள்



எதிர்ப்பை குளுரைக்க ஆரம்பித்துள்ளனர். கோதாவை வீட்டுக்கு அனுப்பியது போல ரணிலையும் அனுப்புவது இலகுவென இவர்கள் எண்ணுகிறார்கள்.

கடற்படையின் முன்னாள் அட்மிரலான சரத் வீரசேகர முழுமூச்சுடன் ரணிலை எதிர்க்க ஆரம்பித்துள்ளார். கோதபாய ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட போது தமக்கு ஆதரவாக 'வியத்மக' (அறிவாளிகள் குழு) என்ற பெயரில்



தனிச்சிங்கள அணியொன்றை உருவாக்கினார். கடந்த பொதுத்தேர்தலில் இந்த அணியைச் சார்ந்த எட்டுப் பேர் வெற்றி பெற்றனர்.

கப்டன் கொத்தலாவலை என்ற இராணுவ அதிகாரி யாழ்ப்பாணத்தில் கடமையாற்றிய போது விடுதலைப்புலிகளின் தளபதியாகவிருந்த கிட்டுவுடன் தொடர்பு கொண்டு கைதிகள் பரிமாற்றம் இடம்பெற்ற வேளையில் யாழ்ப்பாணக் குடாநாட்டின் இராணுவத் தளபதியாக விருந்தவர் மேஜர் ஜெனரல் ஆனந்த வீரசேகர. இராணுவத்தளபதியாகவிருந்த கொப்பேகடுவவின் படுகொலை, ஜே.வி.பி.யினரின் படுகொலைகள் ஆகியவற்றில் சம்பந்தப்பட்டவரென பெயரிடப்பட்ட ஆனந்த வீரசேகர, இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் பிக்குவாக மாறி, அம்பாறையில் புத்தங்கலஆனந்த தேரோவாக பெயர்சூடி, 2021ல் மரணமானார். இவரது இளைய சகோதரரே இந்த சரத் வீரசேகர என்பது இங்கு தவறாது குறிப்பிட வேண்டிய தகவல்.

சில தினங்களுக்கு முன்னர் கண்டிக்கு மகாநாயக்க தேரர்களிடம் ஆசி பெறச் சென்றார் ரணில். அங்கு அவர்களால் இவரிடம் ஒரு கடிதம் கையளிக்கப் பட்டது. '13ம் திருத்தத்தை எக்காரணம் கொண்டும் முழுமையாக அமல்படுத்தக் கூடாது' என்பது இக்கடிதத்தின் அச்சாரம்.

சிங்கள இனவாதிகள், கோதபாயவின் அறிவாளிகள், பௌத்த மகாசங்கங்கள் அனைத்தும் தனித்தனியாக 13ம் திருத்தத்தை முழுமையாக அமல்செய்யக் கூடாதென ஆரம்பித்து விட்டன. இவர்கள் கூட்டாக களத்தில் குதிக்க வேண்டியது தான் மிச்சம். ஏற்கனவே நடைமுறைப் படுத்தப்படும் 13ம்திருத்தத்தை இவர்கள் எதிர்க்க வில்லை. மாகாண சபை முறைமையையும் இவர்கள் எதிர்க்க வில்லை. காணி மற்றும் காவற்துறை அதிகாரங்களையே எதிர்க்கின்றனர். இதனை வழங்குவதால் தமிழருக்கு தனிநாடு கிடைத்து விடுமாம்!

இவ்வாறு கூச்சல் போடுபவர்களுக்கு முக்கியமான விடயமொன்றை நினைவுபடுத்த வேண்டும். 13ம்திருத்தம் என்பது அரசியல் அமைப்பில் இடம்பெற்றுள்ள ஒன்று. இது நிறைவேற்றப்பட்ட பின்னர் (22ம் பக்கம் பார்க்க)

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தை ரத்துச் செய்யும் இலங்கை அரசின் நடவடிக்கையில் ஐரோப்பிய ஒன்றியம் அதிருப்தி!

இலங்கையில் பயங்கரவாத தடைச் சட்டத்தை ரத்துச் செய்வது தொடர் பாக இதுவரை எடுக்கப்பட்ட நட வடிக்கைகள் போதுமானதாக இல்லை என்று ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்து ள்ளது. இந்தநிலையில் அரசியல் அச்சுறுத்தல்களுக்கு இந்த சட்டம் பயன் படுத்தப்படலாம் என்ற அச்சத்தையும் ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட்டுள்ளது.

இதனையடுத்து, இந்த விடயம் எதிர்வரும் மார்ச்சில் வெளியாகவுள்ள இலங்கைக்கான ஜிஎஸ்பி மீதான அறிக்கை எதிர் பார்க்கப்படுவதாக ஆங்கில நாளிதழ் ஒன்று தெரிவித்துள் ளது. பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், இலங்கையில் இன்னும் சிக்கல் நிறைந்த தாக அமைந்துள்ளது.

எனினும் அவற்றை தீர்ப்பதற்கு இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கை கள் போதுமானதாக இல்லை என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் டெனிஸ் சாய்பி நேர்காணல் ஒன்றின் போது தெரிவித்துள்ளார். பயங் கரவாத தடைச்சட்டம் தொடர்பில் நீதித்துறை மீளாய்வு மேற்கொள்ளப் படவில்லை. எனவே பல அரசியல்வாதி கள் தங்களுக்கு எதிராக பயங்கரவாத தடைச்சட்டம் பயன்படுத்தப்பட்டதாக தம்மிடம் முறையிட்டுள்ளதாகவும் தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாத தடைச் சட்டத்துடன் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதில் இலங்கை மக்கள் மத்தியில் பரந்த கருத்தொருமைப்பாடு உள்ளது. 2017 ஆம் ஆண்டில் பயங்கரவாத தடை சட்டத்தை சர்வதேச தரத்திற்கு ஏற்ப அமைக்க அரசாங்கம் உறுதியளித் தது. அத்துடன் கடந்த அரசாங்கம்,




பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன் படுத்துவதற்கு நடைமுறையில் தடை விதிக்கப்பட்டிருந்த போதிலும், பயங்கர வாத தடைச் சட்டத்தை பயன்படுத்திய தாக ஐரோப்பிய ஒன்றியத்தூதுவர் தமது ஏமாற்றத்தை வெளிப்படுத்தியுள் ளார்.

பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு பதி லாக புதிய தேசிய பாதுகாப்பு சட்டம், சர்வதேச எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப அமைவதையே தாம் எதிர்பார்ப்பதாக தூதுவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கை க்கு வந்திருந்த ஐரோப்பிய ஒன்றிய நிபுணர்களும் இலங்கைக்கு ஜிஎஸ்பி பிளஸின் முக்கியத்துவத்தை உணர்ந் துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், பயங்கரவாத தடைச் சட்டம் உட்பட இலங்கைக்கு தீர்வு காண வேண்டிய சில பிரச்சினைகள் நிலுவையில் உள்ளதாக அவர் கூறியுள் ளார்.


இதேவேளை ஜிஎஸ்பி பிளஸ் பயனாளி கள் குறித்த அறிக்கை எதிர் வரும் மார்ச் மாதம் வெளியிடப்படும் என்றும், ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றம் மற்றும் ஐரோப்பிய பேரவையில் சமர்ப் பிக்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படு கிறது.

## விக்னேஸ்வரன் தலைமையில் போட்டியிடும் இராணுவ வீரன்




நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டமைப்பில் ஒரு சிறிலங்கா இராணுவ வீரர் போட்டியிடுவதான செய்தி சமூகவலைத் தளங்களில் பரபரப் பாக பேசப்பட்டு வருகின்றது.

சாவகச்சேரி பிரதேச சபைக்கான விக்கி ஐயாவின் வேட்பாளராக போட்டியிடும் மீசாலை வடக்கு 10ம் வட்டாரத்தைச் சேர்ந்த கந்தசாமி சிவகுமார் என்பவர் இராணுவச் சீருடையில் தோற்றமளிப்ப தான புகைப்படங்கள் வெளியாகி வரு கின்றன.




இந்த விடயம் தொடர்பாக விக்னேஸ் வரன் ஐயாவைத் தொடர்பு கொண்டு, ஆமிக்காரனையெல்லாம் தேர்தல்ல போட்டி போட வைக்கிறீங்கள்.. சிறி லங்கா இராணுவத்தினருக்கு ஏதாவது புனர்வாழ்வு அளிக்கும் செயற்திட் டமா.? என்று கேட்டோம். அந்தப் பொடியன் ஆமி இல்ல.. அவன் முன்னர் 'கடேட்டில்' இருந்தவன்.. என்று பதில்



தந்தார் விக்கி ஐயா.ஆனால் புகைப்படத் தைப் பார்த்தால் கொமாண்டோ ட்ரெயி னிங் எடுத்தது மாதிரியெல்லோ இருக்கு என்று கேட்க, வழமை போலவே மழுப்பி விட்டு தொலைபேசியை வைத்து விட்டார்.

தேர்தல் முடிந்ததும் விக்னேஸ்வரன் ஐயாவுக்கும் மணிவண்ணனுக்கும் இடையில் ஆமி சீருடையில் ஒருத்தர் போட்டோவுக்கு 'போஸ்' கொடுத்து நிற்கின்ற கண் கொள்ளாக் காட்சியைப் பார்க்க ஆவலாக இருக்கு- நன்றி- ஐ.பிசி

SRI MARIYAMMA ASTROLOGER & JOTHIDAM
World Famous Indian Astrologer



Pandit: Guruji Arjunraj
Specialist in palm, Face & Photo, Horoscope Reading
Most Powerful Spiritualist from India
ARE YOUR DEPRESSED LONELY?
I will remove and destroy all Bad Luck, Withcraft, Obeya, Jado, Voodo & Protect your From all evils.
416-722-9498



AII RELIGIONS WELCOME! & PRIVATE AND CONFIDENTAL

OPEN7 DAYS
9AM - 8PM

I will read your past, present and future by reading your palm and face. We attained this study since 300 years in our family from fathers and forefathers. I will read the influence of effects of sun moon stars and planets on its events on your life. Please try you visit me regarding your health, family, Business, Job, Child, Astrology Vasthu,Dhrusti, Enemy,Court, Marriage, Love, Education and detailed reading and Visa all matters. I can solve it if your have any difficulty or struggle in your life then your life will be successful and bright. Please meet me once and know your readings.

- Name & Date Birth
- Hand Reading
- Past, Present and Future
- Overseas & Travel
- Marriage, Family Matters
- Husband & wife
- Children Education
- Children Mistake
- Property Court
- Enemy Problem

- Face Reading
- Horoscope
- Education & Work
- Love & Money Problem
- Divorce
- Sexual Problem
- Health & Business
- Jealousy & Black Magic
- Evill Affection
- Drinking Problem

MEET ME ONCE & SEE YOUR LIFE CHANGE 100%, REMOVAL OF BLACK MAGIC & GIVE PROTECTION
2607 Eglinton Ave, East Scarborough, ON M1K 2S2
(Eraa Super Market Upstairs, Unit #6) (Brimley & Eglinton)

# ஒற்றையாட்சி அரசில் அதிகபட்ச அதிகாரப் பகிர்வு! 75வது சுதந்திர தின உரையில் ஜனாதிபதி தெரிவிப்பு

சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவைப் பெறுவதற்குத் தேவையான கடினமான பணிகளை நாங்கள் வெற்றிகரமாகச் செய்து வருகிறோம். விரைவில் அவர்களின் இணக்கப்பாட்டைப் பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கிறோம் என 75 ஆவது சுதந்திர தினமான இன்று நாட்டு மக்களுக்காக உரையாற்றிய ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அத்துடன் வட, கிழக்கில் காணிகளை மீளக் கையளித்தல், கைதிகளை விடுதலை செய்தல் உள்ளிட்ட செயற்பாடுகளுக்கு நாம் முன்னுரிமை அளித்துள்ளதுடன் ஒற்றையாட்சி அரசில், அதிகபட்ச அதிகாரப் பகிர்வுக்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அராஜக அரசியல் சக்திகள் எத்தகைய தடைகளை ஏற்படுத்தினாலும், இந்த நாட்டை நேசிக்கும் பெரும்பான்மையான மக்களுடன் இணைந்து புதிய சீர்திருத்தத் திட்டத்தை முன்னெடுப்பேன் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்களுக்காக ஆற்றிய உரையின் முழு வடிவம் வருமாறு,

நான் இன்று நிகழ்த்தப் போவது பாரம்பரிய சுதந்திர தின உரை அல்ல. சுதந்திரம் கிடைப்பதற்கு அர்ப்பணித்த, கடுமையாக உழைத்த டி.எஸ். சேனநாயக்க உள்ளிட்ட அனைவருக்கும் மரியாதை செலுத்தி, நான் பேசப்போவது எமக்கு கிடைத்த சுதந்திரத்தைப் பற்றி அல்ல. இன்று நாம் இழந்திருக்கும் சுதந்திரத்தை மீளப் பெறுவது பற்றியே நான் பேசப ̊போகிறேன்.

75 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கை சுதந்திரம் பெற்றபோது, புகழ்பெற்ற லண்டன் டைம்ஸ் நாளிதழின் ஆசிரியர் தலையங்கம் இவ்வாறு கூறியது:

இலங்கை விரைவில் கீழத்தேயத்தின் சுவிட்சர்லாந்தாக மாறுவதைக் காண்பதே எமது எதிர்பார்ப்பாகும். வேறு எந்த கீழத்தேய நாட்டைப் பற்றியும் அவர்கள் அத்தகைய எதிர்பார்ப்பை கொண்டிருக்கவில்லை. ஆனால் தற்பொழுது எமக்கு என்ன நேர்ந்துள்ளது?

இன்று நாம் வரலாற்றில் ஒரு போதும் கண்டிராத பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர் கொண்டுள்ளோம். அண்மைக்கால வரலாற்றில் இவ்வாறானதொரு பாரதூரமான நிலையை நாம் எதிர்கொண்டதில்லை.

நமக்கு ஏன் இவ்வாறானதொரு நிலை ஏற்பட்டது? இந்த நிலைக்கு யார் பொறுப்பேற்க வேண்டும்? நாம் உண்மையைப் பேசுவோம். இந்த நிலைக்கு நாம் அனைவரும் குறைவாகவோ அதிகமாகவோ பொறுப்புக் கூற வேண்டும். நாம் யாரும் விரல் நீட்டி ஒருவரை ஒருவர் குற்றம் சொல்ல முடியாது.

நாம் ஆரம்பத்திலிருந்தே தவறு செய்தோம். அந்த தவறை சரி செய்ய முயற்சிகள் எடுக்கப்பட்டன. பாடுபட்டோம். ஆனால் நூறு சதவீதம் சரி செய்ய முடியவில்லை.

சுதந்திரம் பெறுவதற்கு டி.எஸ். பின்பற்றிய வழி முறை, இலங்கையர் அனைவரையும் ஒன்றிணைப்பதாகும். சிங்களவர், தமிழர், முஸ்லிம், பறங்கியர் என யாராக இருந்தாலும் இலங்கையர்களாக நாம் முன்னோக்கிச் செயற்பட வேண்டும் என அவர் அன்று தெரிவித்தார்

ஆனால் சுதந்திரத்திற்குப் பிறகு நாங்கள் பிளவுபட்டோம். இனம், மதம், பிரதேச ரீதியாக பிரிந்தோம். ஒருவரையொருவர் குறித்து சந்தேகம், வெறுப்பு ஏற்படும் வரை பிரிந்தோம். பல்வேறு குழுக்கள், அதிகாரத்தைப் பெறவதற்கு இந்தப் பிரிவைப் பயன்படுத்தின. அதிகாரத்திற்காக மேலும் மேலும் பிளவுகளை ஏற்படுத்தினர். நாம் அவர்களை நிராகரிப்பதற்கு பதிலாக அவர்களுக்கு அதிகாரம் அளித்தோம். அரசியலில் உண்மையைச் சொல்லாமல் பொய் சொன்னார்கள். உண்மையைச் சொன்ன அரசியல்வாதிகளை மக்கள் நிராகரித்தனர். நாட்டின் உண்மை நிலையைச் சுட்டிக்காட்டி அதற்கான பரிகாரம் தேடுபவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை.பொய்களால் மகிழ்விப்பவர்களுக்கு அதிக அங்கீகாரம் கிடைத்தது. நாம் வாக்குறுதி அரசியலில் சிக்கிக் கொண்டோம். எங்களுக்குச் சொந்தமில்லாத கடன் வாங்கிய வளங்களை நம்பியிருந்தோம். மேலும் மேலும் கடன் வாங்கினோம்.



அரசாங்கமென்பது வளங்களின் ஊற்று என்ற மனப்பாங்கை நாங்கள் ஏற்படுத்திக் கொண்டோம். அந்த ஊற்றுக்களில் இருந்து கிடைக்கும் பல்வேறு வளங்களை மக்களுக்குப் பகிர்ந்தளிப்பதே ஆட்சியாளர்களின் கடமை என்று பலரும் நினைத்தனர். அதன்படி தொழில்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. வளங்கள் விநியோகிக்கப்பட்டன. உபகரணங்கள் வழங்கப்பட்டன. பணமும் விநியோகிக்கப்பட்டது.

நம்மில் பெரும்பாலானோர் வாக்களித்தது நாட்டுக்காக அல்ல. எங்களுக்கு தொழில் பெற பிள்ளையைப் பாடசாலையில் சேர்ப்பதற்கு. விலை மனுக் கோரலுக்கு அனுமதி பெற நாம் வாக்களித்தோம். தனிப்பட்ட ஆதயத்திற்காகவே நாம் தேர்தல் வேட்பாளர்களுக்காக பணியாற்றினோம்.

நம்மில் பெரும்பாலானோர் தேர்தலில் போட்டியிட்டது கூட நாட்டுக்காக அல்ல. தங்களுக்காக. அதிகாரத்தை பெறவும் சலுகைகளை அனுபவிக்கவும் மேலும் சம்பாதித்துக் கொள்ளவும் தேர்தலில் போட்டியிட்டனர்.

நாம் வாக்குறுதிகளில் சிக்கிக் கொண்டோம். கோசங்களில் சிக்கினோம். இவை அனைத்தினதும் விளைவாக நாட்டின் பொருளாதாரம் நாளுக்கு நாள் வீழ்ச்சியடையத் தொடங்கியது. அரசியல் வாக்குறுதிகளை நிறைவேற்றவும் கோசங்களில் தெரிவிக்கப்பட்டவற்றை உறுதிப்படுத்தவும் நாங்கள் மேலும் மேலும் கடன் வாங்கினோம்.

நாம் அதிகம் அதிகமாக முதலீட்டுக்காக அல்லாமல், நுகர்வுக்காகத் தான் கடன் வாங்கினோம். கடன் முதலீட்டிற்காக அன்றி நுகர்வுக்காக அல்ல என்று புத்தரின் போதனைகள் கூறுகின்றன. பௌத்தத்தைப் பற்றிப் பேசிக் கொண்டு புத்தரை வணங்கி பௌத்த தர்மத்தை தாண்டிச் சென்றுவிட்டோம்.

சிங்கப்பூரை மீளக் கட்டியெழுப்புவது பற்றி அறிந்து கொள்வதற்காக இலங்கை வந்த லீ குவான் யூ பல வருடங்களுக்குப் பிறகு இவ்வாறு கூறினார். தேவையில்லாமல் அரசியலுக்கு முன்னுரிமை அளித்தமையே உங்கள் நாட்டில் இந்த நிலை ஏற்பட காரணம்.'' உங்கள் நாட்டை முன்னுதாரணமாக கொண்டிருந்தால் சிங்கப்பூர் அழிந்திருக்கும். உண்மையில், நாம் இப்போது அழிவு நிலையை நோக்கி சென்றுள்ளோம். இந்த காயத்தை தொடர்ந்து வைத்திருக்க விரும்புபவர்களும் உள்ளனர். ஆனால் நான் அதனை விரும்பவில்லை. ஒரு சத்திரசிகிச்சை செய்து இந்த காயத்தை சுகப்படுத்திக் கொள்வோம். இது கடினமானது. வேதனையானது. கஷ்டமானது. ஆனால் அந்த சோகத்தையும் வேதனையையும் சிறிது காலம் அனுபவித்தால், காயத்தை முழுமையாக குணப்படுத்த முடியும்.

சில அரசியல் கட்சிகள் சுட்டிக் காட்டும் குறுக்குவழிகளால் இந்த நெருக்கடியிலிருந்து எமக்கு மீள முடியாது.

இந்த நெருக்கடியை சமாளித்து உண்மையான பொருளாதார மற்றும் சமூக சுதந்திரத்தை அடைய வேண்டுமானால், நாம் செல்ல வேண்டியது ஒரே ஒரு வழிதான். இந்தக் குழியிலிருந்து ஏறுவதற்கு எமக்கு ஒரே ஒரு ஏணி தான் உள்ளது. அரசியல் நலன்களுக்காக இந்த ஏணியை ஒதுக்கித் தள்ளினால், நமக்கு ஒரு நாடு இருக்காது, நமக்கு நாளை இருக்காது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

நாம் இன்று இருக்கும் பொருளாதார நெருக்கடியின் தீவிரத்தையும் ஆபத்தையும் இதற்கு முன்னரும் நான் பல சந்தர்ப்பங்களில் சுட்டிக் காட்டியிருக்கிறேன். இந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்கள் மிகவும் கடினமாக இருக்கும் என்று நான் முன்கூட்டியே கூறியுள்ளேன். இந்த இக்கட்டான சூழலை நாம் விருப்பமில்லாத நிலையிலும் கூட எதிர்கொள்ள வேண்டியுள்ளது. நாட்டின் நலனுக்காக நாம் அந்த இக்கட்டான நிலையை தாங்கிக் கொள்ள வேண்டியுள்ளது. அரசியல் இனிப்புப் பேச்சுகளால் இந்நிலைக்குத் தீர்வு கிடைக்காது.

இலவசக் கல்வியினால் இந்நாட்டில் பெருமளவிலான மக்கள் வறுமையிலிருந்து விடுபட்டு நடுத்தர வர்க்கத்தினராக மாறினாலும் இன்று அவர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற முடியாத நாடாக மாறியுள்ளது. தோளோடு தோள் நின்று உழைக்க வேண்டிய இளைஞர்கள் இன்று கடவுச் சீட்டுகளைப் பெற வரிசையில் நின்று கொண்டிருப்பதை நான் பார்க்கிறேன். அதை நாம் மாற்ற வேண்டும். அப்படியானால், நாம் இந்தப் பொருளாதாரத்தை நவீனமயமாக்கி, உலகிற்கு திறந்து விட வேண்டும். மக்களை ஏமாற்றி அவர்களை நிரந்தர ஏழைகளாகவும், தங்கிவாழ்பவர்களாகவும் மாற்றும் ஊழல் அரசியல் வாதத்தையும் தோற்கடிக்க வேண்டும். இந்நாட்டு இளைஞர்கள் நீண்டகாலமாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் சிஸ்டம் சேன்ஞ் என்ற முறைமை மாற்றம் இது தான்.

அதற்காக எனது அரசாங்கம் புதிய சீர்திருத்தப் பாதையில் பிரவேசித்துள்ளது. அதற்காக எடுக்கப்படும் முடிவுகள் சில நேரம் வேதனை தருவதாக இருந்தாலும், இந்த நெருக்கடியில் இருந்து வெளிவர அந்த வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

இந்த நெருக்கடியை வெற்றி கொள்ள வேண்டுமாயின், நாம் குறுகிய அரசியலில் இருந்து விலகிச் செல்ல வேண்டும். நாம் ஒரு தாயின் பிள்ளைகளாக ஒற்றுமையாக இந்த சவாலை எதிர்கொள்ள வேண்டும். சவாலை வெற்றி கொள்ளும் பாதையை வலுப்படுத்த நம்மால் முடிந்த அளவு பங்களிக்க வேண்டும். அனைத்து வேற்றுமைகளையும் புறந்தள்ளி விட்டு இலங்கையர்களாக நாம் அனைவரும் முன்னேறிச் செல்ல வேண்டும்.

அதன் மூலம் வலுவான புதிய பொருளாதாரம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும். அதற்கான அடிப்படைப் பணிகளும், அடித்தளமும் தற்போது தயார் படுத்தப்பட்டுள்ளன. சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவைப் பெறுவதற்குத் தேவையான கடினமான பணிகளை நாங்கள் வெற்றிகரமாகச் செய்து வருகிறோம். விரைவில் அவர்களின் இணக்கப்பாட்டைப் பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கிறோம்.

பொருளாதாரத்தை வலுப்படுத்துவதால் மட்டும் எம்மால் திருப்தி அடைய முடியாது. ஒட்டுமொத்தக் கட்டமைப்பிலும் நாம் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். இந்த அரசியல் முறைமை, பாராளுமன்றம், நிறைவேற்று அதிகாரம், அரச பொறிமுறை ஆகிய அனைத்து துறைகளும் காலத்திற்கு ஏற்றவாறு மாற்றப்பட வேண்டும். இந்த மாற்றம் நாட்டுக்கும் நமக்கும் நல்லதாக அமைய வேண்டும். புதிய முறைமையில் இளைஞர்கள் மற்றும் பெண்களின் கருத்துக்களுக்கும் பிரதிநிதித்துவங்களுக்கும் (22ம் பக்கம் பார்க்க)

# 12வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! பெப்வரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள், அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

12 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 12 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் – உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை – நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள்.

இந்த வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் – மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக – எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை – மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக. தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும்.

ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

04 பெப்ரவரி 2023 முதல் 10 பெப்ரவரி 2023 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 12வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 1வது ஆண்டு நினைவஞ்சலி


### திருமதி பிறேமாவதி நவரத்தினம்



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பிறேமாவதி நவரத்தினம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாள் 14 பெப்ரவரி 2023 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய நாள் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி, செஞ்சோலை அன்பு ஆகிய 3 இல்லக்குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி பிறேமாவதி நவரத்தினம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 10வது ஆண்டு நினைவஞ்சலி

### திரு கனகசபை மருதப்பு



நயினாதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிரு ந்த இளைப்பாறிய ஆசிரியர் திரு கனகசபை மருதப்பு அவர்களது 10வது ஆண்டு நினைவு நாள் 06 பெப்ரவரி 2023 திங்கட்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு கனகசபை மருதப்பு அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர் களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 7வது ஆண்டு நினைவஞ்சலி

### திருமதி ஸ்ரீபதி ஞானாம்பிகை



மாதகலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டி ருந்த திருமதி ஞானாம்பிகை ஸ்ரீபதி அவர்களது ஏழாவது ஆண்டு நினைவு நாள் திதி 06 பெப்ரவரி 2023 திங்கட்கிழமையாகும். அன்றைய நாள் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி ஞானாம் பிகை ஸ்ரீபதி அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி

### செல்வி பிரசாந்தி அருச்சுனன்



வேலணையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த செல்வி பிரசாந்தி அருச்சுனன் அவர்களது முதலாவது ஆண்டுத் திதி நினைவு நாள் 04 பெப்ரவரி 2023 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். செல்வி பிரசாந்தி அருச்சுனன் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 14வது ஆண்டு நினைவஞ்சலி

### திரு கதிரேசபிள்ளை துரைச்சாமி



நாரந்தனை வடக்கு ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு கதிரேசபிள்ளை துரைச்சாமி அவர்களது 14வது ஆண்டு நினைவு நாள் 13 பெப்ரவரி 2023 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு கதிரேசபிள்ளை துரைச்சாமி அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 17வது ஆண்டு நினைவஞ்சலி

### செல்வி ருக்மணிதேவி முத்தையா



யாழ்ப்பாணம் தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த செல்வி ருக்மணிதேவி முத்தையா அவர்களது 17வது ஆண்டு நினைவு நாள் 12 பெப்ரவரி 2023 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது உறவுகள் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்குகின்றார்கள். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது உற்றார், உறவினர்களோடு இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

**ஏழைக் குழந்தைகளுக்கு உணவளிப்பவன்**
**இறைவனுக்கு அருகில் இருப்பான் – வேதநால்**

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




04 பெப்ரவரி 2023 சனிக்கிழமை வேலணையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த செல்வி பிரசாந்தி அருச்சுனன் அவர்களது முதலாவது ஆண்டுத் திதி நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



05 பெப்ரவரி 2023 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் வசிக்கும் திரு திருமதி சங்கீபன் யசோதரா தம்பதிகளின் செல்வப்புதல்வன் ஹரிகேஷ் சங்கீபனின் 5வது பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் செல்வன் ஹரிகேஷ் தனது பெற்றோர்கள் உறவுகளுடன் இணைந்து செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



05 பெப்ரவரி 2023 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் வசிக்கும் திரு திருமதி சங்கீபன் யசோதரா தம்பதிகளின் செல்வப்புதல்வன் ஹரிகேஷ் சங்கீபனின் 5வது பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் செல்வன் ஹரிகேஷ் தனது பெற்றோர்கள் உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




05 பெப்ரவரி 2023 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் வசிக்கும் திரு திருமதி சங்கீபன் யசோதரா தம்பதிகளின் செல்வப்புதல்வன் ஹரிகேஷ் சங்கீபனின் 5வது பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் செல்வன் ஹரிகேஷ் தனது பெற்றோர்கள் உறவுகளுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



06 பெப்ரவரி 2023 திங்கட்கிழமை மாதகலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி ஞானாம்பிகை ஸ்ரீபதி அவர்களது 7வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




07 பெப்ரவரி 2023 செவ்வாய்க்கிழமை வேலணையைச் சேர்ந்த திருமதி குலபூஷணம் பாலசிங்கம் அவர்களது இருபதாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



07 பெப்ரவரி 2023 செவ்வாய்க்கிழமை வேலணையைச் சேர்ந்த திருமதி குலபூஷணம் பாலசிங்கம் அவர்களது இருபதாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




07 பெப்ரவரி 2023 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி புவிபாலன் பானுமதி தம்பதிகளின் செல்வப்புதல்வன் பிரணவன் புவிபாலனின் 19வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் பிரணவன் தனது பெற்றோர்கள் உறவுகளுடன் இணைந்து செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



02 பெப்ரவரி 2023 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி துஷியந்தன் இந்துகா தம்பதிகளின் 8வது திருமண நன்நாளாகும். அன்றைய நாளுக்காக இணையர்கள் 08 பெப்ரவரி 2023 புதன்கிழமை அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவும் குளிர்பானமும் வழங்கி மகிழ்ந்தார்கள்.




09 பெப்ரவரி 2023 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி பிரபுராஜ் அனித்தா தம்பதிகளின் செல்வப்புதல்வி ஐரா (*Iyra*) பிரபுராஜின் இரண்டாவது பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் செல்வி ஐரா தனது பெற்றோர்கள் உறவுகளுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




09 பெப்ரவரி 2023 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி சுமதி ராஜ்குமார் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி சுமதி ராஜ்குமார் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.

## 2வது பிறந்த நாள் வாழ்த்து



## செல்வி ஐரா பிரபுராஜ்

கனடாவில் வசிக்கும் திரு,திருமதி பிரபுராஜ் அனித்தா தம்பதிகளின் செல்வப் புதல்வி ஐரா பிரபுராஜின் முதலாவது பிறந்த நன்நாள் 09 பெப்ரவரி 2023 வியாழக்கிழமையாகும். அன்றைய நாளில் செல்வி ஐராவும் அவரது பெற்றோர்களும் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள். அகவை இரண்டு காணும் செல்வி ஐரா நொடியின்றி சீரும் சிறப்புடன் பார் போற்றும் பைந்தமிழ் மகளாக வாழ வாழ்த்தும் அவரது பெற்றோர்கள், உறவுகளுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தை களும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் வாழ்த்துகின்றார்கள். வாழ்க வளமுடன்!



05 பெப்ரவரி 2023 ஞாயிற்றுக்கிழமையாகும். கனடாவில் வசிக்கும் திரு திருமதி சாந்தகுமார் ஜெயராணி தம்பதிகளின் செல்வப்புதல்வன் அகத்தியனின் 24வது பிறந்த நன்நாளாகும். அன்றைய நாளுக்காக செல்வன் அகத்தியன் தனது பெற்றோர்கள் உறவுகளுடன் இணைந்து 10 பெப்ரவரி 2023 வெள்ளிக்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



02 பெப்ரவரி 2023 வியாழக்கிழமை திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கொல்லன்கலட்டியை வதிவிடமாகவும் கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு வடிவேலு சிவக்கொழுந்து அவர்களது 25வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள்.

# தன் உயிரைப் பணயம் வைத்து 4 உயிர்களைக் காப்பாற்றிய TTC சாரதி மோகன்ராஜ் இராஜதுரை

கடந்த வியாழக்கிழமை (02.:.02.:.2023) மரலை ஆறு மணியளவில் ஸ்காபரோவில் ரயில் பாதையில் சிக்கிய கார் ஒன்றில் பயணம் செய்த நான்கு பேரை மீட்ட ரீ.ரீ.சீ பஸ் சாரதி திரு இராசதுரை மோகன்ராஜ் அவர்களுக்குப் பலரும் பாராட்டுக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

குறித்த ரயிலானது காரில் மோதுவதற்கு முன்னதாகப் புத்திசாதுரியத்துடன் விரைந்து செயற்பட்டு காரில் சிக்கியிருந்த நான்கு வயோதிபர்களையும் பாதுகாப்பாக குறித்த பணியாளர் மீட்டு வியத்தகு சாதனை புரிந்துள்ளார்.

ஸ்காபரோவின் பின்ச் அவெனியூ மற்றும் கென்னடி வீதி சந்திப்புக்கு அருகாமையில் இருக்கும் ரயில் கடவையில் பயணித்த போது திடீரென வாகனம் இயங்கவில்லை எனச் சம்பவத்தை நேரில் பார்த்தவர்களால் தெரிவிக்கப்பட்டது. பின்ச் அவெனியூ வழியாக பஸ்ஸைச் செலுத்தி வந்த போது ரயில் பாதையில் ஆபத்தான நிலையில் சம்பந்தப் பட்ட காரானது ஸ்தம்பித்து நிற்பதனை அவதானித்த ரீ.ரீ.சீ பஸ் சாரதி மோகன்ராஜ் பஸ்ஸை விட்டு இறங்கிச் சென்று தனது உயிரைப் பணயம் வைத்து காரில் பயணித்த நான்கு பேரையும் மெச்சத்தகு வகையில் மீட்டுள்ளார்.

ரயில் பாதையில் சிக்கிய நான்கு பேரும் காரின் உள்ளே இருப்பது பாதுகாப்பானது என கூறிய போதிலும் அவர்களுக்கு ஏற்படக்கூடிய ஆபத்தினை விளக்கி அங்கிருந்து வெளியேற்றியுள்ளார். குறித்த நான்கு பேரும் காரை விட்டு வெளியேறி வந்து பஸ்ஸில் ஏறி ஐந்து நிமிடங்களில் ரயில் காரில்



மோதுண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். நிஜ ஹீரோவாக மாறி நான்கு உயிர்களைக் காப்பாற்றிய துணிகரச் செயல் குறித்து ரீ.ரீ.சீ சேவை டுவிட்டர் மூலம் குறித்த சாரதிக்கு பாராட்டு தெரிவித்துள்ளதுடன் அலுவலகத்திற்கு அழைத்துப் பாராட்டுச் சான்றிதழ் ஒன்றினை வழங்கவும் தீர்மானித்துள்ளதாகத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


தனது அன்றாடக் கடமையின ் போது தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதனைத் துல்லியமாக அறிந்து வைத்துள்ளமையால் குறித்த நேரத்தில் ரயில் வரக்கூடும் என்பதனை நன்குணர்ந்து சமயோசிதமாகச் சிந்தித்துச் செயலாற்றியுள்ளார் என்பது பாராட்டுக்குரியது.

தான் தனது குடும்பம் என்று குறுகிய வட்டத்துக்குள் வாழ்ந்து கொண்டிருக்கும் இன்றைய சூழலில் பிறருக்காக உதவும் மனப்பாங்கு உண்மையிலேயே பாராட்டுதலுக்குரியதே. தன்னோடு தொடர்புடையார் மாட்டு வருவது அன்பு என்றும் தொடர்பில்லாதார் மாட்டு வருவது அருள் என்றும் திருக்குறளுக்கு உரை எழுதிய பரிமேலழகர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்காரணமாகவே இல்லறவியலில் அன்புடமை என்ற அதிகாரத்தையும் துறவறவியலில் அருளுடமை என்ற அதிகாரத்தையும் வைத்துள்ளார் போலும். எனது பார்வையில் ஒரு துறவிக்கு இருக்கக்கூடிய மனிதாபிமானம் திரு மோகன்ராஜ் அவர்களுக்கு இருந்திருக்கிறது என்றால் அது மிகையல்ல..

மோகன்ராஜ் அவர்கள் சிறுவயது முதல் கல்வியறிவுடன் நல்லொழுக்கமும் ஒருங்கே ஊட்டி வளர்க்கப்பட்டிருக்கிறார் என்ற உண்மை இதிலிருந்து விளங்குகிறது. இவரது தந்தை திரு வேலுப்பிள்ளை இராஜதுரை அவர்களையும் தாயார் திருமதி சுசீலா இராஜதுரை அவர்களையும் நான் நன்கு அறிவேன்.

மிகச்சிறந்த பண்பாளர்கள். இருவரும் வேலணை கிழக்கில் முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்கள். திரு இராஜதுரை அவர்கள் தென்னிலங்கையில் எகலியக்கொட பிரதேசத்தில் பிரபல வர்த்தகராக இருந்தவர் என்பதனை இங்கு குறிபிட்டேயாக வேண்டும்.



தனது தாய் தந்தையருக்கும் உறவினர் நண்பர்களுக்கும் தான் பிறந்த வேலணை மண்ணிற்கும் கல்விகற்ற பாடசாலைகளான வேலணை சரஸ்வதி வித்தியாசாலைக்கும் வேலணை மத்திய கல்லூரிக்கும் வாழும் கனேடிய மண்ணிற்கும் மெச்சத்தகு செயல் மூலம் பெருமை தேடித்தந்த திரு மோகன்ராஜ் அவர்களைச் சகோதர பாசத்துடன் பாராட்டி மகிழ்வதோடு நீடு வாழ வுாழ்த்துகிறேன்.

**சி. இளஞ்செழியன்**
**பழைய மாணவர் (1975-1982)**
**வேலணை மத்திய கல்லூரி**


# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போன்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**
Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**, Cell: **416.450.5011**
Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com





தமிழீழத்தின் இசை வேந்தன்

# வர்ண.ராமேஸ்வரன்

நினைவரங்கத்தில்

உங்கள் அபிமான **ஈழநாடு** பத்திரிகையின்

## 30வது ஆண்டு விழா

# இசைச் சங்கமம் 2023

தமிழக - கனடிய பிரபல பக்கவாத்தியக் கலைஞர்களுடன்

## கலைமாமணி

# ராஜேஸ் வைத்தியா



**6:00PM**

CHINESE CULTURAL CENTRE

**5183 SHEPPARD AVE. EAST**

SCARBOROUGH


**APRIL 23 2023**

அன்பளிப்பு

| | | |
|---|---|---|
| VVIP $200 | VIP $100 | $50 |

**தொடர்புகட்கு: ஈழநாடு பரமேஸ் 416-841-9600**

விழா சரியாக மாலை 6.00 மணிக்கு ஆரம்பமாகும்.



VADHYA BRINDAM
Uniting 108 Artists
Toronto
Sunday March 19th, 2023 at 5:30 pm
at
Richmond Hill Centre for the Performing Arts
10268 Yonge St, Richmond Hill,
ON L4C 3B7
FOR MORE INFORMATION:
PLEASE CALL
647-808-5764

# சுடலைக் கழிவு அரசியல்?

1970களில் தமிழ் இளைஞர் பேரவையில் உறுப்பினராக இருந்தவரும் தமிழரசு கட்சியோடு நெருங்கிச் செயற்பட்டவரும், பிந்நாளில் தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டவரும், இந்திய இலங்கை உடன்படிக்கையின் பின் இணைந்த வடக்கு கிழக்கில் முக்கிய பொறுப்பில் இருந்தவருமாகிய, ஒரு மூத்த அரசியல் செயற்பாட்டாளரின் நேரடி அனுபவம் இது.

தமிழரசுக் கட்சியோடு நெருங்கிச் செயற்பட்ட காலப்பகுதியில் இளையவர்கள் அமிர்தலிங்கத்தின் வீட்டு முன் விறாந்தையில் தங்குவதுண்டாம். ஒருநாள் இரவு அவர்கள் சுவரொட்டி ஒட்டுவதற்காக போகும் பொழுது அவர்களோடு சேர்ந்து அமிர்தலிங்கத்தின் மகன் ஒருவரும் சென்றிருக்கிறார். இரவு முழுதும் மகனைத் தேடிக் காணாத அமிர்தலிங்கம் அடுத்த நாள் காலை இந்த இளைஞர்களோடு அவரைக் கண்ட பொழுது பின்வரும் தொனிப்படப் பேசியிருக்கிறார்... நீயும் படிக்காமல் இவங்களப்போல காவாலியாத் திரியப் போறியா?

1970களில் அமிர்தலிங்கம் எந்த நோக்கு நிலையில் இருந்து அவ்வாறு கூறினாரோ, அதே நோக்கு நிலையில் இருந்து தான் கிட்டத்தட்ட 50 ஆண்டுகளின் பின் சுமந்திரனும் கதைக்கிறாரா? 20 வருடங்களாகக் கூட இருந்தவர்களை நல்வழிப்படுத்த எடுத்த முயற்சியிலும் நாம் தோல்வி அடைந்து விட்டோம் இவ்வாறு சுமந்திரன் அண்மையில் சாவகச்சேரியில் வைத்துக் கூறியுள்ளார்.

முன்பு பங்காளிகளாக இருந்த கட்சிகளை நோக்கித் தான் அவர் அவ்வாறு கூறியுள்ளார். அவர்களை நல்வழிப்படுத்த முற்பட்டோம் என்று கூறுகிறார். ஆயின் அவர்கள் திருத்தப்பட வேண்டிய குற்றவாளிகள் என்று பொருள். ஆயுதப் போராட்ட

அவர்கள் பின் செல்வார்கள். அந்த இளையோரை தமது அரசியல் எதிரிகளுக்கு எதிராகத் திருப்பி அவர்களைத் தண்டிக்குமாறு தூண்டியது தமிழ் மிதவாதிகள்தான். மேடைகளில் அவர்கள் செய்த முழக்கங்களை கலாநிதி சிதம்பரநாதன் வார்த்தை வன்முறை–வேர்பல் வயலன்ஸ்'' என்று வர்ணிப்பார். இவ்வாறு தமிழ் மிதவாதிகளால் தூண்டப்பட்டு போசிக்கப்பட்டு வளர்த்தெடுக்கப்பட்டதே தமிழ் ஆயுதப் போராட்டம்



ஆகும். எனவே தமிழரசுக் கட்சி இதில் தனக்கு சம்பந்தமில்லை என்று கூறமுடியாது. தனது கையில் இரத்தம் இல்லை என்றும் கூறமுடியாது.

தமிழரசு கட்சியின் தேர்தல் மேடைகளில் இளையோர் உணர்ச்சி வசப்பட்டு விரலை வெட்டி தலைவர்களின் நெற்றியில் இரத்தத் திலகம் வைத்தார்கள். அவ்வாறு இரத்தத்தால் பொட்டு வைத்த ஒருவர் பின்னாளில் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் புலனாய்வுத்துறை பொறுப்பாளராக வந்தார். அவருக்கு இயக்க பெயரும் பொட்டு என்று வைக்கப்பட்டது. இப்படியாக இளைஞர்களை இரத்தம் சிந்துமாறு ஊக்குவித்த ஒரு கட்சி

(**grey**) ஒரு கட்டமைப்பு அது. அப்பண்புருமாற்றத்தை 2009 க்குப் பின் அடுத்த கட்டக் கூர்ப்புக்கு எடுத்துச் செல்ல சம்பந்தர் தவறிவிட்டார். வரலாறு அவருக்கு நிர்ணயகரமான,உன்னதமான ஒரு சந்தர்ப்பத்தை வழங்கியது. ஆனால் வரலாறு அவருக்கு வழங்கிய பொறுப்பை அவர் பொருத்தமான விதத்தில் நிறைவேற்றவில்லை. ஒரு பண்புருமாற்ற காலகட்டத்தை அவர் வீணடித்து விட்டார்.

ஒரு பண்புரு மாற்றத்துக்குத் தலைமைதாங்க அவரால் முடியவில்லை. அதற்கு அவசியமான அரசியல் உள்ளடக்கமும் அவரிடமில்லை.

தமிழ் மக்கள் ஓர் ஆயுதப் போராட்டத்தை கடந்து வந்த மக்கள். ஆயுதப் போராட்டம் என்றாலே எல்லாருடைய கைகளிலும் ரத்தம் இருக்கும். இதில் எல்லாருக்கும் ஏதோ ஒரு விகிதமளவுக்குக் கூட்டுப் பொறுப்பு உண்டு. தமிழ் மக்கள் தங்களுடைய இறந்த காலத்தைக் கிண்டத் தொடங்கினால் பிணமும் நிணமும் எலும்புக்

உத்தியோகபூர்வமாக எதையும் சொல்லவில்லை. அல்லது சொல்ல முடியவில்லை. கூட்டமைப்பின் சிதைவு என்பது சம்பந்தருடைய தலைமைத்துவத்தின் தோல்வியுந் தான். தமிழ் பண்புரு மாற்ற அரசியலின் தோல்வியுந் தான். அது தமிழரசுக் கட்சியின் தோல்வியுமா என்பதை இனி வருங்காலமே தீர்மானிக்கும்.

கடந்த சில கிழமைகளுக்குள் கூட்ட



கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -

மைப்பு மட்டும் சிதையவில்லை தமிழரசு கட்சியும் இறுக்கமான ஒரு கட்சியாக உள்ளதா என்ற கேட்குமளவுக்கு நிலைமைகள் காணப்படுகின்றன. கடந்த கிழமை உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்யும்போது மார்ட்டின் வீதியில், கட்சித் தலைமையகத்தில் மூத்த தலைவர்கள் காத்துக் கொண்டிருந்திருக்கிறார்கள். ஆனால் வேட்பு மனுக்கள் சுமந்திரனின் அணியைச் சேர்ந்த ஒருவருடைய அலுவலகத்தில் தயாரிக்கப்பட்டு நேரடியாக கச்சேரிக்கு எடுத்துச் செல்லப்பட்டதாக குற்றஞ் சாட்டப்படுகிறது.

அதாவது கட்சித் தலைமையின் கட்டுப்பாட்டுக்குள் கட்சி இல்லை என்று பொருள். அது மட்டுமல்ல, கிளிநொச்சியில் வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் பொழுது, சுமந்திரனுக்கு விசுவாசமான அணியைச் சேர்ந்தவர்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார்கள். அதனால் அவர்கள் சுயேச்சைக் குழுவாக போட்டியிடுகிறார்கள். அவர்களில் சிலர் சந்திரகுமாரின் சமத்துவக் கட்சியில் இணைந்து விட்டார்கள். சிறீதரனின் அன்ரன் பாலசிங்கம் கட்சியை எங்கே கொண்டு போகிறார்?

த்தில் ஈடுபட்டவர்களை குற்றவாளிகள் அல்லது திருத்தப்பட வேண்டியவர்கள் என்று அவர் கருதுகிறாரா? இரண்டு தசாப்தங்களாக ஒன்றாகக் குடும்பம் நடத்தி விட்டு இப்பொழுது இனித் திருந்த மாட்டார்கள் என்று கூறுகிறாரா?

ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை நல்வழிப்படுத்துவது என்பது ஏறக்குறைய அரசாங்கம் கூறுவது போல புனர்வாழ்வளிப்பது என்ற பொருளில் தான். ஒரு ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை அவ்வாறு கூறத்தக்க மனோநிலை எங்கிருந்து வருகிறது? நாங்கள் தூய மிதவாத கட்சி. ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடாதவர்கள். எமது கைகளில் இரத்தம் இல்லை. கொலைப் பழி இல்லை. நாங்கள் படித்தவர்ள் நாங்கள் எப்பொழுதும் நல்வழியில் தான் செல்கிறோம் என்று நம்பும் ஒரு மிதவாத பாரம்பரியத்தில் இருந்தா அவ்வாறு கூறப்படுகிறது?

ஆனால் தமிழரசுக் கட்சி அப்படி கூற முடியாது. ஏனெனில் இக்கட்டுரையின் தொடக்கத்தில் கூறப்பட்ட அரசியல் செயற்பாட்டாளரும் உட்பட ஆயிரக்கணக்கான இளவயதினரை ஆயுதப் போராட்டத்தை நோக்கித் தூண்டியதே தமிழ் மிதவாதிகள் தான்.

குறிப்பாக தமிழரசு கட்சியானது தேர்தல்களில் தோற்கும் பொழுது தீவிர தேசிய நிலைப்பாட்டை கையில் எடுக்கும். (இப்பொழுது, பேச்சுவார்த்தை மேசையில் தீவிரமான நிலைப்பாட்டை எடுப்பது போல).அப்பொழுது அவர்கள் பேசும் வீர வசனங்களில் மயங்கி இளையோர்

இப்பொழுது தன்னை ஒரு தூய மிதவாதக் கட்சியாக கூறிக் கொள்ள முடி யாது. ஏன் அதிகம் போவான்? தமிழரசுக் கட்சியின் தலைவர் அமிர்தலிங்கத்தின் மகன் இந்தியாவில் ஒரு இயக்கத்தைத் தொடங்கிய பொழுது அதை அமிர்தலிங்கம் தடுக்கவில்லை.

இவ்வாறு தமது இயலாமை, பொய்மை, போர்க் குணமின்மை என்பவற்றிற்கு எதிராகத் திரண்டு வந்த இளையோரின் கோபத்தைத் திசை திருப்பி ஆயுதப் போராட்டத்தை நோக்கி ஊக்கிவித்ததன் மூலம் தமிழ்த் தலைமைகள் தந்திரமாக போராட்ட பொறுப்பை இளைய தலைமுறையின் தலையில் சுமத்தின. ஆயுதப் போராட்டம் படிப்படியாக அரங்கில் முன்னேறத் தொடங்கிய பொழுது அதன் தர்க்கபூர்வ விளைவாக தமிழ் மிதவாதிகள் பின்னரங்கிற்கு தள்ளப்பட்டார்கள். ஒரு கட்டத்தில் ஆயுதப் போராட்டம் மிதவாதிகளுக்கு எதிராகவும் திரும்பியது. அதாவது ஆயுதப் போராட்டத்தால் தண்டிக்கப்படுவோரின் பட்டியலில் தமிழ் மிதவாதிகளும் இருந்தார்கள் என்பதனை இங்கு சுட்டிக் காட்ட வேண்டும்.

எனினும் அதே ஆயுதப் போராட்டம் அதன் அடுத்த கட்ட வளர்ச்சிக்கு பின் ஒரு பண்புரு மாற்றத்துக்கு தயாராகியது அதன் விளைவு தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. கூட்டமைப்பு எனப்படுவதே 2009க்கு முந்திய ஒரு பண்புரு மாற்றத்தின்–**trasformation**–விளைவுதான்.

நவீன தமிழ் அரசியலில் தோன்றிய சாம்பல் பண்பு அதிகமுடைய

கூடுகளுந் தான் வெளியே வரும். தமிழ் மக்களைப் பொறுத்தவரை இறந்த காலத்தை கிண்டுவது என்பது அதன் பெரும்பாலான அர்த்தத்தில் புதைமேடுகளைக் கிண்டுவது தான். அப்படிக் கிண்டத் தொடங்கினால், ஒருவர் மற்றவரைக் குற்றவாளியாக்குவதிலேயே தேசம் பல துண்டுகளாக சிதறிப் போய் விடும்.

ஓர் ஆயுத மோதலுக்கு பின்னரான அரசியல் என்ற அடிப்படையில், தமிழ் மக்கள் இரண்டு தளங்களில் தமது அரசியலை முன்னெடுக்க வேண்டியிருக்கிறது. ஒன்று நீதிக்கான போராட்டம். இரண்டு, அந்தப் போராட்டத்துக்காக தேசத் திரட்சியை ஆகக்கூடிய பட்சம் உடையவிடாமல் பாதுகாப்பது. அவ்வாறு தேசத்திரட்சியை பலமான நிலையில் பேணுவதென்றால், அதற்கு தமிழ் அரசியலில் பண்புருமாற்றம் அவசியம். அதாவது வெளி நோக்கிய நீதிக்கான போராட்டம் உள்நோக்கிய பண்புருமாற்றம்.அதற்கு பரந்த மனம் கொண்ட பெருந்தலைவர்கள் வர வேண்டும்.

ஆனால் சம்பந்தர் அவ்வாறான ஒரு பெருந் தலைவரல்ல. தமிழ் அரசியலில் முன்னெப்பொழுதும் தோன்றியிராத ஒரு சாம்பல் பண்புமிக்க கூட்டுக்கு சுமார் 20 வருடங்கள் அவர் தலைமை தாங்கினார். தமிழ் மிதவாத அரசியலிலேயே அதிகளவு ஆசனங்களை(22) வென்ற அக்கூட்டு படிப்படியாகச் சிதைந்து போய் விட்டது. அதற்கு அவரும் பொறுப்பு. அவர் தலைமை தாங்கிய ஒரு கூட்டுக் கலைந்த பொழுது, அதன் தலைவராக, அதைக் குறித்து அவர்



கடந்த திங்கட்கிழமை கரைச்சி பிரதேச சபையின் தவிசாளரின் வீட்டுக்கு முன் சுடலைக் கழிவுகள் ஒரு மூட்டையாகக் கட்டிப் போடப்பட்டுள்ளன என்பதனை அவர் முகநூலில் பதிவேற்றியுள்ளார். அதை யார் செய்தது என்பது நிரூபிக்கப்படவில்லை. எனினும் முகநூலில் பிரதேச சபை தவிசாளர் எழுதிய குறிப்பில், சுயேட்சைக் குழுவின் மீதே குற்றஞ் சாட்டப்படுகிறது.

ஒரே கட்சிக்குள் ஒரே தேர்தல் தொகுதிக்குள் ஏற்பட்ட மோதல்கள் சுடலைக் கழிவுகளை வீட்டின் முன் போடும் அருவருப்பான ஒரு வளர்ச்சிக்கு வந்து விட்டனவா? இருபது வருடங்களாக ஒன்றாகக் குடும்பம் நடத்தி விட்டு இப்பொழுது முன்னாள் பங்காளிகளை ஒட்டுக் குழுக்கள். தூள் கடத்திகள், தலையாட்டிகள் என்று அழைக்கலாமென்றால், நாளை, கட்சியை உடைத்துக் கொண்டு வெளியேறுபவர்களுக்கு என்னென்ன பட்டங்களைச் சூட்டப் போகிறார்கள்?

# தனது முயற்சிகளுக்கு முன்னால் உள்ள சவால்களை எதிர் கொள்ள தயாராகும் ரணில்

கட்டுரையாளர்:
கொழும்பில் இருந்து
கலாநிதி
– ஜெகான் பெரேரா –



பாராளுமன்றக் கூட்டத் தொடரை ஒத்தி வைத்திருப்பதன் மூலம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது பதவியின் அதிகாரத்தை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பொதுவில் நாட்டுக்கும் நினைவு படுத்தியிருக்கிறார். பாராளுமன்ற கூட்டத் தொடரை திடீரென்று ஒத்தி வைப்பதற்கு ஜனாதிபதிக்கு வெளிப்படையான காரணம் எதுவுமில்லை. பொது நிதி, அரசாங்க நிறுவனங்கள் தொடர்பான முக்கியமான குழுக்கள் உட்பட 40க்கும் அதிகமான பாராளுமன்ற குழுக்கள் செயலிழந்து விட்டன.

பெப்ரவரி 4 இலங்கையின் 75 வது சுதந்திரதினக் கொண்டாட்டங்களுக்கு பிறகு பெப்ரவரி 8 பாராளுமன்றம் மீண்டும் கூடும் போது 2048 ஆம் ஆண்டு சுதந்திரத்தின் நூற்றாண்டு கொண்டாட்டங்கள் வரை நடைமுறைப்படுத்தப்பட இருக்கும் புதிய கொள்கைகள் மற்றும் சட்டங்கள் பற்றி ஜனாதிபதி அறிவிப்பார் என்று அவரது அலுவலகம் அறிவித்திருக்கிறது.

ஒப்பீட்டளவில் வளர்ச்சியடையாத வறுமைப்பட்ட விவசாய சமுதாயமாக இருந்த சிங்கப்பூரை பிரதமர் லீ குவான் யூ 25 வருடங்களில் உலகின் மிகவும் வளர்ச்சியடைந்த நாடுகளில் ஒன்றாக மாற்றிக் காட்டினார். அதே போன்று இலங்கையையும் 25 வருடங்களில் வளர்ச்சியடைந்த நாடாக மாற்றும் இலக்கை ஜனாதிபதி கொண்டிருக்கிறார்.

நாடு எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் தனது நிலைப்பாடுகளை வெளிப்படுத்துவதில் ஜனாதிபதி விக்கிரமசிங்க முனைப்புடன் செயற்படுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

அண்மையில் முஸ்லிம் மதத் தலைவர்களின் மகாநாடொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் சமூகம் நவீனமயமாக வேண்டும் என்றும் அதே போன்றே மத நடை முறைகளும் நவீனமயமாக வேண்டிய தேவை இருக்கிறது என்று உறுதிபட கருத்து தெரிவித்தார். பொருளாதாரத்தை மீட்டெடுத்து பிரச்சினைகளை தீர்த்து வைப்பது தொடர்பிலும் தனது நிலைப்பாடுகளை வலுவான முறையில் அழுத்திக் கூறினார்.

வரியிறுப்பாளர்களின் கொள்வனவு ஆற்றலை பலவீனப்படுத்தியிருக்கும் கடுமையான வரி அதிகரிப்புகளுக்கு பரந்தளவில் எதிர்ப்பு கிளம்பியிருக்கிறது. முதலில் வரியிறுப்பாளர்கள் பணவீக்கத்தின் தாக்கத்தை தாங்கிக் கொள்ள வேண்டியிருந்தது. வெளிநாட்டு கடன்களை மீளச் செலுத்தக் கூடிய நிலையில் இல்லையென்று கூறி அரசாங்கம் வங்குரோத்து நிலையைப் பிரகடனம் செய்த போது பணவீக்கம் 80 சதவீதம் வரை உயர்ந்து காணப்பட்டது.

தற்போது வரிகள் 36 சதவீதம் உயர்ந்ததை அடுத்து வரியிறுப்பாளர்கள் தங்களது மெய்யான வருமானம் பெருமளவுக்கு குறைந்து விட்டதை காண்கிறார்கள். ஆனால் அரசாங்கம் நெகிழ்வுப் போக்கை காட்டுவதாக இல்லை. நிதியமைச்சை தனது பொறுப்பில் வைத்திருக்கும் ஜனாதிபதி விக்கிரமசிங்க வரிகள் தொடர்பான விவகாரத்தில் பொதுமக்கள் மத்தியில் காணப்படும் உணர்வுகளுக்கு எதிராகவே செயற்படுகின்றார். அரசாங்க செலவினங்கள் மற்றும் அபிவிருத்தி நோக்கங்களுக்கு பெருமளவில் வரி விதிப்புக்களை தவிர்த்து மானியங்களை மக்களுக்கு வழங்கிய பல தசாப்த கால அரசாங்கங்களின் கொள்கைகளில் இருந்து விடுபடுவதற்கு நாட்டை நிர்ப்பந்திப்பதற்கு அவர் உறுதி பூண்டிருக்கிறார் போன்று தெரிகிறது.



இலங்கையில் வரி அறவீடுகள் மூலம் அரசாங்கம் பெறுகின்ற வருமானம் 8 சதவீதத்துக்கும் குறைவாக இருக்கும் அதேவேளை மற்றைய நாடுகளின் வரி வருமானம் 20 – 25 சத வீதமாக காணப்படுகிறது. உள்நாட்டில் வரி அறவீடுகளின் மூலமாக வளங்களைப் பெருக்குவதை விடுத்து வெளிநாட்டு கடன்கள் மூலமாக செலவினங்களை சமாளிப்பதன் விளைவாக நீண்ட காலமாக பொருளாதாரம் மந்த வளர்ச்சியில் இருந்து வருகிறது. பொருளாதார வீழ்ச்சிக்கு முன்னரும் கூட இதுவே நிலைமை

## 13வது திருத்தம்

உறுதியான நிலைப்பாட்டை எடுப்பதற்கு ஜனாதிபதி தீர்மானித்திருக்கும் இன்னொரு விவகாரம் இனநெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கான முயற்சிகளாகும். இனத்துவ தேசியவாதத்துக்கு பணிந்து போன அரசாங்கங்களினாலும் அரசியல் தலைவர்களினாலும் நீண்ட காலமாக இனநெருக்கடியை தீர்க்க முடியாமல் போய்விட்டது. இலங்கையின் இன, மத பிளவுகளின் பின்னணியில் இனத்துவ தேசியவாதியாக காட்டிக் கொள்வது அரசியல்வாதிகளைப் பொறுத்தவரை, வாக்குகளைப் பெற்று தேர்தல்களில் வெற்றி பெறுவதற்கு நிச்சயமான ஒரு வசதியாக இருந்து வந்திருக்கிறது.

விட்டுக் கொடுப்பின் அடிப்படையில் காணப்பட்ட தீர்வுத் திட்டங்களை இது காலவரையில் இலங்கையில் எந்தவொரு தலைவரினாலும் நடை முறைப்படுத்த முடியாமல் போய் விட்டது. இறுதியாக வந்த தீர்வு திட்டம் அரசியலமைப்புக்கான 13 வது திருத்தமாகும். அதற்கு முன்னர் செய்து கொள்ளப்பட்ட 1957 பண்டாரநாயக்க செல்வநாயகம் ஒப்பந்தம், 1965 டட்லிசேனநாயக்க செல்வநாயகம் ஒப்பந்தம் ஆகியவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான தொடக்க முயற்சிகளைக் கூட முன்னெடுக்க முடியாமல் போய் விட்டது. இனநெருக்கடி மற்றும் தேசிய நல்லிணக்கம் தொடர்பில் ஆராய்வதற்கு கூட்டிய சர்வகட்சி மகாநாட்டில் அந்த முயற்சிகளை எதிர்ப்பவர்களை மடக்குவதற்கு ஜனாதிபதி விக்கிரமசிங்க துணிச்சலை வெளிப்படுத்தியதைக் காணக் கூடியதாக இருந்தது. மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு தனக்கு இருக்கக் கூடிய நியாயப் பாட்டை சவாலுக்கு உட்படுத்துவதில் நாட்டம் காட்டிய இனத்துவ தேசியவாத பாராளுமன்ற உறுப்பினர்களுடன் அவர் வாக்கு வாதத்தில் ஈடுபட்டார். தற்போதைய சட்டத்தை நடைமுறைப் படுத்துவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி என்ற முறையால் எனது பொறுப்பாகும். சுமார் 37 வருடங்களாக 13வது திருத்தம் அரசியலமைப்பின் அங்கமாக இருந்து வருகிறது. நான் அதை நடை முறைப்படுத்த வேண்டும் அல்லது யாராவது அரசியலமைப்புக்கான 22வது திருத்தத்தை பாராளுமன்றத்தில் தனிநபர் சட்ட மூலமாக கொண்டு வந்து அதை ஒழிக்க வேண்டும். அத்தகைய ஒரு சட்ட மூலம் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை வாக்குகளினால் தோற்கடிக்கப்படுமாக இருந்தால் 13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டியிருக்கும். அந்த திருத்தத்தை நடைமுறைப்படுத்தப் போவதுமில்லை, ஒழிக்கப் போவதுமில்லை என்று இரண்டும் இடைநடுவில் நாம் நிற்க முடியாது என்று அவர் கூறினார்.

1987 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றப்பட்ட காலம் தொட்டு 13வது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுதப்படாமல் இருந்து வருகிறது.

ஜனாதிபதி விக்கிரமசிங்க அமைச்சராகவும் பிரதமராகவும் இருந்த அரசாங்கங்கள் உட்பட பல அரசாங்கங்கள் அந்த திருத்தத்தை கணிசமான அளவுக்கு குறிப்பாக காணி அதிகாரம் மற்றும் பொலிஸ் அதிகாரம் உள்ளடங்கலாக அதிகாரப் பகிர்வுக்கு உள்ளாக்கி நடைமுறைப் படுத்துவதற்கு தவறி விட்டன.

கூட்டத்தொடர் ஒத்தி வைப்பிற்கு பிறகு பாராளுமன்றம் மீண்டும் பெப்ரவரி8 கூடும்போது முன்னோக்கிச் செல்வதற்கான வழிவகைகள் குறித்து பாராளுமன்றத்துக்கும் நாட்டு மக்களுக்கும் உரையாற்றுவதற்கு ஜனாதிபதிக்கு வாய்ப்பு கிடைக்கும். தனது தற்துணிபின் அடிப்படையில் பாராளுமன்ற கூட்டத் தொடரை ஒத்தி வைப்பதற்கு தனக்கிருக்கும் அதிகாரத்தை வெளிக்காட்டிய ஜனாதிபதி இனநெருக்கடிக்கு தீர்வைக் காண்பதற்கான தனது நோக்கையும் தேசிய நல்லிணக் த்துக்கு பின்பற்ற வேண்டிய பாதை வரைபடத்தையும் முன் வைக்கக்கூடியதாக இருக்கும்.

## முரண்நகையான கடும் நடவடிக்கை

தற்துணிபின் அடிப்படையில் பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கான அதிகாரத்தை ஜனாதிபதி பெப்ரவரி 20 பெறுவார் என்பது குறிப்பிடத்தக்கது. பாராளுமன்ற கூட்டத் தொடரை திடீரென்று ஒத்தி வைத்ததன் மூலம் அதே போன்று திடீரென்று அதை கலைப்பதற்கான அதிகாரத்தையும் விரைவில் பெறப் போகும் செய்தியை ஜனாதிபதி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் நாட்டுக்கும் கூறியிருக்கிறார்.

தற்போதைய பாராளுமன்றம் தெரிவு செய்யப்பட்டு பெப்ரவரி 20 சரியாக இரண்டரை வருடங்கள் நிறைவடைகின்றது. இரண்டரை வருடங்களுக்கு பிறகு பாராளுமன்றத்தை கலைப்பதற்கான அதிகாரத்தை அரசியலமைப்புக்கான 20வது திருத்தம் ஜனாதிபதிக்கு வழங்குகிறது. ஆளும் கட்சியின் பெரும்பாலான பாராளுமன்ற உறுப்பினர்கள் மக்கள் மத்தியில் சென்று வாக்கு கேட்டு பிரசாரம் செய்யக் கூடிய நிலையில் இல்லை. இத்தகைய இடர்மிகு சூழ்நிலையில் அவர்கள் ஜனாதிபதிக்கு சவால் விடுக்கவோ அல்லது 13வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கான அவரின் உறுதிப்பாட்டை எதிர்க்கவோ விரும்ப மாட்டார்கள்.

மறுபுறத்தில், ஜனாதிபதி பாராளுமன்றத்தை வழிக்கு கொண்டு வந்தாலும் கூட அதனால், இனநெருக்கடியில் விட்டுக் கொடுப்பைச் செய்து நிலைபேறான அரசியல் தீர்வொன்று காணப்படக்கூடிய சூழ்நிலையை உருவாக்குவதில் வெற்றியை உறுதி செய்யமுடியும் என்று கூறுவதற்கில்லை. இனநெருக்கடி வேறுபட்ட இன, மத சமூகங்கள் மத்தியில் புராதன உணர்வுகளைத் தூண்டுகிறது. அரசியல் கட்சிகளும் அரசியல்வாதிகளும் பல தசாப்தகால இனநெருக்கடிக்கும் போருக்கும் வழிவகுத்த வில்லன்களாக நோக்கப்படுகிறார்கள். ஆனால் நாட்டில் உள்ள நெருக்கடி அரசியல் கட்சிகளுக்கும் முந்தியதாகும். இலங்கையின் சமூகத் தலைவர்கள் விடுத்த கோரிக்கையை அடுத்து பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியாளர்கள் 1928 ஆம் ஆண்டு சுயாட்சிக்கு நாடு தயாராக இருக்கிறதா என்பதை உறுதி செய்து கொள்ள ஆணைக் குழுவொன்றை அனுப்பினார்கள். அதன் மதிப்பீடு எதிர் மறையானதாக இருந்தது.

பெரிய சமூகத்தின் பிரதிநிதிகள் தங்களது நலன் தேசிய நலன் என்ற நிலைப்பாட்டை கொண்டவர்களாக இருந்தார்கள் என்றும் தங்களுக்குள் முரண்பாடுகளைக் கொண்ட சிறிய சமூகங்கள் சகலதினதும் பிரதிநிதிகள் பெரிய சமூகத்துக்கு எதிராக ஐக்கியப் பட்டவர்களாக இருந்தார்கள் என்று டொனமூர் ஆணைக்குழு அதன் அறிக்கையில் எழுதியது.

அதனால், காலங்காலமாக நீடித்து வந்த பிரிவினை உணர்வுகளுக்கு இரையாகாமல் இருப்பது சிவில் சமூகத்தின் முக்கிய பொறுப்பாகும். இனநெருக்கடிக்கான தீர்வு மற்றும் 13வது திருத்தம் சாத்தியமாக்குகின்ற வகையிலான இனங்களுக்கிடையிலான அதிகாரப் பரவலாக்கலின் அவசியம் குறித்து மக்களுக்கு விளங்கப்படுத்துவதற்கு சிவில் சமூகத்தில் அறிவார்ந்த தலைவர்கள் பற்றுறுதியுடன் பாடுபடவேண்டும்.

இதற்கான அறிகுறிகளை அறகலய போராட்டம் உச்சக் கட்டத்தில் இருந்த போது காணக் கூடியதாக இருந்தது. அந்த போராட்டத்துக்கு தலைமை தாங்கிய இளைஞர் யுவதிகள் இனம், மதம், சாதி அடிப்படையில் எந்தவிதமான பாரபட்சமும் இன்றி சகலரும் சமத்துவமான குடிமக்களாக இருக்க வேண்டும் என்று பகிரங்கமாக முழக்கத்தை எழுப்பினார்கள். குறுகிய தேர்தல் நோக்கங்களுக்காக இனத்துவ தேசியவாத அரசியல்வாதிகள் மேற்கொள்கின்ற சூழ்ச்சித்தனமான நடவடிக்கைகளுக்கு இரையாகாமல் (20ம் பக்கம் பார்க்க)

# இரா.சம்பந்தர்:- தோல்வியின் அடையாளம்

விடுதலைப் புலிகளின் வீழ்ச்சி இராஜவரோதயம் சம்பந்தனை தமிழ் மக்களின் தலைவராக்கியது. அவர் தமிழ் தேசிய அரசியலில் தவிர்க்க முடியாதவொரு நபரானார். ஈழப்போராட்ட காலத்திலும், அதற்கு முன்னரும், தமிழ் தேசிய அரசியலில் சம்பந்தனென்னும் பெயர் தீர்க்கமான பங்கு எதனையும் வகித்திருக்கவில்லை.

திம்பு பேச்சுவார்த்தையில் பங்குகொண்டவர் என்பதை தவிர. இந்த பின்னணில் நோக்கினால், சம்பந்தன் ஓர் அரசியல் ஆளுமையாக செயலாற்றுவதற்கான காலமென்பது, 2009இற்கு பின்னர் தான் வாய்த்தது. இந்த அடிப்படையில், அவரது தலைமைத்துவத்திற்கு ஒரு வரலாற்று முக்கியத்துவம் இருந்தது. அதாவது, தமிழ் தேசிய அரசியலானது, அதுவரையில் யாழ்ப்பாண தலைமைத்துவங்களினாலேயே முன்னெடுக்கப்பட்டிருந்தது. வரலாற்றில் முதல் முதலாக கிழக்கு மாகாணத்தை சேர்ந்த ஒருவர் தமிழ் தேசிய அரசியலுக்கு தலைமையேற்றார்.

இந்த அடிப்படையில் சம்பந்தனது தலைமைத்துவம் கவனிப்புக்குரியதாக இருந்தது. அவரது தலைமைத்துவத்திற்கு இன்னொரு வரலாற்று சிறப்புமிருந்தது. அதாவது, ஈழப் போரின் வீழ்ச்சிக்கு பின்னரான அரசியலை வழி நடத்தும் வரலாற்று பொறுப்பு அவருக்கு வாய்த்தது.

முன்னாள் ஆயுத இயக்கங்கள் மற்றும் அரசியல் கட்சிகள் அனைத்தையும் ஓரே குடையின் கீழ் வழி நடத்துவதற்கான வாய்ப்பை பெற்ற முதல் அரசியல்வாதியும் சம்பந்தன் தான். இந்த பின்புலத்தில், அவரது தலைமைத்துவத்தை ஏற்றுக் கொள்ள எவருமே பின்நிற்கவில்லை.

வரலாற்றில் முதல் முதலாக, வடக்கு தலைமைகள் அனைவருமே, கிழக்கு மாகாணத்தை சேர்ந்த மூத்த அரசியல்வாதி ஒருவரின் தலைமைத்துவத்தின் கீழ் ஒன்றிணைந்தன. இணைந்து பயணித்தன. முன்னாள் ஆயுத இயங்கங்களும் மிதவாத அரசியல் கட்சிகளும் ஓரணியாக பயணிப்பதற்கான அரசியல் சூழல் உருவாகியது. இந்த வாய்ப்பை, புதிய அரசியல் சூழலை சம்பந்தனால் ஆக்கபூர்வமாக பயன்படுத்த முடிந்ததா?

சம்பந்தன் இலங்கை தமிழரசு கட்சியின் முன்னணி செயற்பாடாளராக ஒரு போதுமே இருந்ததில்லை. அவர், தமிழர் விடுதலைக் கூட்டணியின் வழியாக அரசியலுக்குள் பிரவேசித்தவர். தமிழர் விடுதலைக் கூட்டணி, 1976இல், தனி நாட்டுக்கான வட்டுக்கோட்டை தீர்மானத்தை நிறைவேற்றியது. இந்த கோசத்துடன் 1977 பொதுத் தேர்தலில் போட்டியிட்டது. இந்தத் தேர்தலில், திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிட்டதன் மூலம் தான், சம்பந்தன் முதன்முதலாக நாடாளுமன்றம் சென்றார்.

இதிலுள்ள சுவார்சியமான விடயம். அதன் பின்னர் மீண்டும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சின்னமான உதயசூரியன் சின்னத்தில் 2001இல் தான், சம்பந்தன் தேர்தலில் பெற்றி பெற முடிந்தது. இடைப்பட்ட காலத்தில் சம்பந்தன் எந்தவொரு தேர்தல்களிலும் வெற்றி பெறவில்லை. 1994இல், திருகோணமலையில், தங்கத்துரையே வெற்றி பெற்றிருந்தார். தோல்வியடைந்த சம்பந்தன், பதவியை விட்டுத் தருமாறு தங்கத்துரையிடம் கேட்ட கதையை, திருகோணமலையின் பழைய தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் அறிவார்கள். தங்கத்துரை 1997இல், சிறிசன்முகா இந்து மகளீர் கல்லூரியில் இடம் பெற்ற தாக்குதலின் போது, கொல்லப்பட்டார். அதன் பின்னர் அவரது இடத்திற்கு சம்பந்தன் நியமிக்கப்பட்டார்.

ஈழ ஆயுத விடுதலைப் போராட்ட காலத்தில் சம்பந்தன் அதன் மீதான தீவிர ஆதரவாளராக ஒரு போதுமே இருந்ததில்லை. முக்கியமாக விடுதலைப் புலிகள் இயக்கத்தை சம்பந்தன் ஒரு போதுமே ஏற்றுக் கொண்டவரல்ல.

இவ்வாறானதொரு பின்னணியில் தான், சம்பந்தன் விடுதலைப் புலிகளால் இலக்கு வைக்கப்பட்ட நபரானார். சந்திரிக்கா குமாரதுங்கவுடன் நெருக்கமாக இருந்த காலத்தில், சம்பந்தன் விடுதலைப் புலிகளின் கொலைப்பட்டியலில் இருந்ததாகவே பரவலாக பேசப்பட்டது. 2012இல், சம்பந்தன் ஆற்றிய பாராளுமன்ற உரையொன்றின் போது, அவரே இதனை குறிப்பிட்டிருக்கின்றார்.



2001இல், இடம்பெற்ற நாடாளுமன்ற தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி 109 ஆசனங்களோடு வெற்றிபெற்றது. ரணில் விக்கிரமசிங்க ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட காலமானது, விடுதலைப் புலிகள் அமைப்பை பொறுத்த வரையில், முக்கியமானதொரு திருப்புமுனைக்குரிய காலமாக இருந்தது.

2001 செப்டம்பரில், அமெரிக்க இரட்டை கோபுரங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இஸ்லாமிய பயங்கரவாதத் தாக்குலைத் தொடர்ந்து, உலக அரசியல் நிலைமைகள் சடுதியாக மாற்றமடைந்தன. பயங்கரவாதத்தின் மீதான உலகளாவிய யுத்தத்தை அமெரிக்கா பிரகடணம் செய்தது. இவ்வாறானதொரு சூழலில் தான் விடுதலைப் புலிகள் அமைப்பு, ஒரு தலைப்பட்சமாக போர் நிறுத்தத்தை அறிவித்தது. சமாதான பேச்சுவார்த்தைகள் ஆரம்பித்தன. இதே 2001இல்தான் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் உருவானது.

சமாதான பேச்சுவார்த்தை காலத்தில் சம்பந்தனுக்கு எந்தவொரு முக்கியத்துவமும் இருந்திருக்கவில்லை. விடுதலைப் புலிகளின் தலைமைத்துவத்தை ஏற்றுக் கொண்டு, பொங்கு தமிழ் நிகழ்வுகளில் பங்கு கொள்வது, அவர்களது கூட்டத்தில் பேசுவது என்பதை தவிர பிரத்தியேக முக்கியத்துவங்கள் இருக்கவில்லை. ஏனெனில் விடுதலைப் புலிகளின் காலத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு, விடுதலைப் புலிகள் அமைப்பின் கிளையமைப்பாகவே செயற்பட்டிருந்தது.

2004இல் இடம்பெற்ற நாடாளுமன்ற தேர்தலின் போது, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வெற்றிக்காக விடுதலைப் புலிகள் அமைப்பு மாவட்டங்கள் தோறும் பணியாற்றியிருந்தது. இதன் காரணமாகவே, 2004இல், திருகோணமலையில் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களை பெற முடிந்தது. 2005இல், இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலின் போது, ரணில் விக்கிரமசிங்கவை தோற்கடிக்கும் நோக்கில், விடுதலைப் புலிகள் அமைப்பு தேர்தல் பகிஸ்கரிப்பை அறிவித்திருந்தது. இந்த முடிவை அன்றைய தமிழ் தேசியக் கூட்டமைப்பும் ஆதரித்திருந்தது. உண்மையில் இதனை சம்பந்தன் எதிர்த்திருக்க வேண்டும். ஆனால் சம்பந்தன் எதிர்க்கவில்லை. ஏனெனில் விடுதலைப் புலிகளை விரோதித்துக் கொள்ள சம்பந்தன் விரும்பவில்லை. சம்பந்தனும் கூட்டமைப்பும் அன்றைய சூழலில் முற்றிலும் விடுதலைப் புலிகள் அமைப்பின் கட்டுப்பாட்டுக்குள் இருந்தனர் என்பதற்கு, இதனை விடவும் வேறு சான்றுகள் தேவையில்லை.

ரணில் விக்கிரமசிங்கவின் தோல்வியை தொடர்ந்து அரசியல் நிலைமைகள் வேகமாக மாற்றமடைந்தது. தேர்தல் பகிஸ்கரிப்பில் தொடங்கிய புலிகளின் புதிய அரசியல் நகர்வுகள், இறுதியில் அவர்களுக்கான புதைகுழியானது. இந்தப் பின்புலத்தின் தான் சம்பந்தனது புதிய அரசியல் அவதாரம் ஆரம்பிக்கின்றது. அதுவரையில் எந்தவொரு முக்கியத்துவமற்றிருந்த இராஜவரோதயம் சம்பந்தன் எவராலும் தவிர்க்க முடியாதவராக மாறுகின்றார். உள்நாட்டிலும், ராஜதந்திர தரப்பினர் மத்தியிலும் கவனிப்புக்குரிய தமிழ் தலைவரென்னும் அந்தஸ்த்தை பெறுகின்றார்.

சம்பந்தனது ஆளுமைக்குரிய காலமாக 2010 தொடக்கம் 2020 வரையான காலப் பகுதியை மட்டுமே குறிப்பிட முடியும். சம்பந்தனது ஆரம்பகால நகர்வுகளை உற்று நோக்கினால் ஒரு விடயத்தை தெளிவாகப் பார்க்கலாம் விடுதலைப் புலிகள் அமைப்பு (பிரபாகரன்-பாலசிங்கம்) எந்த இடத்தை சரியாக விளங்கிக் கொள்ளா முடியாமல் சறுக்கியதோ, அந்த இடத்தை கெட்டியாக பற்றிக் கொள்வதையே சம்பந்தன் ஒரு பிரதான வழிமுறையாக பற்றிக் கொள்ள முற்பட்டார்.

அதாவது, இந்திய, அமெரிக்க ஆதரவை வெற்றி கொள்ள வேண்டும். 2010, ஜனாதிபதி தேர்தலில் ஜெனரல் சரத் பொன்சேகாவை ஆதரித்ததிலிருந்து, 2015இல் மைத்திரிபால சிறிசேனவிற்கு ஆதரவாக செயற்பட்டதுவரையில், அனைத்துமே இந்திய மற்றும் மேற்குலக விருப்பங்களை ஆதரிப்பதாகவே இருந்தது. இந்திய மற்றும் அமெரிக்க விருப்பங்களுடன் முக்கியமாக புதுடில்லியின் ஆதரவை வெற்றி கொள்ளும் உபாயங்களை இந்தக் கட்டுரை வரவேற்கின்றது. அது தான் சரியானதும் புத்திசாலித்தனமான அரசியலுமாகும். ஆனால் 2010இற்கு பின்னர் கிடைத்த வாய்ப்புக்கள் எவற்றையுமே சம்பந்தன் முறையாகவும் நேர்மையாகவும் கையளவில்லை. இந்த இடத்தில்தான் சம்பந்தனது தோல்வியின் கதை ஆரம்பிக்கின்றது.

இந்த இடத்தில் ஒரு கேள்வி எழலாம். சம்பந்தனுக்கு முன்னர் இருந்தவர்கள் வெற்றி பெற்றவர்களா? பதில் சுலபமானது. அனைவருமே தோல்விடைந்தவர்கள் தான். ஆனால் அவர்கள் தோல்வியடைந்த காலமும், அன்றைய அரசியல் சூழலும் முற்றிலும் மாறுபட்டது. ஆனால் சம்பந்தனது காலத்தில் உள்ளுக்கும், வெளியிலும் எந்தவொரு சவாலும் இருந்திருக்கவில்லை.

அதே வேளை, போருக்கு பின்னரான அரசியல் சூழலை கையாளும் முழுமையான ஆளுமையுள்ள ஒருவராகவே சம்பந்தன் இருந்தார். அனைத்துமே சம்பந்தனது கட்டுப்பாட்டுக்குள் இருந்தது. சம்பந்தன் மீது அழுத்தங்களை பிரயோகிக்கக் கூடியளவிற்கு கூட்டமைப்புக்குள் எவரும் இருந்திருக்கவில்லை. அவர்கள் அனைவருமே சம்பந்தனை பின்தொடர்வதற்கு

கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
- யசீந்திரா -



தயாராகவே இருந்தனர். ஆனால் அனைத்தையும் சம்பந்தன் அவரது தலைமைத்துவ மோகத்தாலும், கட்சி மோகத்தாலும், அரசியல் நேர்மையின்மையாலும் போட்டுடைத்தார்.

2010இல், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூட்டமைப்பிலிருந்து வெளியேறினார். அவரைப் போன்ற சிக்கலான ஒருவரை கையாளுவதிலுள்ள சிக்கல்களை இந்தக் கட்டுரை புரிந்து கொள்ளுகின்றது. ஆனால் இதனை ஒரு படிப்பினையாகக் கொண்டு, ஏனையவர்களை தொடர்ந்தும் அரவணைத்துச் செல்லும் தலைமைத்துவத்தை சம்பந்தன் வழங்கியிருக்க வேண்டும். தமிழ் தேசியக் கூட்டமைப்பை பதிவு செய்து, அதனை ஒரு பலமான தேசிய இயக்கமாக மாற்ற வேண்டுமென்று ஏனைய கட்சிகளும், தமிழ் தேசியத்தின் மீது பற்றுக் கொண்டிருந்த புத்திஜீவிகளும் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்திருக்கின்றனர்.

ஆனால் சம்பந்தனோ, அவற்றை ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை. இதன் காரணமாக கூட்டமைப்பு பலவீனமடைந்து கொண்டே சென்றது. கூட்டமைப்பு பலவீனமடைவது தமிழ் தேசிய அரசியலை பலவீனப்படுத்துமென்னும், சிறிதளவு கரிசனை கூட சம்பந்தனிடம் இருக்கவில்லை. சம்பந்தனது தவறுகளால் இறுதியில் கூட்டமைப்பு சிதைவடைந்தது. கூட்டமைப்பின் தலைவராக இருந்து கொண்டே, கூட்டமைப்பை சிதைக்கும் முயற்சிகளுக்கு சம்பந்தன் துணை போனார்.

ஒரு அரசியல் அமைப்பின் தலைவரே, அதனை சிதைக்க முயற்பட்ட அதிசயம் தமிழ் தேசிய அரசியலில் மட்டுமே நிகழ்ந்தது. சம்பந்தனின் தவறுகள் இன்று அவர் உயிரோடு இருக்கின்ற போதே, கூட்டமைப்பை சிதைத்து விட்டது. கூட்டமைப்பிலிருந்து தமிழசு கட்சி வெளியேற முற்பட்ட போது, கூட்டமைப்பின் தலைவராக அதனை தடுக்க சம்பந்தன் எந்தவொரு முயற்சியையும் மேற்கொள்ளவில்லை.

இன்று மீளவும் தமிழ் அரசியல் உரையாடல்கள் 13வது திருத்தச்சட்டத்திற்கே திரும்பியிருக்கின்றது. இதனை முன் கூட்டியே கணித்து, அப்போதே பலரும் சுட்டிக்காட்டியிருந்தனர். இந்தக் கட்டுரையாளர் பல்வேறு சந்தர்பங்களில் இதனை வலியுறுத்தியிருக்கின்றார்.

ரணில்-மைத்திரி ஆட்சிக் காலத்தை உச்சளவில் பயன்படுத்தியிருக்க முடியும். தமிழர்களுக்கு வாய்ப்பான சூழல் அப்போதிருந்தது. ஆனால் சம்பந்தன் தான் தோன்றித்தனமாக அனைத்தையும் நாசமாக்கினார். வரமுடியாத அரசியல் யாப்பிற்காக ஐந்து வருடங்களை வீணாக்கினார். (20ம் பக்கம் பார்க்க)

# வீதியில் இறங்கிய பிக்குகள்! மீண்டும் திரும்பும் வரலாறு?

**கட்டுரையாளர்:**
**ஈழநாட்டிற்காக கொழும்பில் இருந்து**
**– பார்த்தீபன் –**

கோட்டா கோ ஹோம் என்ற போராட்டத்தின் உக்கிரத்தினால், கடந்த வருடத்தில் முடங்கிப் போயிருந்த தென்னிலங்கை, இப்போது, 13 வேண்டாம் என்ற போராட்டங்களால் முடங்கிப் போயிருக்கின்றது. அரசியலமைப்பில் உள்ள 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தப் போவதாக ஜனாதிபதி ரணில் அறிவித்திருக்கும் பின்னணியிலேயே இந்தப் போராட்டங்கள் தற்போது ஆரம்பமாகியிருக்கின்றது. பிரதான அரசியல் கட்சிகள் எதுவும் இப்போது இந்தப் போராட்டத்தில் இறங்கவில்லை. பிக்குகளின் அமைப்புக்களே இப்போது வீதிக்கு இறங்கியிருக்கின்றன.

கடந்த வருடத்தில் முழுமையாக நாட்டை முடக்கி வைத்த பொருளாதார நெருக்கடிக்கு அடிப்படையான காரணிகளில் ஒன்று இனநெருக்கடி. இது உணர்த்தப்பட்டிருக்கும் நிலையில் தான் அதற்கு நிரந்தரமான ஒரு தீர்வு காணப் படவேண்டும் என சர்வதேசம் அழுத்தம் கொடுத்தது.

இந்தியாவையும் இவ் விடயத்தில் திருப்திப் படுத்த வேண்டிய தேவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இருந்தது. இந்தப் பின்னணியில் தான் ஏற்கனவே அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டிருக்கின்ற 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது என்ற முடிவை ரணில் எடுத்திருந்தார். சுதந்திர தினத்துக்கு முன்னதாக தீர்வு காணப்படும் என டிசெம்பர் மாதத்தில் ஜனாதிபதி அறிவித்திருந்தார். பின்னர் சுதந்திர தினத்துக்கு முன்னதாக தீர்வு குறித்து அறிவிப்பதாகத் தெரிவித்தார். இப்போது 08 பெப் 2023 புதன்கிழமை பாராளுமன்றத்தில் அவர் நிகழ்த்திய உரையில் தன்னுடைய பாதை எவ்வாறானதாக இருக்கப் போகின்றது என்பதை வெளிப்படுத்தியிருக்கின்றார். ஒற்றையாட்சிக்குள் அதிக பட்ச அதிகாரப் பகிர்வை வழங்கி இனப்பிரச்னைக்கு தீர்வு காணப்படும் என்று இதன்போது தெரிவித்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பொலிஸ் அதிகாரம் பகிரப்படாது என்றும் கூறியுள்ளார்.



தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் பொலிஸ், காணி அதிகாரங்கள் தான் முக்கியமானவை. திட்டமிட்ட வகையிலான காணி அபகரிப்புத் தான் தமிழ் மக்கள் எதிர் கொள்ளும் மிகப்பெரிய பிரச்சினையாக இருக்கின்றது. தமிழ் மக்களுடைய பாரம்பரிய பிரதேசங்கள் இதனால் பறி போவதுடன், இவை சிங்கள மயமாவதற்கும் காணி அதிகாரங்கள் எம்மிடம் இல்லாமலிருப்பது தான் காரணம். அதனால் தான், காணி அதிகாரம் மாகாண சபைகளுக்குத் தேவை என்பதற்கு அதிகளவு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது.

அதேபோல, தமிழ்ப் பகுதிகளில் பணி புரியும் பொலிஸ் அதிகாரிகள் அனைவருமே சிங்களத்தில் தான் கதைப்பார்கள். போக்குவரத்துப் பொலிஸார் கூட, தமிழ் மக்களுடன் சிங்களத்தில் பேசுவதையும், தமிழ் மக்களை இரண்டாம் தரப் பிரஜைகள் போல நடத்துவதையும் காணக் கூடியதாக இருக்கின்றது. இதனை விட, வடக்கு கிழக்கில் இடம் பெற்ற பல்வேறு குழப்பங்களுக்கும் சிங்களப் பொலிஸாரின் அத்துமீறல்கள் தான் காரணமாக இருந்திருக்கின்றது.



பொலிஸ் அதிகாரம் எம்மிடம் இருக்க வேண்டும் என தமிழ்த் தரப்பினர் வலியுறுத்துவதற்கு இவை தான் காரணம். ஆனால், பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கும் இலங்கையை மீட்பதற்கு முற்பட்டிருக்கும் ரணில் விக்கிரமசிங்க, சிங்களவர்களின் சீற்றத்துக்கு உள்ளாகாமல், தமிழ் மக்களையும் சமாளிப்பதற்கு முற்பட்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது. அதனால் தான், 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவேன் என தமிழ்த் தரப்புக்கும், இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கும் வாக்களித்த ஜனாதிபதி இப்போது பொலிஸ் அதிகாரத்தை வழங்குவதற்கு பின்னடிக்கின்றார்.

13 குறித்து ஜனாதிபதி அறிவித்தமைக்கு சில காரணங்கள் இருந்தன. தமிழ்த் தேசியக் கட்சிகள் ஆறு இணைந்து இந்தியப் பிரதமருக்கு கடந்த வருடத்தில் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தன. அதில் முக்கியமாக 13 முழுமையாக நடைமுறைப்படுததப்பட வேண்டும் எனவும், அதற்கான அழுத்தங்களை இந்தியா கொடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டிருந்தது.

இந்தியாவும் இது தொடர்பான அழுத்தங்களை ரணிலுக்குக் கொடுத்திருந்தது. பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்குத் தேவையான உதவிகளை வழங்கிய இந்தியாவிடமிருந்து தொடர்ந்தும் உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கு, இந்தியாவைத் திருப்திப்படுத்த வேண்டிய தேவை ரணிலுக்கு இருந்தது. 13 தொடர்பாக ரணில் வெளியிட்ட அறிவிப்புக்களுக்கு இவை தான் காரணம்.

கோட்டா கோ ஹோம் போராட்டத்துக்குப் பின்னர் வீடுகளுக்குள் தலைமறைவாக இருந்த விமல் வீரவன்ச, உதய கம்பன்பில, சரத் வீரசேகர போன்ற சிங்கள மக்களின் மீட்பர்களாக தம்மைக் காட்டிக் கொள்பவர்கள் மீண்டும் களத்தில் இறங்குவதற்கு ரணிலின் 13 குறித்த அறிவிப்பை பயன்படுத்திக் கொள்கின்றார்கள். அறிக்கைகளை வெளியிடுவதற்கு மேலாக வீதிகளில் இறங்குவதற்கு இன்னும் அவர்கள் துணியவில்லை என்பதையும் அவதானிக்க முடிகின்றது.

அதேவேளையில் பிரதான அரசியல் கட்சிகள் எதுவும் ரணிலின் இந்த 13 குறித்த நகர்வுக்கு எதிராக போர்க்கொடி தூக்குவதற்குத் தயாராகவில்லை. சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி 13க்கு உட்பட்டதாக தீர்வொன்றைக் கொண்டு வருவதற்கு தாம் தயாராகவில்லை என்ற நிலைப்பாட்டைத் தான் வெளிப்படுத்தியிருந்தார்கள்.

அதேபோல பாராளுமன்றத்தில் பலம் வாய்ந்த கட்சியாக இருக்கும் பொதுஜன பெரமுன இதற்கு எதிராகச் செயற்படப் போவதில்லை என ஏற்கனவே உறுதியளித்திருக்கின்றது. அதன் தலைவர் மகிந்த ராஜபக்ஷ இதனை ஏற்கனவே உறுதிப்படுத்தியிருந்தார்.

இதனை விட மற்றொரு திருப்பமாக, இவ்வளவு காலமும் மாகாண சபை முறையையும், 13ஆவது திருத்தத்தையும் எதிர்த்து வந்த ஜே.வி.பி. மாகாண சபைகளுக்கான அதிகாரப் பரவலாக்கலை தாம் எதிர்க்கப் போவதில்லை என்பதை பகிரங்கமாகவே அறிவித்திருக்கின்றது. தமிழ் மக்கள் இதன் மூலமாக தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும் எனக் கருதுவதால் அதனை தாம் எதர்க்கப் போவதில்லை என அதன் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்திருக்கின்றார்.

ஆக, 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு பாராளுமன்றத்தில் எதிர்ப்புக்கள் இருக்கப் போவதில்லை என்பதை கட்சிகளின் இந்த நிலைப்பாடு உணர்த்துகின்றது.



உதிரிகளாகவுள்ள சிங்கள அரசியல்வாதிகள் சிலரும், பிக்குகளும் தான் இப்போது 13க்கு எதிராக போர்க்கொடி தூக்கியிருக்கின்றார்கள். ஆனால், இவ் விடயத்திலும் பிக்குகள் மத்தியில் பிளவுகள் காணப்படுகின்றது.

கடந்த வாரம் யாழ்ப்பாணம் வந்திருந்த பிக்குகளின் குழு ஒன்று, அங்கு சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளையும், சர்வ மதங்களின் தலைவர்களையும் சந்தித்தார்கள். இதன் போதும் 13 குறித்து தான் முக்கியமாகப் பேசப்பட்டது. அதிகபட்சமான அதிகாரப்பரவலாக்கல் மூலமாக இன நெருக்கடிக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்ற கருத்தை அவர்கள் இந்த சந்திப்புக்களின் பின்னர் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்கள்.

இதில் உள்ள பிரச்சினை என்னவென்றால், குறிப்பிட்ட பிக்குகள் 13 பிளஸ் என்பதை யாழ்ப்பாணத்தில் வந்து சொல்கின்றார்களே தவிர, அதனை கண்டிக்குச் சென்று மகாநாயக்கர்களிடம் சொல்வதற்குத் துணிவதாகத் தெரியவில்லை.

அதேபோல தென்னிலங்கையிலும் இதற்கான போராட்டம் ஒன்றை நடத்துவதற்கும் அஞ்சும் நிலையில் தான் அவர்கள் இருக்கின்றார்கள். யாழ்ப்பாணத்தில் அவர்கள் மேற் கொண்ட சந்திப்புக்கள், அதன் பின்னர் அவர்கள் தெரிவித்த கருத்துக்களுக்கு தமிழ்ப் பத்திரிகைகள் தான் முக்கியத்துவம் கொடுத்துள்ளனவே தவிர, சிங்கள ஆங்கில ஊடகங்கள் அவை தொடர்பாக அலட்டிக்கொள்ளவே இல்லை.

பிரதான அரசியல் கட்சிகள் மௌனமாக இருந்தாலும் பிக்குகள் மூலமாக 13 க்கு எதிரான உணர்வுகள் சிங்களவர்கள் மத்தியில் பரப்பப்படுவதை உணர முடிகின்றது.

1987இல் இலங்கை இந்திய உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட போதும், இது போன்ற போராட்டங்கள் பிக்குகளால் முன்னெடுக்கப்பட்டது. ஜே.ஆர். ஜெயவர்த்தன அதனை இராணுவத்தைப் பயன்படுத்தி அடக்கினார். அதன் மூலமாகவே பின்னர் 13ஆவது திருத்தச் சட்டம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது.

பண்டா செல்வா உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட போது கூட இதே போன்ற போராட்டங்கள் பிக்குகளால் முன்னெடுக்கப்பட்டது. பிக்குகள் அரசியலில் செல்வாக்குச் செலுத்தக் கூடியவர்களாக மாற்றமடைந்தது அதன் போது தான். இந்த எதிர்ப்புக்களுக்கு முகங் கொடுக்க முடியாத பண்டாரநாயக்க பின்னர் அந்த உடன்படிக்கையை கிளித்தெறிந்தார் என்பது வரலாறு. ஆனால், அதே காரணத்துக்காக பின்னர் பண்டாரநாயக்க, பௌத்த பிக்கு ஒருவரால் பின்னர் சுட்டுக்கொல்லப் பட்டார்.

பண்டா செல்வா உடன்படிக்கை நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் இன நெருக்கடிக்கான தீர்வு அப்போதே காணப்பட்டிருக்கும். பாரிய உயிரிழப்புக்களுக்கும், பொருளாதாரச் சீரழிவுகளுக்கும் காரணமாக இருந்த போரும் இடம் பெற்றிருக்காது. சிங்களத் தலைவர்கள் பிக்குகளின் இனவாதப் போராட்டங்களுக்கு அடி பணிந்ததன் விளைகளை நாடு அனுபவித்து விட்டது. இதே வரலாறு மீண்டும் திரும்பப் போகின்றதா? என்பது தான் தற்போது நடைபெறும் நிகழ்வுகளைப் பார்க்கும் போது எமக்கு எழும் கேள்வி!

# சுதந்திர இலங்கையில் சாத்தானிடம் வரம் கேட்கும் நிலை!

இலங்கை பொருளாதார ரீதியாக மீண்டெழுவது எப்பொழுது என்ற கேள்விக்கு இன்னும் பதில் இல்லை. ஆனால், ஐந்து தொடக்கம் பத்து ஆண்டுகளுக்குள் நாட்டில் யாருக்கும் அடிபணியாத பொருளாதார வலுவை உருவாக்குவேன் என்றிருக்கிறார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. எதனை ஆதரமாகக் கொண்டு, எப்படி அந்தப் பொருளாதார வலுவை உருவாக்கப் போகிறேன் என்று அவர் சொல்லவில்லை. அவர் மட்டுமல்ல, வேறு எந்தப் பொருளாதார நிபுணர்களும் கூட இலங்கையின் பொருளாதார மீட்சிக்கான வழிகள் எப்படி அமைய வேண்டும்? எவ்வாறு அமைய முடியும் என்று சொல்லவில்லை.

ஆக மொத்தத்தில் இலங்கையின் பொருளாதார மீட்சியைக் குறித்து எவருக்கும் எதுவுமே தெரியாத நிலையே தொடர்கிறது. ஏதோ நடக்கிறது. போகிற வரையில் போகட்டும் என்ற அளவில் தான் பலரும் உள்ளனர். கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பு நாடு எரிபொருளுக்கும் அத்தியாவசியப் பொருட்களுக்குமாகத் தெருவில் நின்ற போது பலருக்கும் பொருளாதார நெருக்கடி பெரிதாக உயிர்ப் பிரச்சினையாக இருந்தது. இப்பொழுது விலை அதிகம் என்றாலும் எல்லாமே கிடைக்கிறது. ஆகவே எப்படியாவது சமாளித்துக் கொள்வோம் என்றே பலரும் கருதுகிறார்கள். இதனால் தான் எல்லோரும் பொருளாதார நெருக்கடியை விட அரசியல் நெருக்கடியைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கின்றனர்.

இதில் எதிர்க்கட்சிகள் அடிக்கின்ற பம்பலும் பகடியும் சாதாரணமானதல்ல. தங்களிடம் ஆட்சி அதிகாரம் கிடைத்தால் தாம் என்ன செய்வோம் என்று எந்த விளக்கத்தையும் சொல்லாமலே சஜித், அநுர போன்ற தலைவர்கள் உள்ளனர். சங்கர் படத்தில் ஒரு நாள் முதல்வராக அர்ஜீன் வந்து அதிரடி செய்வதைப் போல இவர்களும் அதிரடிப்பர் என்று தான் இவர்களுடைய ஆதரவாளர்களில் பலரும் கருதிக் கொண்டிருக்கின்றனர். நாடோ மீட்கக் கடினமான புதைசேற்றில் மாண்டுள்ளது என்பதைக் குறித்த விளக்கம் எவருக்கும் இல்லை.

ஆகவே இந்த அரசியல் நெருக்கடி ஒரு போதும் தீரப ˙போவதில்லை. எத்தனை ஆண்டுகள் சென்றாலும் எத்தனை தலைமைகள் மாறினாலும். முக்கியமாக இனவாத அரசியலில் மாற்றம் நிகழப் போவதில்லை. அதற்கான சாயல்களையும் சாத்தியங்களையும் காணவே இல்லை. மக்கள் இனவாத அரசியலை ஆதரிக்கும் வரையில் மாற்றமோ மீட்சியோ ஏற்படாது.

இதெல்லாம் நமக்குத் தெரியாமலே நடத்தப்படுகின்ற, நம்மைப் பொம்மைகளாக்கி ஆட்டுவிக்கின்ற ஏகாதிபத்திய நாடுகளின் வல்லரசுகளின் கூட்டுச் சதி என்பதைப் பற்றி எவரும் சிந்திப்பதாகத் தெரியவில்லை. அப்படித் தெரிந்தாலும் அதைப் பற்றியெல்லாம் அவர்கள் பேசுவதாக இல்லை. பதிலாக இந்த வல்லரசுகளின் அங்கீகாரத்தையும் அனுசரணையையும் நட்பையும் பேணிக் கொள்ளவே பலரும் முற்படுகின்றனர். இதை அவர்கள் பகிரங்கமாகவே சொல்லிப் பெருமை அடித்துக் கொள்கிறார்கள். அந்தளவுக்குத் தான் நம்முடைய புத்திஜீவிகளின் அறிவுத் தராதரம் உள்ளது. சனங்களின் மீதான, சமூகம் மீதான, நாடு மீதான இவர்களுடைய பற்றுள்ளது.

அமெரிக்கா ஒரு பக்கம், இந்தியா இன்னொரு பக்கம், சீனா இன்னொரு பக்கம் என்று இலங்கையை மட்டுமல்ல, இலங்கையர் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு வல்லரசும் சுற்றி வளைத்துப் பிடிக்கப் பார்க்கிறது. இதற்காக இவை ஒவ்வொன்றும் நாட்டிலுள்ள புத்திஜீவிகள், ஊடகங்கள், ஊடகவியலாளர்கள், அரசியற் கட்சிகள், அரசியற் தலைமைகள் என தமக்குச் சாத்தியப்படக்கூடிய அனைத்துத் தரப்பையும் வளைத்துப் பிடிக்க முற்படுகின்றன. இதொரு




பகிரங்கப் போட்டியாகவே நடக்கிறது. இதனால் மாறி மாறி ஒவ்வொரு கட்சியையும் ஒவ்வொரு தரப்பையும் ஒவ்வொரு ஊடகவியலாளரையும் ஒவ்வொரு புத்திஜீவிகளையும் தூண்டில் போட்டுப் பிடிக்கின்றன வல்லாதிக்கச் சக்திகள். இந்த வல்லாதிக்கச் சக்திகள் லேசுப்பட்டவை அல்ல. சட்டைப் பின்னை (சட்டை ஊசியை), அப்பிளை விற்பதில் தொடக்கம் ஆயுதம், உணவு தொடக்கம் அனைத்தையும் நமக்கு விற்றுச் சம்பாதிப்பவை. நம்மைச் சுரண்டிப் பிழைப்பவை.

வல்லரசுகள், அவற்றின் தகுதியை விட்டு விட்டு இப்படிச் சட்டை ஊசியையும் விற்குமா என்று நீங்கள் கேட்கலாம். குண்டூசி, நெற்றில் ஒட்டும் ஒட்டுப் பொட்டு தொடக்கம் எதையும் விற்றுக் காசாக்குவதே சம்பாதிப்பதே அவற்றின் முதலாவது இலக்கு. அதனால் தான் அவை வல்லரசுகளாக இருக்கின்றன. அதனால்தான் அவை நம்முடைய ஊரில் உள்ள சில்லறை ஆட்களோடும் கூட்டு வைக்கின்றன, இரகசியமாக தம்முடைய காரியங்களைச் செய்து கொள்கின்றன.

இப்படியாக இருக்கும் ஒரு நிலையில் தான் இலங்கையின் பொருளாதாரம் எப்படி அமையப்போகிறது என்று நாம் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

தேசிய பொருளாதாரக் கொள்கை ஒன்று வகுக்கப்படாமல், பொருளாதார மறுசீரமைப்புத் திட்டம் ஒன்று உருவாக்கப்படாமல் அனைத்துத் தரப்பும் ஒன்றுபட்டு உழைக்காமல் பொருளாதார மீட்சியையோ மறுமலர்ச்சியையோ எட்ட முடியாது. ஒரு இடர்கால நெருக்கடியில் ஒருங்கிணையும் தன்மையோடு அனைவரும் ஒருங்கிணைந்து செயற்பட்டே இதைக் கடக்க முடியும். இதிலிருந்து மீள முடியும்.அதற்கு யாரும் தயாரில்லை. எல்லோரும் முட்டையில் மயிர் பிடுங்குவதிலேயே கண்ணும் கருத்துமாக உள்ளனர்.

ஐ.எம்.எவ்வின் கடனுதவி மூலமாக பொருளாதார மேம்பாட்டை எட்ட முடியும் என்றொரு அபிப்பிராயம் படித்தவர்கள் மட்டத்திற் கூட உண்டு. அதொரு மயக்கமே. ஐ.எம். எவ் என்பது இன்னொரு கடன்பொறி. நாட்டின் இறைமையையே இல்லாதொழிக்கும் சதி என்பதைப் பலரும் புரிந்து கொள்ளவில்லை. அதன் நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டால் தான் அதனுடைய அருளும் அனுசரணையும் கிட்டும். இல்லையென்றால் பெப்பே தான். இதே வேளை ஐ.எம்.எவ்விடம் மண்டியிடுவதைத் தவிர வேறு வழி இப்பொழுது இலங்கைக்கு இல்லை. ஆக சாத்தானிடம் வரம் கேட்கும் நிலையே இப்போதுள்ளது. இதாவது பரவாயில்லை. இனி வரப்போகும் நிலை தான் மிகப் பயங்கரமானது.என்ன தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திட்டங்களைச் சொன்னாலும் நாட்டின் பொருளாதாரத்தை மீட்பதாக இருந்தால் அதற்கு சில வழிமுறைகளே உண்டு. ஒன்று, உற்பத்தியைப் பெருக்குவது. குறிப்பாக ஏற்றுமதியை அதிகரிப்பது. இது இலகுவானதல்ல. உடனடிச் சாத்தியமுடையதும் அல்ல. ஆனால், இதை எட்டியே தீர வேண்டும். அது இப்பொழுது முடியாது. இரண்டாவது, அந்நியச் செலாவணியைத் திரட்டக் கூடிய வெளிநாட்டு வருமானத்தை அதிகரிப்பது. இதில் முக்கியமானது வெளிநாடுகளில் உள்ள வேலைவாய்ப்புக்காகச் சென்ற மக்கள் தமது பணத்தை இங்கே உரிய வழிமுறைகளுக்கு ஊடாக அனுப்புவது. இதற்கு புலம்பெயர் சமூகத்தினர் தயாரில்லை. அவர்கள் வேறு வழிமுறைகளுக்கூடாகவே தமது பணப் பரிவர்த்தனைகளைச் செய்கின்றனர். ஆகவே அவர்களிடம் அதை நாம் எதிர்பார்க்க முடியாது. அதில் அவர்கள் பல வகையான லாபங்களைப் பெற்று ருசிப்பட்டவர்கள். எளிதில் அதிலிருந்து மீண்டு நாட்டின் நலனுக்காகச் செயற்படுவர் என்றில்லை. அரசும் இதைக் குறித்துச் சிந்தித்து எளிய வழிமுறை


கட்டுரையாளர்
கிளிநொச்சியில் இருந்து
- கருணாகரன் -



களை உருவாக்கும் சாத்தியங்களும் இல்லை. அதை விட முக்கியமானது, இனமுரண்பாட்டு அரசியலை முடிவுக்குக் கொண்டு வராத வரையில் அவர்கள் அரசுக்கு எதிராகவே செயற்படுவர். அவர்களைப் பொறுத்தவரை இலங்கை அரசு என்பது எதிர்த்தரப்பு என்பதாகும். எனவே இதுவும் எதிர்பார்த்த அளவுக்குப் பெரிய நன்மைகளைத் தரும் என்றில்லை. அடுத்தது மூன்றாவது, சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதாகும். இதைச் செய்ய வேண்டும் என்றால் இதற்கு கதவுகளை அகலத் திறக்க வேண்டும். இந்தக் கதவு திறத்தல் என்பது சாதாரணமானதல்ல.

ஏறக்குறையத் தாய்லாந்தைப் போல கட்டற்ற பாலியல் பயன்பாட்டுக்கு (*Free sex routine*) இடமளித்தல் என்பதாக இது அமையும். கூடவே சிறார் துஸ்பிரயோகத்துக்கும் *Child abuse* க்கும் இடமளிக்க வேண்டியிருக்கும். அதாவது ஒன்று அல்லது இரண்டு தலைமுறை தன்னை விலை கொடுக்க வேண்டியிருக்கும். அப்பொழுது தான் நாட்டை கொஞ்சமாவது மீட்டெடுக்க முடியும். இதைப் படிப்பதற்கோ இதைப் பற்றிக் கேட்பதற்கோ உங்களுக்குக் கடினமாக இருக்கலாம். ஆனால், வேறு வழியில்லை.

இந்த நிலையை நாம் சந்தித்துத் தான் ஆக வேண்டும். இரண்டு தலைமுறைகள் நாட்டுக்காகத் தங்களைத் தியாகம் செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இரண்டு மூன்று தலைமுறை (22ம் பக்கம் பார்க்க)



# பழனியில் அகற்றப்பட்ட தமிழ் இறையோன் முருகனின் வேலினை மீண்டும் அதே இடத்தில் நிறுவ வேண்டும்!

பொதுவாக, இதுபோன்ற திட்டங பழனியில் அகற்றப்பட்ட தமிழ் இறையோன் முப்பாட்டன் முருகனது வேலினை மீண்டும் அதே இடத்தில் தமிழ்நாடு அரசு நிரந்தரமாக நிறுவ வேண்டும் என சீமான் வலியுறுத்தி உள்ளார்.

சென்னை, நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது, திண்டுக்கல் மாவட்டம், தமிழ் இறையோன் முப்பாட்டன் முருகனது பழனி மலை திருக்கோயில் அடிவாரத்தில் ஓடும் சண்முகா நதிக்கரையில் நிறுவப்பட்டிருந்த 24 அடி உயரமுள்ள உலோகத்திலான வேலினை தமிழ்நாடு அரசு அவசர அவசரமாக அகற்றியிருப்பது வன்மையான கண்டனத்திற்குரியது.

தைப்பூசத் திருவிழாவினை முன்னிட்டு கடந்த பல ஆண்டுகளாக மக்கள் வழிபட தற்காலிகமாக நிறுவப்படுகின்ற வேலினை, இந்த ஆண்டு அனுமதி மறுத்து வலுக்கட்டாயமாக அகற்றியிருப்பது எதேச்சதிகாரப் போக்காகும். தமிழ்நாட்டில் எண்ணற்ற வடநாட்டு சாமிகளுக்கும், சாமியார்களுக்கும் சிலைகளும், கோயில்களும், மடங்களும் பல்லாயிரக் கணக்கில் நிறுவப்பட்டுள்ளன.

ஒவ்வொன்றாக தமிழ்நாட்டில் நாளுக்கு நாள் புதிதாகப் பொது இடங்களில் முளைத்தும் வருகின்றன. அவற்றை எல்லாம் மக்களுக்கு இடையூறாக இருக்கிறது என்று கூறி அகற்றவோ, நிறுவக் கூடாது என்று தடுக்கவோ திமுக அரசிற்குத் துணிவிருக்கிறதா?.

அவற்றையெல்லாம் எவ்வித வரையறையும் இன்றி அனுமதித்து விட்டு, தமிழ் இறையோன் முப்பாட்டன் முருகனுக்காக சண்முகா நதிக்கரை ஓரத்தில் மெய்யன்பர்களால் தற்காலிகமாக வைக்கப்பட்ட வேலினை இரவோடு இரவாக அகற்றியது ஏன்? 60 ஆண்டுகள் ஆண்ட திராவிட ஆட்சியினரால் ஏராளமான நீர் நிலைகளும், வழித்தடங்களும், பொது இடங்களும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. அவற்றையெல்லாம் மீட்க எவ்வித நடவடிக்கையும் எடுக்காத திமுக அரசு, பொதுமக்கள் யாரும் தங்களுக்கு இடையூறாக இருப்பதாக புகார் தெரிவிக்காதபோது வேலினை அப்புறப்படுத்த வேண்டிய அவசியம் என்ன வந்தது?.



தமிழர்களின் மெய்யியல் கூறுகளைத் திருடி தன்வயப்படுத்திய வடநாட்டு ஆரியர்களிடமிருந்து அவற்றை மீட்டுக் காப்பாற்ற எவ்வித முயற்சியும் செய்யாத திராவிட ஆட்சியாளர்கள், அவற்றை மூட நம்பிக்கை, முட்டாள்தனம் என்றெல்லாம் விமர்சித்து தமிழர்களின் பண்பாட்டு அடையாளங்களையும், வழிபாட்டு முறைமைகளையும் ஆரியருக்குத் தாரை வார்த்தனர். *Also Read* – வாடகை வீடு கேட்பது போல் நடித்து மூதாட்டியிடம் நகை பறித்த கொள்ளையர்கள் அதுமட்டுமின்றி தமிழர் மெய்யியலையும், வழிபாட்டு முறைமைகளையும் தொடர்ந்து இழிவுபடுத்தியும் வருகின்றனர். அதன் நீட்சியாகவே தற்போது பழனியில் தற்காலிகமாக நிறுவப்பட்ட முருக வேலினை இரவோடு இரவாக அகற்றிய திமுக அரசின் அத்துமீறிய நடவடிக்கையாகும்.

கல் தோன்றி, மண் தோன்றா காலத்து முன்தோன்றிய மூத்தகுடியான தமிழ்க்குடியின் வீரத்தின் அடையாளமாகவும், போர்க்கலையின் வடிவமாகவும் திகழ்வது வேலாகும்.

ஒவ்வொரு ஆண்டும் பழனிமலைக்கு வரும் மெய்யன்பர்கள் சண்முகா நதிக்கரையில் நிறுவப்படும் முருகனது வேலினை வணங்கியும், புகைப்படம் எடுத்தும் மகிழ்ந்து வந்த நிலையில், அதனை திமுக அரசு அகற்றியது எவ்வகையிலும் ஏற்புடையதல்ல. ஆகவே, தமிழ்நாடு அரசு மெய்யன்பர்களின் கோரிக்கையை ஏற்று பழனிமலை சண்முகா நதிக்கரையில் நிறுவப்பட்டிருந்த தமிழ் இறையோன் முப்பாட்டன் முருகனது வேலினை அகற்றிய இடத்திலேயே நிரந்தரமாக நிறுவ நடவடிக்கை எடுக்க வேண்டுமென நாம் தமிழர் கட்சி சார்பாக வலியுறுத்துகிறேன்

# ரஷ்யா உக்ரைன் போர் ஏன் இன்னமும் தொடர்கிறது?

(21ம் பக்கத் தொடர்ச்சி) ஆசிய நாடுகள் சந்தேக கண்ணுடன் பார்க்கஆரம்பித்தன. தென் சீன கடலில் கோலோச்சி வந்த அமெரிக்க கடற்படை அடிக்கடி சீன போர் விமானங் களையும் போர்கப்பல்களையும் எதிர் கொள்ள ஆரம்பித்தன. இது அமெரிக்காவின் சீன உறவில் விரிசல்களை ஏற்படுத்தின. இப்போது சீனா தைவான் தீவை ஆக்கிரமிப்பதாக பயமுறுத்தி வருகிறது.

மேலும் 2013ல் ஷி சீனாவை ஆசியா மற்றும் ஐரோப்பிய பகுதிகளுடன் இணைத்து, சீனாவின் செல்வாக்கை பெருக்க 'பால மற்றும் சாலை இணைப்பு (*Belt and RoadInitiative*) திட்டத்தை பெரும் அளவில் மேற்கொண்டுள்ளார். இதன் விளைவாக சீனாவின் அரசியல் மற்றும்வணிக செல்வாக்கு தெற்கு மற்றும் மத்திய ஆசிய நாடுகளில் பெருமளவில் பரவி உள்ளது. அத்தகைய முயற்சிக்கு பாதுகாப்பு அளிக்க சீன போர்கப்பல்கள் இந்தியபசிபிக் பெருங் கடலில் அதிக அளவில் பிரவேசிக்க தொடங்கி உள்ளன. இந்தியாவின் சீன எல்லையில், சீனப்படைகள் அத்துமீறி பிரவெசிப்பது வழக்கமாகி விட்டது.

சீனாவின் பெருகி வரும் ஆதிக்கத்தை கட்டுக்குள் வைக்க இந்தியா, அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் குவாட் என்னும் நாற்கர கட்டமைப்பை அமைத்துள்ளன. இந்த முயற்சியை சீனா தனது ஆளுமைக்கு எதிரான சவாலாகப் பார்க்கிறது.

இத்தகைய சூழ்நிலையில், தொடர்ந்து வரும் உக்ரைன் போரில் உலகின் மூலோபாய பாதுகாப்பு அமைப்புகள் உருமாறி வருகின்றன. அமெரிக்க ஐரோப்பிய நாடுகள் ரஷ்யா மீது திணித்துள்ள பொருளாதார மற்றும் வியாபாரத் தடைகளை பெரும்பான்மையான ஆசிய ஆப்ரிக்க நாடுகள் பின்பற்ற மறுக்கின்றன. இவற்றில் இந்தியா, சீனா, துருக்கி, ஈரான், தென்ஆப்ரிக்கா, சவுதி அரேபியா ஆகிய நாடுகள் அடங்கும்.

இந்த நாடுகள் தங்கள் நாட்டின் சுய நலனுக்காகவே மையம் அத்தகைய முடிவுகளை எடுக்கின்றன. ஆகவே இந்த நாடுகள் ஒருங்கிணைந்து போரை நிறுத்த முயற்சிப்பார்களா என்பது சந்தேகமே. ஏனெனில், போரை முடிக்க பேச்சு வார்த்தைகள் துவக்கவே உக்ரைன் முன் வைத்துள்ள நிபந்தனை ரஷ்யா வசம் உள்ள ரஷ்ய வம்சாவளியினர் வாழும் கிழக்கு உக்ரைன் மற்றும் க்ரிமியா பகுதிகளை விட்டு முழுமையாக அகல வேண்டும் என்பதே. அதற்கு மாறாக, அமைதி பேச்சுவார்த்தைக்கு ரஷ்யாவின் நிபந்தனை செப்டம்பர் 2022 வரை தான் ஆக்கிரமித்த உக்ரைன் பகுதிகளை தன் வசம் நிரந்தரமாக அளிக்க வேண்டும் என்பதே.

இத்தகைய இழுபறியான சூழ்நிலையில், அமெரிக்காவும் நேட்டோ நாடுகளும் போரில் வெற்றி காணா விட்டாலும் ரஷ்யாவின் போர்திறனை அழிக்க கங்கணம் கட்டிக் கொண்டு செயல்படுகின்றன. ஆகவே அவை நேரடியாக போரில் ஈடுபட தயக்கம் காட்டினாலும், பொன்னையும் பொருளையும் அளித்து உக்ரைனை உசுப்பி விட்டுக் கொண்டிருக்கின்றன.

இந்த சமயத்தில் கோவிட் 19 தொற்று மகாமாரியின் விளைவாக, கடந்த இரண்டு ஆண்டுகளில் உலக பொருளாதாரத்தில் மிகப்பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

இந்தியா ஓரளவு இதன் தாக்கத்தில் இருந்து தன்னை மீட்டுக் கொண்டாலும், அமெரிக்கா, சீனா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்டுள்ள பொருளாதார சரிவு இந்த ஆண்டும் தொடரும் என்பது வல்லுனர்கள் கணிப்பு. உலக பொருளாதார தட்டுப்பாடு உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டு வர ஐ.நாவை ஊக்குவிக்குமா? அதுவும் சந்தேகமே.

ஆகவே வரும் மாதங்களில் போரின் உக்கிரம் குறைந்து, இரு நாடுகளும் களைத்தாலும் சீற்றம் காட்டுவதில் குறைவு இருக்காது.

இந்த இழுபறி இன்னும் எவ்வளவு காலும் நீடிக்கும்? தற்போது, போரின் போக்கை அனுமானிக்க, ஜெலன்ஸ்கி மற்றும் புடின் ஆகியோரின் ஜாதகத்தை டி.வி.ஜோசியர் தான் பார்க்க வேண்டும்

# இரா.சம்பந்தர்:- தோல்வியின் அடையாளம்

(17ம் பக்கத் தொடர்ச்சி) சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த போது, புதுடில்லியை எட்டியும் பார்க்கவில்லை. அமிர்தலிங்கம் எதிர்கட்சித் தலைவராக இருந்த போது, இந்திராகாந்தியுடன் நட்புறவை ஏற்படுத்தியிருந்தார். தமிழினத்திற்காக அந்தப் பதவியை உச்ச பட்டசமாக பயன்படுத்தியிருந்தார்.

ஆனால் மரியாதையுடன் புதுடில்லிக்கு விஜயம் செய்ய வேண்டிய சம்பந்தனோ, பத்தோடு பதினொன்றாக, அரசாங்க அமை ச்சர்களோடு இணைந்து புதுடில்லி சென்றிருந்தார். சம்பந்தனது எதிர்கட்சி தலைவர் தகுதியை பயன்படுத்தி புதுடில்லியின் ஆலோசனையுடன் 13வது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தும் விடயத்தை சிறப்பாக கையாண்டிருக்கலாம்.

ரணில்–மைத்திரி அரசாங்கமும் அதனை நிராகரித்திருக்காது. ஏற்கனவே 13 பிளஸ் தொடர்பில் வாக்குறுதியளித்திருந்த மகிந்த ராஜபக்சவும் ஒரு கட்டத்திற்கு மேல் அதனை எதிர்த்திருக்க வாய்ப்பில்லை. இறுதியில் தமிழ் இனத்திற்கு எந்தவொரு பயனுமில்லாமல் அனைத்தும் முடிவுற்றது. கோட்டபாய ராஜபக்ச அதிகாரத்தை கைப்பற்றியதை தொடர்ந்து மீளவும் அனைத்தும் பழைய நிலைமைக்கே திரும்பியது.

சம்பந்தனை புத்திக் கூர்மையுள்ளவரென்று சிலர் சொல்வதுண்டு. அது உண்மை தானா? பிராந்திய சக்தியான இந்தியாவின் பிரதமர், உலகின் செல்வாக்கு மிக்க தலைவர்களில் ஒருவர், கடந்த 21 வருடங்களாக இந்தியாவில் தொடர்ந்தும் வெற்றியை மட்டுமே கண்டு கொண்டிருந்தவரான, சிறி நரேந்திரமோடி கூட்டமைப்பை சந்திப்பதற்கு ஒரு வாய்ப்பை வழங்கியிருந்தார். புதுடில்லி வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டது.

ஆனால் சம்பந்தனோ, சில்லறைத்தனமான காரணங்களை கூறி அந்த சந்திப்பை பிற்போட்டார். மாவையின் மகனுக்கு திருமணம் அதற்கு போக வேண்டியிருக்கின்றது. இது தான், ஒரு பிராந்திய சக்தியின் தலைவரை சந்திப்பதை பிற்போடுவதற்கு சம்பந்தன் கூறியிருந்த காரணம். ஒரு பத்தாமாண்டு மட்டுமே படித்தவர் கூட, இவ்வாறானதொரு காரணத்தை கூறியிருக்க மாட்டார். இதுதான் சம்பந்தனது புத்திக் கூர்மையோ? அப்போதே கூட்டமைப்பின் பங்காளிகள் சம்பந்தனை கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பிலிருந்து அகற்றியிருக்க வேண்டும். ஏனெனில் அப்போதே கூட்டமைப்பின் தலைவராக இருக்கும் தகுதியை சம்பந்தன் இழந்து விட்டார்.

2010–2020 காலப்பகுதி வரையில் சம்பந்தனது அனைத்து நகர்வுகளுமே தோல்வியிலேயே முடிந்திருக்கின்றது. இன்று கூட்டமைப்பிலும் சம்பந்தன் இல்லை. தமிழரசு கட்சியிலும் சம்பந்தனை பொருட்படுத்த எவருமில்லை. தவறுகள் பின்னர் தவறுகள் மீண்டும் தவறுகள், இதுதான் கடந்த பத்துவருடங்களாக சம்பந்தன் செய்தவை. தமிழ் தேசிய அரசியல் வரலாற்றில் இராஜவரோதயம் சம்பந்தனது இடம், தோல்விக்கும், ஏளனத்திற்கும், அரசியல் முட்டாள்தனத்திற்குமான சான்றாகும்.

தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகள் தொடர்பில், இனிமேல், இடம் பெறப் போகும் எதற்கும் சம்பந்தன் காரணமாக இருக்கப் போவதில்லை. சம்பந்தன் எதிர்கட்சித் தலைவராக இருந்த போது, கொழும்பில் இடம் பெற்ற நிகழ்வொன்றில், 13வது திருத்தச்சட்டத்தை தாண்டி, நாங்கள் எங்கோ சென்று விட்டோமென்று கூறியிருந்தார்.

ஆனால் அதனை தாண்டி எங்கும் செல்லவில்லை, செல்லவும் முடியாதென்பதே, மீண்டுமொருமுறை நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. அவ்வாறாயின் அதனை தாண்டி எங்கோ சென்று விட்டோ மென்னும் வாதத்தின் பெறுமதியென்ன? இதனை சரியாக புரிந்து கொண்டு செயற்பட்டிருந்தால், சம்பந்தன் தோல்வியடைந்திருக்க வேண்டியதில்லை. இப்போது, சம்பந்தன் ஒரு தோல்வியின் அடையாளம் மட்டுமே!

# தனது முயற்சிகளுக்கு முன்னால்....

16ம் பக்கத் தொடர்ச்சி) இருப்பதற்கு அந்த இளைஞர்களும் யுவதிகளும் உறுதி பூண்டார்கள். அறிவுபூர்வமாக சிந்திக்கும் அந்த இளம் தலைவர்களுடன் ஆக்கபூர்வமான முறையில் பேச்சு வார்த்தைகளை நடத்தி பொது மன்னிப்பொன்றை வழங்கி பிரச்சினைகளுக்கான தீர்வின் பங்காளிகளாக மாற்றுவதற்கு பதிலாக அவர்களுக்கு எதிராக ஜனாதிபதி விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் கொடுமையான நடவடிக்கைகளை எடுப்பது ஒரு முரண் நகையாகும்.

# ரஷ்யா உக்ரைன் போர் ஏன் இன்னமும் தொடர்கிறது?

ரஷ்யா உக்ரைன் மீது கடந்த ஆண்டு பெப்ரவரி 24ந்தேதி தொடர்ந்த போர் புத்தாண்டில் தொடர்ந்து நீடிப்பது உலக அளவில் கவலை தரும் விஷயம். ஏற்கனவே, போரின் விளைவாக உக்ரைன் மற்றும் ரஷ்யாவில் இருந்து மற்ற நாடுகளுக்கு கோதுமை, சோளம் மற்றும் பெட்ரோலியம் சார்ந்த எரிபொருட்கள் ஆகியவற்றின் ஏற்றுமதிகள் தடைப்பட்டுள்ளன. அதன் விளைவாக ஆசிய ஆப்பிரிக்க நாடுகள் மட்டுமல்ல, ஐரோப்பிய நாடுகளும் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

அமெரிக்க பாதுகாப்பு துறை அனுமானப்படி இந்தப் போரில் ஈடுபட்டுள்ள இரு நாடுகளும் ஒட்டு மொத்தமாக இரண்டு லட்சம் வீரர்களை இழந்துள்ளன.

ஐ.நா மனித உரிமை ஆணையத்தின் கணிப்பின்படி ஜனவரி 15ந் தேதி வரை அப்போரில் குழந்தைகள் உட்பட 7000 அப்பாவி மக்கள் உயிரிழந்துள்ளார்கள்.

அமெரிக்காவின் கூற்றுப்படி 20,000 போரில் ஈடுபடாத சாதாரண மக்கள் இந்தப் போரில் உயிர் இழந்துள்ளார்கள். உக்ரைனில் போரின் விளைவாக பல முக்கிய நகரங்கள் தரைமட்டமாகியுள்ளன. ஏறத்தாழ ஒரு கோடியே 74 லட்சம் மக்கள் அகதிகளாக இடம் பெயர்ந்துள்ளதாக ஐ.நாமனித உரிமை ஆணையம் கூறுகிறது.

ரஷ்ய அதிபர் புடின் இந்தப் போரில் ரஷ்யா அணு ஆயுதங்களை உபயோகிக்காது என்று மற்ற நாடுகள் எண்ணக் கூடாது என பல முறை எச்சரித்துள்ளார். அத்தகைய ஆபத்தான சூழ்நிலை இருந்த போதிலும், ஐக்கிய நாடுகள் சபையும் அதற்கு செயலாக்கம் அளிக்கும் பாதுகாப்பு கவுன்சிலும் போரை முடிவுக்கு கொண்டு வர உருப்படியான முயற்சிகள் எதையும் இதுவரை எடுக்கவில்லை.

இதற்கு முக்கிய காரணம், 15 அங்கத்தினர் கொண்ட ஐ.நா. பாதுகாப்பு கவுன்சலின் ‘வீட்டோ’ உரிமை பெற்ற நிரந்திர அங்கத்தினர்களான அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகளின் செயல்பாடே காரணம். ஆகவே அவர்கள் இணக்கம் இருந்தால் தான் உக்ரைன் போரை முடிவுக் கொண்டு வரமுடியும். அதற்கான முயற்சிகள் எதுவும் பாதுகாப்பு சபையில் இதுவரை வெற்றி பெறவில்லை.

இந்தியாவும் பாகிஸ்தானும் கார்க்கில் போரில் பத்து நாட்கள் மோதிக் கொண்ட போதே, அது அணு ஆயுதப் போராக மாறும் ஆபத்து ஏற்படலாம் என்று ஐரோப்பிய, அமெரிக்க அரசுகள் கூக்குரலிட்டன. ஆனால் அதை விட பயங்கரமான அணு ஆயுதப் போர் மூளும் சூழ்நிலை உக்ரைனில் நிலவினாலும் அதை இந்த நாடுகள் ஏன் கண்டு கொள்ளவில்லை?

அதற்கு முக்கிய காரணம் தற்போது உலகில் நிலவும் பிரெட்டன்வுட் ஒழுங்கு முறையாகும். இரண்டாம் உலகப் போரின் இறுதி கட்டத்தில், அமெரிக்காவின் தலைமையில் மேற்கத்திய நாடுகள் சர்வதேச பொருளாதாரத்தை வழி நடத்த பிரெட்டன்வுட் ஒப்பந்தத்தை உருவாக்கினர். அந்த ஒப்பந்தத்தின் வாயிலாக உலகநாடுகள் போரைத் தவிர்த்து வாழ பல்வேறு ஒழுங்கு முறைகள் அமைக்கப்பட்டன. அவற்றின் விளைவாகவே அமெரிக்க டாலர் உலக பொருளாதரத்தின் அடிப்படை செலவாணியாக தற்போது கருதப்படுகிறது.

இந்த பிரெட்டன்வுட் ஒழுங்கு முறைதான் இன்றுவரை அமெரிக்கா உலகின் ஒரே வல்லரசாக ஆளுமை செய்ய உதவுகிறது. பிரெட்டன்வுட் ஒப்பந்தத்தில் பங்கு பெற அப்போதைய வல்லரசுகளில் ஒன்றான சோவியத்யூனியன் மறுத்து விட்டது. சோவியத் அரசுக்கும் அமெரிக்காவுக்கும் நடந்த பனிப் போருக்கு அதுவும் ஒரு காரணமாகும்.

அந்த பனிப்போர் காலத்தில், ஐரோப்பாவில் சோவியத் யூனியனின் அச்சுறுத்தலை தவிர்க்க, அமெரிக்கா மற்றும் 30 ஐரோப்பிய நாடுகள் அங்கம் வகிக்கும் நேட்டோ பாதுகாப்பு கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. நேட்டோ படைகள் அமெரிக்காவுடன் இணைந்து ஆப்கானிஸ்தான் மற்றும் ஈராக் போர்களில் பங்கு பெற்றன. நேட்டோ அமைப்பு 1991ல் சோவியத்யூனியன் சிதறுண்ட பிறகு, ஐரோப்பாவில் ஏற்பட்ட பூகோள மற்றும் அரசியல் மாற்றங்களை தனக்கு சாதகமாக உபயோகிக்க ஆரம்பித்தது. ரஷ்யாவால் மீண்டும் ஐரோப்பிய நாடுகளுக்கு அச்சுறுதல் ஏற்படலாம் என்று காரணம் காட்டி, அமெரிக்காவுடன் சேர்ந்து ரஷ்யாவின் எல்லை நாடுகளில் நேட்டோ தன்னை பலப்படுத்தி வருகிறது. இந்த முயற்சியின் முன்னணியில் ரஷ்யாவின் பங்காளி நாடான உக்ரைனும் ஒன்று. அதைக் கண்டு கலக்கம் கொண்ட ரஷ்யா நேட்டோவின் முயற்சிகளை உக்ரைனில் தவிர்ப்பது தனது படையெடுப்புக்கு ஒரு காரணம் என்று கூறிகிறது.



இத்தகைய சந்தேக சூழ்நிலையை தவிர்க்க நேட்டோ அமைப்பு இதுவரை எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை. அதற்கு மாறாக, நேட்டோ அமைப்பு அமெரிக்காவின் உந்துதலுடன் ரஷ்யாவை எதிர்த்து உக்ரைன் வெற்றி பெற பெருமளவில் பொன்னும், பொருளும், ஆயுதங்களும் அளித்து வருகின்றது.

கீல் இன்ஸ்டிடுயூ ட் என்ற அரசு சாரா அமைப்பு கடந்த ஆண்டு ஜனவரி 24 முதல் நவம்பர் 22 வரை மேற்கொண்ட கணிப்பின்படி, உக்ரைனுக்கு 46நாடுகள் ஒட்டு மொத்தமாக அளித்த உதவியின் மதிப்பு 109 பிலியன் யூரோ. அந்த உதவியில் அமெரிக்காவின் பங்கு 53 விழுக்காடு ஆகும். இந்த போர் தொடருவதற்கு, இந்த பொருளாதார மற்றும் ஆயுத உதவிகள் உக்ரைனுக்கு தரும் உந்துதல் மற்றொரு முக்கிய காரணமாகும்.

சீனாவுக்கும் ரஷ்யா இருந்த நெருங்கிய உறவு 1961ல் இருந்து விரிசல் காண ஆரம்பித்த போது அதை அமெரிக்க அதிபர் நிக்சன், அமெரிக்காவுக்கு சாதகமாக உபயோகிக்க ஆரம்பித்தார். அவருக்கு பின் வந்த அதிபர்களும் அமெரிக்க-சீன உறவை மேலும் வலுப்படுத்தினர். அமெரிக்கா மற்றும் அதன் நேச நாடுகள் சீனாவில் பெருமளவில் முதலீடு செய்ய, சீனாவில் தொழில் வளர்ச்சி உலக அளவில் பெறுகியது. அமெரிக்கா தனது சீன உறவை, தனது ஒரு முனை உலக ஆதிக்கத்துக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டது.

அமெரிக்க சீன உறவில் ஏற்பட்ட முன்னேற்றத்தை சீனாவும் தனது பொருளாதாரத்தையும் போர்படைகளின் திறனையும் விரிவுபடுத்த உபயோகித்துக் கொண்டது. சீனா தற்போது உலக பொருளாதாரத்தில் வலிமையான நாடுகள் பட்டியலில் இரண்டாம் இடத்தை வகிக்கிறது. அதற்கு ஏற்றார் போல் சீன ராணுவமும் உலகிலேயே வலிமை வாய்ந்ததாக கருதப்படுகிறது.


அமெரிக்காவின் தலைமையில் மேற்கத்திய நாடுகளின் பிரெட்டன்வுட் ஒழுங்குமுறைக்கு எதிரான கருத்து, வளர்ச்சி அதிகம் காணாத உலக நாடுகளில் தொடர்ந்து பல ஆண்டுகளாக பரவி வருகிறது. முக்கியமாக பன்னாட்டு வணிகம் உலக மயமாக்கப்பட்ட பிறகு அதைப் பயன்படுத்தி வளர்ச்சி பெற்ற ரஷ்யா, சீனா, இந்தியா, பிரேசில் மற்றும் தென் ஆப்ரிக்கா ஆகிய நாடுகள் உலக ஒழுங்குமுறை பாரபட்சமின்றி எல்லா நாடுகளும் பயன்படும் விதமாக மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்று கருதத் தொடங்கின. ரஷ்யா மீண்டும் வலிமை பெறத் தொடங்கி சீனாவுடனான தனது உறவை புதுப்பித்தது. இந்தியாவும் 1962 சீனப்போருக்குப் பின் சிதறுண்ட சீன உறவை புதுப்பிக்க ஆரம்பித்தது. ஆகவே, இந்த நான்கு நாடுகளும் உலகின் பிரெட்டன்வுட் ஒழுங்கு முறையை மாற்றி அமைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் பிரிக்ஸ் (பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, மற்றும் தென் ஆப்ரிக்கா ஆகிய நாடுகளின் ஆங்கில முதல் எழுத்து) என்ற அமைப்பை ஆரம்பித்து 2009 முதல் ஒருங்கிணைந்து செயல்படத் தொடங்கின. இந்த அமைப்பை அமெரிக்காவும் அதன் மேற்கத்திய பங்காளி நாடுகளும் சந்தேக கண்ணுடன் பார்க்க ஆரம்பித்தன.

2013-ம் ஆண்டு ஷி ஜின்பிங் சீன அதிபராக பதவி ஏற்ற பின்பு உலக ஆளுமை கனவுகள் சீனாவை ஆக்கிரமிக்க தொடங்கின. அதிபர் ஷி படிப்படியாக, சீன கம்யூனிஸ்ட் கட்சி அமைப்பிலும், சீன அரசமைப்பு மற்றும் கம்யூனிச அதிகாரத்தை நிலை நாட்ட உதவும் ராணுவத்தின் உள் அமைப்பிலும் தனது ஆதரவை பலப்படுத்திக் கொண்டார். அதன் பிறகு அவர் எடுத்த மனித உரிமை மீறல்கள் மற்றும் உலக வணிகத்தில் கையாண்ட முறைகளும் மேற்கத்திய நாடுகளிடையே சலசலப்பை ஏற்படுத்தின.


கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



ஹாங்காங், பல ஆண்டுகளாக சீனாவின் ஒரு பகுதி ஆனாலும், ஓரளவு தன்னிச்சையுடன் இயங்கி வந்தது. ஆனால் ஷி தனது ஆளுமையின் கீழ் அதை கொண்டு வர எடுத்த தடலடி முயற்சிகள் மேற்கத்திய நாடுகளிடையே சலசலப்பை எற்படுத்தின. மேலும், தென் சீன கடலில் ஷி சீனாவின் கடல் எல்லையை விரிவாக்கி அதில் உள்ள பல குட்டித் தீவுகளின் மீது தீவிரமாக உரிமை கொண்டாட ஆரம்பித்தார். சிலவற்றை சீனா ஆக்கிரமித்தது. அதனால் சீனாவுடனான உறவை தென் கிழக்கு (20ம் பக்கம் பார்க்க).

சிவமயம்

ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
“இணுவில் திருவூர்”
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். எதிர்ப்புகள் அகலும். பணவரத்து திருப்திகரமாக இருக்கும். பயணங்கள் சாதகமான பலன் தரலாம். குடும்பத்தில் வீண் பிரச்னை ஏற்பட்டு நீங்கும். வாழ்க்கை துணையின் செயல்கள் உங்களுக்கு அதிருப்தியை ஏற்படும். பிள்ளைகள் நீங்கள் சொல்வதை கேட்டு நடப்பது ஆறுதலை தரும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகளுக்கான தடைகள் அகலும்




ரிஷபராசி அன்பர்களே! மனதில் துணிச்சல் அதிகரிக்கும். எடுத்த காரியங்களை வெற்றியுடன் செய்து முடிப்பீர்கள். எங்கும் எல்லோரிடத்திலும் மதிப்பும், மரியாதையும் அதிகரிக்கும். அடுத்தவர்களுக்காக உதவிகள் செய்வதில் உற்சாகம் உண்டாகும். வழக்கு விவகாரங்கள் கட்டுக்குள் இருக்கும். குடும்பத்தில் சந்தோஷமும் மன நிம்மதியும் இருக்கும். உறவினர்கள், நண்பர்களின் ஆதரவும் கிடைக்கும். நிதானமாக பேசுவது நல்லது.





மிதுனராசி அன்பர்களே! எடுத்த காரியத்தை செய்து முடிக்க இருந்த தாமதம் நீங்கும். கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியும். குடும்பத்தில் இருப்பவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபடாமல் இருப்பது நல்லது. கணவன் மனைவிக்கிடையே மன மகிழ்ச்சி ஏற்பட அனுசரித்து செல்வது நல்லது. பிள்ளைகளின் கல்வியில் கவனம் செலுத்துவது நன்மையை தரும். வழக்கு விவகாரங்களில் ஈடுபடாமல் தவிர்ப்பது நல்லது.





கடகராசி அன்பர்களே! மனதில் இருந்த குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். சாமர்த்தியமாக செயல்பட்டு காரிய வெற்றி காண்பீர்கள். குடும்பத்தில் சந்தோஷம் உண்டாகும். குடும்பத்தில் இருப்பவர்களால் அதிகப்படி வருமானம் இருக்கும். கணவன், மனைவிக்கிடையே சுமூகமான உறவு காணப்படும். பிள்ளைகளின் எதிர்கால நலனுக்காக பாடுபடுவீர்கள். தாய், தந்தையரின் உடல் நிலையில் கவனம் தேவை.




சிம்மராசி அன்பர்களே! தைரியம் தன்னம்பிக்கை அதிகரிக்கும். பூமி வீடு மனையால் லாபம் ஏற்படும். சுபகாரியங்கள் நல்லபடியாக நடக்கும். அடுத்தவர்கள் மூலமாக நடக்க வேண்டிய காரியங்கள் நல்லபடியாக நடக்கும். மனதில் உற்சாகம் அதிகரிக்கும். குடும்பத்தில் இருந்து வந்த கருத்து வேற்றுமை நீங்கும். கணவன் மனைவி ஒருவரை ஒருவர் அனுசரித்து செல்வீர்கள்




கன்னிராசி அன்பர்களே! வீண் செலவுகள் குறையும். பண வரத்து அதிகரிக்கும். எதையும் எதிர்த்து நிற்பதை தவிர்த்து அனுசரித்து செல்வது முன்னேற்றத்திற்கு உதவும். அடுத்தவர்களின் நலனுக்காக உழைக்க வேண்டி இருக்கும். சொத்துக்களை வாங்கும் போதும், விற்கும்போதும் கவனமாக இருப்பது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களுடன் கோபப்படாமல் நிதானமாக பேசி அனுசரித்து செல்வது நல்லது.





துலாம்ராசி அன்பர்களே! மன திடம் அதிகரிக்கும். சுபச்செலவுகள் வந்து சேரும். அடுத்தவர்களுக்காக உதவி செய்வது மற்றும் அவர்களுக்காக பரிந்து பேசும் போது கவனம் தேவை. குடும்பாதிபதி சுக்கிரன் ராசியில் இருக்கிறார். குடும்பத்தில் இருப்பவர்களை அனுசரித்து செல்வது நல்லது. கணவன், மனைவிக்கிடையே சிறு பூசல்கள் ஏற்பட்டு நீங்கும். பிள்ளைகளிடம் நிதானமாக பேசுவது நல்லது. தொழில் ஸ்தானத்தை புதன் பார்ப்பதால் சிறு பிரச்னைகள் தோன்றி மறையும்.





விருச்சிகராசி அன்பர்களே! சுபச் செலவுகள் அதிகமாகும். வீண் பேச்சை குறைப்பது நன்மை தரும். அடுத்தவருக்கு ஜாமீன் கொடுப்பதை தவிர்ப்பது நல்லது. குடும்பத்தினரது செய்கைகள் உங்களது கோபத்தை தூண்டும்படியாக இருக்கலாம். நிதானத்தை கடைபிடிப்பது வீண் பிரச்னை ஏற்படாமல் தடுக்கும். வாழ்க்கை துணை ஒருவரை ஒருவர் அனுசரித்து செல்வது நன்மை தரும். எதைப் பற்றியும் விவாதிப்பதை தவிர்ப்பது நல்லது.







தனுசுராசி அன்பர்களே! கடும் முயற்சிக்கு பிறகு எந்த ஒரு காரியத்திலும் லாபம் உண்டாகும். வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணம் மூலம் நன்மை உண்டாகும். தொலை தூரத்தில் இருந்து வரும் தகவல்கள் நல்ல தகவல்களாக வந்து சேரும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். குடும்பத்தில் அவ்வப்போது ஏதாவது சிறு மனஸ்தாபங்கள் ஏற்பட்டு மறையும். கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் உண்டாகும்.




மகரராசி அன்பர்களே! வாக்கு வன்மையால் நன்மை உண்டாகும். செய்யும் காரியத்தை சிறப்பாகவும், நேர்மையாகவும் செய்து முடித்து மற்றவர்களிடம் பாராட்டு பெறுவீர்கள். சிலருக்கு உங்கள் செல்வாக்கை கண்டு பொறாமை உண்டாகலாம். எதிர்ப்புகள் விலகும். காரிய தடைகள் நீங்கும். வீடு மனை சம்பந்தப்பட்ட விஷயங்களில் இருந்து வந்த சுணக்க நிலை மாறும். தடைபட்டிருந்த வீடுப் பணிகள் நிறைவடையும்.




கும்பராசி அன்பர்களே! காரியங்களில் இருந்த சுணக்க நிலை மாறும். முயற்சிகளில் நல்ல பலன் காண்பீர்கள். சகோதரர்கள் வழியில் இருந்த பிரச்னைகள் நீங்கும். குடும்பத்தினரின் செயல்கள் நன்மை அளிக்கக்கூடிய வகையில் இருக்கும். எந்த விஷயத்தையும் கணவன், மனைவிக்கிடையே திட்டமிட்டு செய்வது நன்மை தரும். குழந்தைகள் உங்கள் சொற்படி கேட்டு நடப்பது மனஅமைதியை தரும்.




மீனராசி அன்பர்களே! நீங்கள் செய்யும் காரியங்கள் வெற்றியை தரும். சாதுர்யமாக பேசி எதிலும் வெற்றி காண்பீர்கள். அனுபவப்பூர்வமான அறிவுத்திறன் அதிகரிக்கும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். குடும்பத்தில் மனம் மகிழும்படியான நிகழ்ச்சி நடக்கும். வீடு, வாகனம் வாங்கும் எண்ணம் அதிகரிக்கும். கணவன் மனைவிக்கிடையே ஒருவரை ஒருவர் அனுசரித்து செல்வதன் மூலம் மகிழ்ச்சி உண்டாகும். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

# ஒற்றையாட்சி அரசில் அதிகபட்ச அதிகாரப் பகிர்வு!

(9ம் பக்கத் தொடர்ச்சி) கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். இந்த முறைமை மாற்றத்துக்கு அவசியமான பல்வேறு சட்ட ஏற்பாடுகளை நாம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளோம். அது போன்றே வடக்கு, கிழக்கு மக்கள் எதிர் நோக்கும் விசேடமான பிரச்சினைகள் தொடர்பில் உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அதற்கான அமைச்சரவை உபகுழுவை ஏற்கனவே நியமித்துள்ளோம்.

அங்கு எடுக்கப்படும் தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தப்படும் காலப்பகுதி, அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் அறிவிக்கப்படும். அவர்களது கருத்துகளின்படி, அந்தப் பணிகள் முன்னெடுத்துச் செல்லப்படும். காணிகளை மீளக் கையளித்தல், கைதிகளை விடுதலை செய்தல் உள்ளிட்ட செயற்பாடுகளுக்கு நாம் முன்னுரிமை அளித்துள்ளோம்.

அது போன்றே ஒற்றையாட்சி அரசில், அதிகபட்ச அதிகாரப் பகிர்வுக்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். எனினும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இந்த நாட்டைப் பிளவுபடுத்துவதற்கு நாம் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம். நான் முயற்சிப்பது மேலோட்டமாக தெரிகின்ற நோய்க்கு வலி நிவாரணிகளை வழங்க அல்ல. நோயின் மூலக் காரணியை நிவர்த்தி செய்யவே முயற்சிக்கிறோம். அது சிரமமானது. மிகவும் கடினமானது. எனினும் நாம் செல்ல வேண்டிய ஒரே வழி அதுதான்.

நான் ஜனாதிபதியாக பதவியேற்றதிலிருந்து எனக்கு எடுக்க நேரிட்ட பல தீர்மானங்கள் பிரசித்தமான தீர்மானங்கள் அல்ல என்பதை நான் அறிவேன். ஆனால் அந்தத் தீர்மானங்களால், இன்று இந்த நாட்டின் எந்தக் குடிமகனும் எரிபொருள் வரிசைகளில் நீரின்றி இறக்கவில்லை. சமையல் எரிவாயு இல்லாமல் பட்டினியில் இல்லை. உரம் இல்லாமல் சாபம் இடவில்லை. எனவே, அராஜக அரசியல் சக்திகள் எத்தகைய தடைகளை ஏற்படுத்தினாலும், இந்த நாட்டை நேசிக்கும் பெரும்பான்மையான மக்களுடன் இணைந்து இந்தப் புதிய சீர்திருத்தத் திட்டத்தை முன்னெடுப்பேன்.

சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் மனதில் கொண்டு ஒற்றுமையுடன் திட்டமிட்டு முன்னேறினால் 2048 ஆம் ஆண்டளவில் அபிவிருத்தியடைந்த நாடாக மாறலாம். உலகில் வேறு எந்த நாட்டிடமும் கையேந்தாத அபிவிருத்தி அடைந்த நாடாக மாறலாம். உண்மையான சுதந்திரத்தையும் அடைய முடியும்.

நமது பிள்ளைகள் உலகுடன் போட்டி போடும் வகையில் புதிய நாட்டை உருவாக்குவது நம் அனைவரதும் பொறுப்பாகும். எனவே, இந்த இக்கட்டான காலகட்டத்தை வெற்றி கொள்ள அனைத்துத் தரப்பினரையும் ஒன்றிணையுமாறு நான் அனைவரிடமும் கேட்டுக்கொள்கிறேன். நாம் ஒன்றுபடுவோம்! கைகோர்ப்போம்! அவ்வாறு கைகோர்த்து எதிர்வரும் 25 ஆண்டுகளுக்காக நாம் தயாரித்துள்ள திட்டத் திற்கமைய ஒன்றுபட்ட பயணத்தை மேற்கொள்வோம்.

அனைத்து தரப்பினரின் கருத்துக்களுக்கும் ஏற்ப அந்தத் திட்டத்தை மேம்படுத்துவோம். மேலும் வலுப்படுத்துவோம். அவற்றை மேலும் முறைமைப்படுத்தி நெறிப்படுத்துவோம். இந்த முயற்சியில் இணைந்து கொள்ள வேண்டியது. இலங்கை வாழ் மக்களான நாம் மட்டும் அல்ல உலகின் பல்வேறு நாடுகளில் வாழும் இலங்கையர்களும் இந்தப் பயணத்திற்குத் தோள்கொடுக்க வேண்டும். ஒன்றிணைய வேண்டும். இந்த இலக்குகளை அடைய அனைவரும் முடிந்தவரை பங்களிக்க வேண்டும். எனவே நாம் அனைவரும் ஒன்றாக முயற்சி எடுப்போம். ஒற்றிணைந்து அர்ப்பணிப்போம்.

ஒரு தாயின் பிள்ளைகள் போல் ஒன்று படுவோம். நமது நாடு சுதந்திரம் அடைந்து 100 ஆண்டுகள் நிறைவடையும் 2048 ஆம் ஆண்டின்போது எமது நாட்டை உலகின் தலைசிறந்த நாடாக மாற்றுவோம். உங்கள் அனைவருக்கும் நன்றி. இவ்வாறு ஜனாதிபதியின் உரையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சுதந்திர இலங்கையில் சாத்தானிடம்...

(19ம் பக்கத் தொடர்ச்சி) தவிர்க்க முடியாமல் இப்படித் தன்னைக் கொடுத்துத் தான் நாட்டை மக்களை மீட்க முடியும். அடுத்து வரும் தலைமுறைகள் இதிலிருந்து மீள்வதற்காகக் கடினமாகப் போராட வேண்டியிருக்கும். சில வேளை இதுவே ஒரு பழக்கமாகி, வழக்கமாகி மேலும் தொடரவும் கூடும். அதாவது இந்தச் சீரழிவு மேலும் தொடரவும் கூடும். இலங்கையின் பண்பாடு இது என்பதாகியே விடவும் கூடும். தங்கத் தீவின் நிலவரம் இது தான்.

இலங்கைத்தீவை வேறு விதமாக மீட்பதற்கு யாருமில்லை. உள்நாட்டிலும் யாருமில்லை. வெளியிலும் யாருமில்லை. அதாவது அதன் பிள்ளைகளுமில்லை. அதன் நண்பர்களுமில்லை.

வீழ்ந்து கிடக்கும் நாட்டை மேலும் கடன் பொறிக்குள் தள்ளவே அத்தனை சக்திகளும் முயற்சிக்கின்றன. வறுமைக்குள்ளான மக்களை வட்டிக் கம்பனிகள் வளைத்துப் பிடிப்பதைப் போலவே இன்றைய நிலை உள்ளது.

மீட்பர்களில்லாத தேசமாகி விட்டது இலங்கை. யாருடைய சொல்வழியும் கேளாத பிள்ளைகளை மனிதர்களை யாரும் பொருட்படுத்தாத ஒரு நிலை. ஒரு கட்டம் வருமல்லவா! அதைப் போன்ற நிலை கட்டம் தான் இது.

இதிலிருந்து மீள்வதாக இருந்தால் அது நம் அனைவருடைய கூட்டுப் பொறுப்பாகும். தனியே அரசாங்கத்தின் பொறுப்பென்று சொல்லி விட்டு வாழா திருக்க முடியாது. அப்பிடிச் சொன்னாலும் அரசாங்கத்தினால் என்ன தான் செய்து விட முடியும்?

# சர்ச்சைக்குரிய 13வது திருத்தம் என்பது மாகாணசபை முறைமைக்கு அப்பால்...

(7ம் பக்கத் தொடர்ச்சி) இதுவரை எட்டுத் திருத்தங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஆக, மொத்தம் 21 திருத்தங்கள் இலங்கையின் அரசியலமைப்பில் இடம் பெற்றுள்ளன. இவ்வாறு சட்டரீதியாக அரசியலமைப்பில் இடம் பெற்றுள்ள இத்திருத்தம் 1987ன் இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் வழியாக ஏற்படுத்தப்பட்டது. இரு நாட்டுத் தலைவர்களும் ஒப்பந்தத்தில் கைச் சாத்திட்ட பின்னர், இணைப்பு ஆவணம் என்று சொல்கின்ற ஒன்றை பரிமாறிக் கொண்டனர். இலங்கையின் பாதுகாப்பையும், வெளிநாட்டு சக்திகளிலிருந்து இலங்கையை காப்பாற்று வதையும் இந்தியா ஏற்றுக் கொண்டுள்ளது என்பது இந்த ஆவணத்தின் மூல வாசகம்.

13ம் திருத்தத்தையும் மாகாண சபை முறைமை யையும் மறுப்பவர்கள் நாடாளுமன்றத்தில் புதிதாக 22ம்இலக்க திருத்தத்தை கொண்டு வந்து நிறைவேற்றி 13ஐ நீக்கலாம் என்ற ரணிலின் ஆலோசனையின்படி செயற்பட விரும்புபவர்கள், இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் இணைப்பு ஆவணத்தில் கூறப்பட்டிருக்கும் இலங்கையின் எதிர்காலப் பாதுகாப்பை ஒரு தடவை சிந்திப்பார்களா? நன்றி:- யாழ்.ஈழநாடு 05 பெப் 2023

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.


## *At Need Funeral Arrangements*
We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்

வீடு
வாங்க...
விற்க...

Ravi. Paramu
*Broker*
Cell: 416-262-4176
Bus: 416-298-3200

HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6





RANJANI THIRUKESWARAN LAW OFFICE





- Real Estate: வீடு, காணி கொள்வனவு விற்பனைச் சட்டம்
- Business Law: வியாபார, வர்த்தகச் சட்டம்
- Immigration Law: குடிவரவு, அகதிச் சட்டம்
- Family Law: குடும்ப வழக்குகள்
- Last Wills: உயில் தயாரித்தல்
- Power of Attorney: தத்துவப் பத்திரம் தயாரித்தல்

2855 Markham Road Suite 209
Toronto -ON- M1X 0C3
(Markham / McNicoll )
416 291 2242

Ranjani Thirukeswaran
(Barrister & Solicitor)





இந்த இடத்தில்
விளம்பரம் செய்ய
அழையுங்கள் 416 841 9600





OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*







RENOWNED FOR
AUTHENTIC KANCHIPURAM
SILK SAREES
$599* FLAT RATE
Aalayaa
2 VILLA ADA DRIVE,
MARKHAM, ON L6B 1N7
1.855.575.0500



உங்களிடம் ..
திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய கடன் இருக்கிறதா?
வணிக உரிமையாளர்களுக்கும்
சுயதொழில் செய்வோருக்கும்
மகிழ்ச்சியான செய்தி!
உங்கள் வருமான மதிப்பீடுகள் இல்லாமல்
மாதந்தோறும் $5000 வரை அங்கவீனக்
காப்பீட்டுத் தொகையைப் பெற முடியும்.





விபரங்களுக்கு அழையுங்கள்
அஜித் சபாரட்ணம்
647-401-5800
416-439-2800
10 Thornmount Dr, Scarborough, ON M1B 3J4.